Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஏப்ரல் 04 - 10, 2013


# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1008



## நடைமுறைக்கு உதவாத ஜெயாவின் தீர்மானங்கள்!



## முஸ்லிம் தலைமைகளுக்கு சவால்விடும் தாக்குதல்கள்!



## இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்?

## சிவாலயத்தின் கழுத்தும் நந்தியும்

சிவனது வாகனமாகவும் வாயிற் காப்பாளனாகவும் உள்ள நந்தி அவரது கழுத்துப் பகுதியாகக் கருதப்படு கின்றது. சிவாலயத்தில் சிவன் சந்நிதியை தலையாக எண்ணிக்கொண்டால் கழுத்துப் பகுதியில் நந்தி இருப்பது தெளிவாகும்.

தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது, கயிறாகப் பயன்பட்ட வாசுகி எனும் பாம்பு களைப்பில் தன்னை அறியாமல் விசத்தைக் கக்கியது. தேவலோகத்தைக் காக்க சிவபெருமான் அவ்விஷத்தை விழுங்க கழுத்தைப் பிடிக்க பார்வதிதேவியார் விஷம் உடலில் இறங்காமல் நிறுத்தினார்.

கழுத்தில் குமிழ் போன்று விஷம் உள்ளது.

இதுவே ஆண்களுக்குத் தொண்டையில் இருக்கும் குரல் நாணாக இருக்கின்றது.

அறிவியல்ரீதியாக தொண்டையில் உள் இருக்கும் தைரோயிட், இரு கொம்புகளுடன் உள்ள நந்தி போல இருக்கும்.

இதன்காரணமாக சிவன்கோயிலின் கழுத்துப் பகுதி யில் நந்திக்கு சிலை வைக்கப்பட்டுள்ளது.

ஆன்மீகம்

## எதற்காக ஜெபம் செய்ய வேண்டும்?

கடவுளின் அருகில் நாம் நெருங்கிவர ஜெபம் நமக்குத் துணைசெய்கிறது. கடவுளிடம் நாம் பெற்ற நன்மைகளுக்கு நன்றிசொல்லும் போதும், அவர் புகழ் பாடும்போதும், நமது பாவங்களுக்காக மனம் வருந்தும்போதும், நமது பலகீனத்தில் அவரது உதவியை நாடும் போதும், அவர் சித்தத்தை நிறைவேற்றும் போதும், கடவுள் நம்மோடு பேசுகிறார். கடவுள் நமது சிந்தனைகளையும் எண்ணங்களையும் மாற்றி நாம் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அதைச் செய்யத் தூண்டுகிறார்.

நாம் ஜெபம் செய்வதன் மூலம் கடவுளின் சித்தத்தை நிறைவேற்ற அதிக வாய்ப்பை நமக்குக் கொடுக்கின்றார். இதன் மூலம் நாம் கடவுளில் இணைந்து வாழும் பேற்றைப் பெறுகிறோம். முத்திப்பேறு பெற்ற அன்னைத் தெராசாவும் மற்ற புனிதர்களும் இப்பேற்றைப் பெற்றவர்களே.

இயேசுவிடம் ஜெபம் செய்யும் போது இறைத் தந்தையிடமும் நாம் ஜெபம் செய்கிறோம். நாம் ஜெபம் செய்யும் வார்த்தைகளையும் கடந்து கடவுள் நம் உள்ளத்தையும் எண்ணங்களையும் அறியக்கூடியவர்.

புனிதர்கள் கடவுள் அல்ல. அவர்கள் கடவுளின் விருப்பத்தின்படி இவ்வுலகில் வாழ்ந்த மனிதர்கள். தங்களின் தூய வாழ்வால் விண்ணகத்தை சுதந்தரித்துக் கொண்டவர்கள்.

அவர்கள் இறைவனின் அருகில் அமர்ந்திருக்கிறார்கள், நமக்காக கடவுளிடம் பரிந்து பேசுகிறார்கள், நாம் செய்யும் வேண்டுதல்களை கடவுளிடம் மன்றாடி நமக்குப் பெற்றுத் தருகிறார்கள் என்பதே நமது விசுவாசம்.

## நிரந்தர மாளிகை

ஒருமுறை ஜைனப் பின்த் அதபா என்னும் பெண்மணி அன்னை பாத்திமா (ரழி) அவர்களைப் பார்க்க வந்தார்கள். அப்போது அன்னை பாத்திமாயின் ஏழ்மை நிலைகண்டு பெரிதும் ஆச்சரியமுற்ற அந்தப் பெண்மணி பாத்திமாவே! உங்கள் வீடு மாளிகை போல் அல்லவா இருக்க வேண்டும். ஆனால் இங்கு சில பழைய பாய்களைத் தவிர வேறு எதனை யும் காணவில்லையே என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட அன்னை பாத்திமா (ரழி) அவர்கள் மிகவும் அமைதியாக சோதரியே! சிறிது காலம் தங்கிச் செல்லும் ஒரு வீட்டைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும் என்றும் தங்கிருக்கப் போகும் அழியாத இல்லம் இருக்கிறதே அதைப்பற்றி அல்லவா நாம் அக்கறை கொள்ளவேண்டும்.

நிரந்தரமற்ற இந்த் வீடு மாளிகையாக இருக்க வேண்டும் என நான் விரும்பவில்லை. நிரந்தரமான மறு உலக விடு எனக்கு மாளிகையாக இருக்கவேண்டும் என்றே ஆசைப்படுகிறேன். அதற்காகவே என்னை நான் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறேன். இதுவே எனக்கு அமையப்போகும் நிரந்தர மாளிகை மாளிகை.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல 1005



### பாவி நீ

பாராட்டுக்குரியது

"வெள்ளையடித்த வள்ளல் மனதை
கொள்ளையடித்த கள்ளி நீ
இது இருபது வயதில்
எடுப்பாய்க் கேட்டேன்
என்னை மறந்து...
"வெள்ளை உடுத்து
விளையாட்டுப் பிள்ளையாக்கி
வேட்டி கட்டி வேடிக்கை பார்க்கும்
பாவி நீ"
இது அறுபது வயதில்
அலட்டிக் கொள்கிறேன்
அவளை நொந்து.

சேது.ராஜ்குமார்.
திருமலை.

### அச்சம்...!

இளமையில் மலர்களை
அவள் கேட்காமலேயே
அவன் கொடுத்தான்
முதுமையில் அவன் கேட்டும்
அவள் கொடுக்க மறுப்பது
இளமை திரும்பிவிடும்
என்ற அச்சத்தாலோ.

அ.சந்தியாகோ.
கண்டி.




## கவிதைப் போட்டி இல 1008



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.04.2013

கவிதைப் போட்டி இல. 1008 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### மனதாற(ர) ஏற்றுக்கொள்!

காதல் களத்தில் குதித்தேன்
காவியம் அன்று பதித்தேன்
கை கூடவில்லை என்று
காதுமுதல் கன்னம் வரை
கறுப்புத்தாடியும் வளர்த்தேன்
வளர்ந்த தாடியும்
வெளுறிப் போனாலும்
வளர்த்த செடியாய் காதல்
இன்றும் என் மனதில்
ஆறிலிருந்து அறுபது வரை
அவஸ்தைப் பட்டது போதும்
மன்றாடிக் கேட்கின்றேன்
மனதார(ற) ஏற்றுக்கொள்.

R.காவேரி, தோப்பூர்.

### புதுமுகப் பொழிவில் புதுமலர்

புதுமுகப் பொழிவுடன்
புதுமலர் கொண்டு
நீ வரும் பாதையில் - உன்
முன்நிலை வந்து மன்றாடி நிற்பது எதற்கு?
அன்றைய ஞாபகம் இன்றுவர
பூக்கொத்து கேட்டு நிற்கிறாரா - இல்லை
பெற்ற தாயிடம் மன்றாடி நிற்கிறார்.

சு.ஜெயக்குமாரி.
மண்கும்பான்.

### புதுவாழ்வு

என்னை விட்டு
எங்கே போகிறாய்
மன்னித்துவிடு
மதுவை தொடமாட்டேன்
கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்
புதுவாழ்வு வாழ்வோம்
புறப்படு என்னோடு...

எம்.சி.கலீல், கல்முனை—05.



### காதல் நினைவு மலர்

உள்ளத்துணர்வோடு
ஒன்றிவிட்ட உன்தன் நினைவுகள்
மெல்லவே ஓடி ஒழிந்து
உள்ளே நின்று அலைக்கழிக்கும்
தள்ளாத வயதிலும் தள்ளவொண்ணா
உன்தன் நினைவுகளின் கலக்கம்
கள்ளமில்லாத உள்ளத்து நினைவுகளில்
கனவுகளில் உன் காதல் நினைவுகளாமோ!

மண்டைதீவு - மகிழ்நன்

### காதல்

வயதானாலும்
வயதாகாத
வாழ்வின்
வரம்பு!

எஸ்.பி.பாலமுருகன்.
பதுளை

# உங்கள் பக்கம்

## வீடுகள் ஒளிபெற எப்போது?

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இலவச இணைப்பு வழங்கப்பட்டு வருகின்ற விடயம் பாராட்டுதற்குரி யது.

இருப்பினும் மின்சார சபை அதிகாரிகள், ஊழியர்கள் எவ்வளவு தூரம் கடமையுணர்வுடன் பொறுப்பாக செயற்படுகின்றனர் என்பது கேள்விக்குரியதே.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் இளவாலை வடக்கு J/221 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மணலடைப்பு அண்ணமகேஸ்வரர் ஆலயத்தை அண்டிய பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் வீடுகளுக்கு இன்னும் மின் இணைப்பு ஏற்படுத்தப்படவில்லை.

கடந்த ஆண்டு ஆரம்பப் பகுதியில் மின் இணைப்பிற்காக விண்ணப்பித்திருந்த போதிலும் இவ்வருடம் மாசி மாத ஆரம்பத்திலேயே மின் கம்பங்கள் நடப்பட்டன.

குறித்த பகுதியில் அனைத்து வீடுகளிலும் உள்ள இணைப்பு பூர்த்தியாகிய நிலையிலும் மின் கம்பங்கள் வெறுமனே நடப்பட் டுள்ளனவே அன்றி மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே, வெகுவிரைவில் மின் இணைப்பை வழங்கி குறித்த பகுதிக்கு ஒளியூட்டுமாறு மின்சார சபை அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மணலடைப்பு மக்கள் சார்பில்,
வசந்தமகள் சுவா


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


# வாசகர் சாலை

## வாசம் தரும் முரசு

அரசியல் விடயங்களை அலசி ஆராய்ந்து அதன் உண்மை விபரங்களை உடனுக்குடன் உலகறிய வைக்கும் தினமுரசு கடந்த 1005 ஆவது முரசின் முன்பக்க தலைப்புக்களாக அமெரிக்காவின் தீர்மானம் மாகாணங்களுக்கு அதிகாரம் வடகொரியாவுக்குத் தண்டனை வல்லரசுகளின் ஆவேசம்! யுத்தம் தொடருமா? என்ற மகுட்ங்களில் வியப்பும், திகைப்பும் ஊட்டி அதன் தலைப்புத் தகவல்களின் உள்ளடக்கத்தில் உள்நாட்டு - வெளிநாட்டுச் செய்திகளை உற்று நோக்க வைத்து, உண்மைகளை உணர்த்தியது.

எம்.சி.கலீல், கல்முனை-05

## நினைத்தாலே இனிக்கும்

என் இனிய முரசுக்கு!
உன்னிடத்தில் என்னை நான்
எப்போதோ கொடுத்துவிட்டேன்
உன் இதழ் தாங்கிவரும் அனைத்து
அம்சங்களும் தேன் சொட்ட வைக்கின்றது
தேன்கிண்ணம், கவிதைப்போட்டி
என்பவை நினைக்கையிலே
இனிக்கிறது.

எஸ்.மாலி, மாத்தறை.

## உன் பணி வளர்க!

பண்புமிக்க முரசே! உனை பாராட் டாத நாளே கிடையாது. வாழ்க! உன் பணி வளர்க! உன் வெளிப்பாடுகள். பூலான், வலிகளின் சன்மானம். நிலமெல்லாம் இரத்தம் என்பவை பிரமாதம். அரசியல் அலசல் முதல் அமிழ்த்தப்பட்ட அனைத்தையும் சூட்டோடு பரிமாறும் உனக்கு வாழ்த்துக்கள்.

ஆர்.ஷில்பா, கண்டி.

## தமிழுக்கும் தமிழர்க்கும்

பெருமைசேர்ந்த முரசே! நீ என் கையில் தவழ்வதில் எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி. நீதாங்கி வரும் அனைத்து விடயங்களும் சிறப்பானவை. இது போன்று நீ மென்மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

சி.ராகவன்,
மருதங்கேணி.

## எதிர்பார்ப்பு!

பல வர்ணங்களில் களை கட்டி
மகிழ்வூட்டும் எங்கள் முரசின்
அண்மைக்காலமான வண்ணப்
பக்கங்கள் மின்னலடிக்க வைக்கின்றது.
வித்தியாசமான சிந்தனைகள்
உயிரோட்டமுள்ள கற்பனைகள்
தினமுரசின் பக்கங்களுக்கு
உயிரூட்டிக்கொண்டிருப்பது
மகிழ்ச்சியளிக்கின்றது. தொடர்ந்தும்
மேலும் இதுபோன்ற பக்கங்களை
எதிர்பார்க்கின்றேன்.

து.சாலினி, பலாலிகொடை

## கூட்டமைப்புக்குள் பிளவு

# மூடிமறைக்க பகீரதப் பிரயத்தனம்





அண்மைக்காலமாக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் அதிகரித்துவருவதாகவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறக்கூடும் என்று எதிர பார்க்கப்படுகின்ற வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக கூட்டமைப்பு பிளவுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருவதாகவும் கூட்டமையில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் தமிழரசுக கட்சியைப் புறமொதுக்கி விட்டு தமக்கிடையே தேர்தல் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயலுவதாகவும் ஆங்கில நாளிதழ் ஒன்றை மேற்கோள்காட்டி ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில் குறித்த செய்தியை மறுத்திருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பு மீதான தவறான அபிப்பிராயங்களை மேற்கொள்ளும் பொருட்டு குறித்த செய்தி திட்டமிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதாகவும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் அனைத்தும் கருத்து ஒற்றுமையுடன் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஈ.பி.ஆர்.எல்.எவ கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் பேச்சாளர் என்றும் கூறிக்கொள்கின்ற சுரேஷ் பிரேமச்சந்திரன் இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் தமிழரசுக் கட்சி தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டுவருவதாகவும், வெளிநாட்டுக் கிளைகளைத் திறந்து நிதிசேகரிப்பில் ஈடுபடுவதாகக் குற்றம்சாட்டியுள்ளதோடு கூட்டமைபபில் அங்கம்வகிக்கின்ற ஏனைய கடசிகளை ஓரங்கட்டும் விதமாகச் செயற்படுவதாகவும் குற்றம்சாட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.போதனா வைத்தியசாலை செயற்பாடுகள் தொடர்பில்

### அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

நவீன வசதிகளைக் கொண்டமையப் பெற்றுள்ள வைத்தியசாலையினூடாக பொதுமக்கள் உச்சசேவையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் துறைசார்ந்தவர்கள் சேவையாற்ற வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், வைத்தியசாலையின் ஊடாக சேவைகளை விரிவாக்கம் செய்யும் நோக்கில் ஜப்பான் அரசின் நிதியுதவியின் கீழ் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடியதாக புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறாக நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டமைந்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ் வைத்தியசாலையின் ஊடாக பொதுமக்கள் தமக்கான சேவைகளை விரைவாகவும், மனநிறைவாகவும் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்தவகையில், பொதுமக்களுக்கான சேவைகளை கருத்தில் கொண்டு இங்கு கடமைபுரியும் மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த அனைவரும் கடமையுணர்வுடனும், அர்ப்பணிப்புடனும், சேவை மனப்பான்மையுடனும் பணிபுரிய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே குழந்தைகள் பிரசவித்த தாய்மாரினதும், குழந்தைகளினதும் இறப்பு வீதம் அண்மைய காலங்களில் அதிகரித்துள்ளமை குறித்து அவதானம் செலுத்திய அமைச்சர் அவர்கள், இதுவிடயத்தில் வைத்தியசாலை சமூகம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்திய அதேவேளை, ஏனைய பல விடயங்கள் தொடர்பிலும் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.









## அரசியலில்... முப்பெரும் தேவியர்

தேசிய அரசியல் களத்தில் முக்கிய மூன்று பெண் பிரபலங்களை இறக்குவதற்கான பேச்சுகள் திரைமறைவில் இடம்பெற்றுவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா ஆகிய மூவரையுமே கூட்டாகக் களமிறக்குவதற்கான ஆரம்பகட்டப் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன. இனிவரும் காலப்பகுதியில் நடைபெறவுள்ள தேர்தல்களைக் கருத்திற் கொண்டே எதிர்க்கட்சிகளின் முக்கிய புள்ளிகள் சிலர் இவர்களுடன் கலந்துரையாடி வருகின்றனர் எனவும் தெரியவருகின்றது. எது எப்படியிருந்தபோதிலும், அரசின் செயற்பாடுகளால் அதிருப்தியடைந்துள்ள அந்த மூவரும் அரசியல் களத்தில் நிச்சயம் குதிப்பர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தாலும், இது குறித்து உத்தியோகபூர்வமாக இன்னும் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

அரசியலுக்கு வரும் முன்னோடியாகவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும், முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணயும் சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்துக்கு இணைந்து வந்தனர் என்றும் அரசியல் களத்தில் பேசப்படுகின்றது.

சந்திரிகா அம்மையாருக்கு அரசியல் களத்தில் முழு அனுபவம் இருந்தாலும், ஷிராணிக்கும் அனோமா பொன்சேகாவுக்கும் அரசியல் களம் புதிது என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் தளபதிக்கு கிடைத்தது தீப்பந்தம்

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் கட்சி சட்ட ரீதியானதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என தேர்தல் திணைக்களம் தெரிவித்தது. சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயக கட்சியே தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதையடுத்து, கட்சிக்கான சின்னமாக தீப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் சிபாரிசுக்கு அமையவே முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் கட்சி அங்கீகரிக்கப்பட்டுள்ளது என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார்.

## மின் கட்டணங்களின் வட்டிவீதம் குறைப்பு

தாமதமாக செலுத்தப்படும் மின் கட்டணங்கள் மீது இலங்கை மின்சார சபையால் 2 வீதம் வட்டியாக அறிவிடப்பட்டுவருகிறது. இந்த நிலையில் நடைமுறையிலுள்ள சந்தை வட்டி விகிதத்துடன் அறவிடப்படும் வட்டி வீதத்தினை ஒப்பீடு செய்து சந்தை வட்டிவீதத்துக்கு ஒப்பான வட்டி வீதத்தை அறவிடத் தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, தாமத மின் கட்டணத்துக்கான வட்டி வீதத்தை 1.24 வீதமாகக் குறைப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முடிவு எடுத்துள்ளது. அத்துடன், வீட்டுத்துறை பாவனையாளருக்கு 30 நாட்களும், கைத்தொழில், ஹோட்டல் மற்றும் பொது நோக்கு பாவனையாளருக்கு 15 நாட்களும் அவர்களின் மின் பட்டியலைச் செலுத்துவதற்குக் கால எல்லை வழங்கப்பட்டுள்ளது.

இக்காலத்தினுள் கட்டணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மட்டுமே இலங்கை மின்சார சபை நிலுவை மீதான வட்டியினை அறவிட முடியும் என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## திருக்கோவில் சந்தையை பூர்த்தி செய்ய மக்கள் கோரிக்கை

திருக்கோவில் பிரதேச மத்திய சந்தை வளாகத்தில் இரண்டு வருடங்களாகியும் பூர்த்தி செய்யப்படாமலுள்ள கடைத்தொகுதிக் கட்டிடத்தினை விரைவில் பூர்த்தி செய்து தருமாறு அங்குள்ள வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேற்படி சந்தையில் போதுமான கடைத் தொகுதிகள் இல்லாமையினால் இங்குள்ள வியாபாரிகளும் பொதுமக்களும் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சந்தை வளாகத்தில் கடைத் தொகுதிகளை நிரமாணிக்கும் பொருட்டு கட்டடமொன்றை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும், குறித்த கட்டடம் பூர்த்திசெய்யப்படாமல் அதன் நிர்மாண வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டன. இந்த கட்டடத்தினை அமைப்பதற்காக அங்கிருந்த பல கடைகள் உடைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் மேற்படி கடைத் தொகுதிக் கட்டடமானது இன்று வரை பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால், இங்குள்ள வியாபாரிகளில் அதிகமானோர் வெட்டவெளியில் இருந்தவாறே தமது வியாபாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சந்தைக் கட்டட நிர்மாணத்துக்கான நிதியொதுக்கீடு 50 இலட்சம் ரூபாயாகும். குறித்த கட்டட நிர்மாணப் பணி தொடர்பில் இங்கு அமைக்கப்பட்டுள்ள பதாகையில், நிர்மாணப் பணிக்கான ஒப்பந்த வேலைக்காலம் குறிப்பிடப்படாமல் உள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். எவ்வாறாயினும், மேற்படி சந்தைக் கட்டடத்தினை விரைவில் நிர்மாணித்துத் தருமாறு திருக்கோவில் மத்திய சந்தை வியாபாரிகள் கோரிக்கைவிடுக்கின்றனர்.



## செவ்வாய்க்கு செல்வதே சுனிதாவின் இலட்சியம்!



195 நாட்கள் விண்வெளியில் பயணம் செய்த பெண் என்ற சாதனையை ஏற்படுத்தியுள்ள சுனிதா, இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், டெல்லி தேசிய அறிவியல் மையத்தில் மாணவர்களுடன் கலந்துரையாடினார். இதன்போது நிருபர்களுக்கு பேட்டி அளித்த சுனிதா, செவ்வாய்க்குச் செல்வதுதான் தனது இலட்சியம் என்றும், நுண்கோள்கள் பற்றிய ஆராய்ச்சியைச் செய்வது பூமிக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

வாரமலர்
தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# உள்ளேயும், வெளியேயும்

அம்பாறையில் தெயட கிருல கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி, "இலங்கை தாய்நாடு இங்கு வாழும் அனைவருக்கும் சொந்தமானதாகும். இங்கே இன, மத வேறுபாடுகளை கடந்து நாம் ஒற்றுமையாக வாழவேண்டும். நமக்கு இந்த நாட்டில்தான் முழு உரிமையும் உண்டு. இந்த தாய்நாட்டை விட்டால் உலகின் வேறு எங்கும் எந்த நிலமும் சொந்தமானதில்லை. எனவே தாய் நாட்டை நாம் பாதுகாப்போம்" என்று கூறியிருந்தார்.

அந்த வார்த்தைகள் உண்மையானவை. ஒவ்வொரு இலங்கையருக்கும் இலங்கையை விட்டால் இந்த பூமிப்பந்தின் எந்தப் பகுதியும் சொந்தமானதில்லை. நமது தாய்நாட்டில் இன, மத வேறுபாடுகளுக்கும், அதனாலான முரண்பாடுகளுக்கும் இடமளிக்காமல் நாம் ஒற்றுமையாக வாழ்ந்தால் அழகிய எமது தாய்நாட்டில் எங்கள் வாழ்வு சிறக்கும்.

ஜனாதிபதியின் இந்த வார்த்தைகள் இலங்கை மக்களின் மனங்களை சென்றடைவதற்கு முன்னர், பொதுபல சேனாவினர் கக்கியிருக்கும் இனவாதம் அநாகரிகமாக இருந்தது. அதாவது "இலங்கை நாடு ஒரு பௌத்த நாடு. இங்கே ஏனைய இனங்கள் இணங்கி வாழ்வதே நல்லது. எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை, கடந்த காலத்தில் குறிப்பிட்டதைப் போல் தமிழ் சிங்கள புத்தாண்டு அல்ல. இனிமேல் அதை சிங்கள புத்தாண்டாகவே அழைக்கவேண்டும்" என்று கூறியிருந்தனர்.

இவற்றைப் பார்க்கின்றபோது ஜனாதிபதி கூறுகின்ற ஐக்கியத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் எதிராக இனவாதமும், மதவாதமும் தீவிரமடைந்துள்ளது. சிறுபான்மை இனங்களை சீண்டி விடுவதற்கும், அவர்களின் சுய கௌரவத்தை கேள்விக்குள்ளாகிப் பார்ப்பதற்கும் சில தீயசக்திகள் திட்டமிட்டு செயற்படுவதுபோல் தெரிகின்றது.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாகவும், இனங்களுக்கிடையே முரண்பாடுகளை தூண்டுகின்ற வகையிலும் செயற்படுவோர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் கூறியிருக்கின்றார். அதேவேளை பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டது, வர்த்தக நிலையங்கள் தாக்கப்படுவது, அசைந்தாலும் படைத்தரப்புக்கு தெரிகின்ற பகுதியாக இருக்கின்ற கிளிநொச்சியில் அரசியல் கட்சியின் அலுவலகம் பட்டப்பகலில் தாக்கப்பட்டதும், அதில் பொதுமக்கள் காயமடைந்ததும், யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்ற போதும் திருப்தியான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையையும் என்னவென்று கருதுவது.

அக்கரைப்பற்றில் இனவாதிகளுக்கு எதிராக ஹர்த்தால் நடத்திய போது வீதியில் ரயர்களைப் போட்டு எரித்தார்கள் என்பதற்காக இரு இளைஞர்களை கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதில் காட்டப்பட்ட ஆர்வத்தை நினைத்தால் புல்லரிக்கின்றது என்கின்றனர்.

நாட்டு நடப்பை அவதானித்துவரும் மக்கள், இவற்றைப் பார்க்கின்றபோது மூன்று குரங்குகளின் உபதேசக் கதைதான் ஞாபகத்துக்கு வருகின்றது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

# முஸ்லிம் தலைமைகளுக்கு சவால்விடும் தாக்குதல்கள்!







நாட்டிலுள்ள 20 இலட்சம் முஸ்லிம்களையும் நையாண்டி செய்து குழப்பம் விளைவித்து அவர்களை எப்படியாவது வம்புக்கு வலிந்திழுத்தெடுக்க அவர்கள் கங்கணம் கட்டி நிற்கின்றார்கள். 1400 ஆண்டுகள் பழமை வாய்ந்த முஸ்லிம்களின் சமயகலாசார பண்பாட்டு அம்சங்கள் இன்று நேற்று வந்தது போல இவர்கள் பூச்சாண்டி காட்டுகின்றார்கள்.

எங்களை இன்னுமின்னும் சீண்ட வேண்டாம் என்று நாங்கள் இவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றோம். வலிய வம்புக்கிழுத்து வளமான நாட்டை சுடுகாடாக்க வேண்டாம் என்று இந்த ஆசாமிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ரிசாத் பதியுதீன்

**தேசிய** நலன்களுக்குக் குந்தகத்தை ஏற்படுத்தி மக்களின் சமூக சக வாழ்வைச் சீரழித்துக் கொண்டிருந்த ஆயுத வன்முறைப் பயங்கரவாதத்தை நாமெல்லோரும் பொது எதிரியாகக் கருதி ஒழித்துக் கட்டினோம் என்பதில் பெருமைதான்.

இதில் நாட்டில் இன சௌஜன்யத்தையும் நிம்மதியையும் விரும்பி வேண்டி நின்ற அனைத்து இன மக்களுக்கும் பங்குண்டு.

ஆனால் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதில் ஒரு சில இனவாத பௌத்த பிக்குகள் மட்டும் உரிமை கோரிக்கொண்டு மற்றவர்கள் மீது பாயவும் நினைக்கின்றார்கள்.

இப்பொழுது உருவாகியிருக்கும் மேலாதிக்க மதவாதம் என்பது ஏற்கெனவே நாட்டைச் சீரழித்த பயங்கரவாதத்தைவிட மிக மோசமானது என்பதை இந்த நாடு நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

இது எஞ்சியுள்ள தேசிய நலன்களையும் இயல்பு வாழ்க்கையையும் இன சௌஜன்யத்தையும் இருந்த இடம்தெரியாமல் செய்துவிடும் என்பதை இப்பொழுதே அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

விடுதலை என்ற விமோசனத்தை அடைய முடியாமல் திசை தடுமாறிப்போன பயணத்திற்கு அது கைக்கொண்ட வன்முறைகள்தான் அதற்கு பயங்கரவாதப் பட்டத்தைச் சூட்ட வைத்தது.

பயங்கரவாதத்தை ஒட்டுமொத்த மக்களும்தான் வெறுத்தார்கள். அதனால்தான் அது தோல்வி கண்டது.

பயங்கரவாதம் நிலவியபோது நீதி தடுமாறியது. நிர்வாகம் சீரற்றுப் போனது. ஆனால் இப்பொழுது அப்படியல்ல. நாட்டின் நாலா திசைகளிலும், இறைமையுள்ள இந்த நாட்டில் நீதி பரிபாலனம் இருக்கின்றது என்று மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

ஆண்டியும், அரசியல்வாதியும் ஆஸ்திகனும் நாஸ்திகனும் இந்த நீதிக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்.

ஆனால், இப்பொழுது நாட்டில் உருவாகியிருக்கின்ற மதவாதப் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த அல்லது அடக்கியாள இந்த சட்டமும் நீதியும் கையைக் கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருப்பதால் பொதுமக்கள் மத்தியில் பயப்பீதி உருவாகியிருக்கின்றது.

போதாக்குறைக்கு சட்டபூர்வமற்ற, ஆனால் அதிகாரமுள்ள சாதிக்கக் கூடிய பொலிஸார் நாமே என்று அவர்கள் தெருவுக்கு வந்து தங்களை அடையாளம் காட்டுகிறார்கள். அரசோடு இணைந்துள்ள சிறுபான்மைக் கட்சிகளுக்கு குறிப்பாக முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைமைகளுக்கு இது ஒரு விஷப்பரீட்சைக்குரிய ஒன்றாகவும் மாறிவிட்டிருக்கின்றது.

இதனால் முஸ்லிம் சமூகம் பயப்பீதி கொண்டது மட்டுமல்லாமல் இப்பொழுது முஸ்லிம் தலைமைகளும் ஓரளவு ஆட்டம் கண்டுதான் இக்கின்றார்கள்.

இந்த அரசாங்கத்தின் நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான றவூப் ஹக்கீம் முதன் முறையாக மௌனத்தைக் கலைத்து பி.பி.சி செய்திச் சேவைக்கு கருத்து வெளியிட்டார். "பெப்பிலியான என்ற இடத்தில் இருக்கின்ற வணிக நிறுவனத்தை முற்றுகையிட்டு வன்செயல் கும்பல் அதிலே மிக மோசமான தாக்குதலை நடத்தி தங்களுடைய கைவரிசையைக் காட்டியிருக்கின்றார்கள்.

இந்த விஷயம் சம்பந்தமாக, ஒரு மாதகாலத்திற்கு முன்பு கண்டி மாநகரில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தின்பொழுது பொது பலசேனா என்கின்ற அமைப்பின் சார்பில் கலபொட அத்தேஞானசார தேரர் பகிரங்கமாகவே இந்த பெஷன் பக் நிறுவனத்தில் ஒரு சிங்களப் பெண் பலாத்காரம் செய்யப்பட்டிருக்கின்றார் என்ற செய்தியைச் சொல்லியிருந்தார்.

சிங்களப் பெண்களைப் பலாத்காரம் செய்கின்ற வியாபார நிறுவனங்களை நாங்கள் கவனத்திலே எடுக்க வேண்டி இருக்கின்றது. எங்களுடைய பணத்திலே வாழ்ந்துகொண்டு எங்களுடைய பிள்ளைகளை இவர்கள் பலாத்காரம் செய்கின்றார்கள் என்கின்ற ஒரு அப்பட்டமான பொய்யை, பழியைச் சுமத்தியதோடு மட்டுமல்லாமல் நான் சொல்வதற்காக நீங்கள் அந்த வியாபார நிலையத்தைத் தாக்கக் கூடாது என்று சொன்னதன் மூலம் மறைமுகமாகத் தாக்குவதற்குத் தூண்டிய இந்த பௌத்த தேரர்தான் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

நாங்கள் இந்தத் தாக்குதலை நடத்தவில்லை என்று அவர்கள் செய்தியாளர் மாநாட்டிலே சொல்வதை எங்களால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

முஸ்லிம் அமைச்சர்கள் எல்லோருமாக ஒரு அவசர அமைச்சரவைக் கூட்டத்திலே கலந்துகொண்டு இந்த விடயத்தைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று நான் ஜனாதிபதியிடம் கேட்டிருந்தேன். அதை அமைச்சரவைக் குழுக் கூட்டத்திலே கதைப்போமே என்று கூறினார். நான் அதற்கு உடன்படவில்லை.

சட்டத்தைக் கையிலே எடுப்பதற்கு இவ்வாறான உதிரி அமைப்புக்களுக்கு இந்த அரசாங்கம் உடந்தையாக இருப்பதா என்று கேள்வி கேட்பதும் எங்களுக்கிருக்கின்ற அரசியல் உரிமை என்ற காரணத்தினால் நான் அவசர அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன்.

இதன்பின்னர் நான் அமைச்சர்களான றிசாத் பதியுதீன் அதாவுல்லாஹ் ஆகியோரிடம் கதைத்து இவ்வாறானதொரு வேண்டுகோளை ஜனாதிபதியிடம் வைத்திருக்கின்றேன் என்று அவர்களிடம் சொன்னேன்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான துவேஷ நடவடிக்கைகள் நாடு தழுவிய அமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்டதை நாம் கண்டிருக்கவில்லை.

ஆனால் இந்த பொதுபல சேனா அமைப்பின் உருவாக்கமும் அதன் பின்னணியும் சம்பந்தமாக முஸ்லிம்கள் மத்தியிலே மிகப் பெரிய பீதி உருவாகியிருக்கின்றது.

அரசாங்கம் இந்தப் பிரச்சினையை மெத்தனப்போக்கோடு அணுகுகிறது என்ற கணிப்பு முஸ்லிம்களிடத்திலே வளர்ந்திருக்கின்றது. இந்த நிலையிலேதான் பெபிலியான சம்பவமும் நடந்திருக்கின்றது. ஒரு விடயத்தை நான் இதுவரை பகிரங்கமாகச் சொல்லவில்லை.

ஆயினும் நீங்கள் வெளிப்படையாகக் கேட்டதால் சொல்கின்றேன். பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பொதுபல சேனாவின் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளப்போகின்றார் என்ற செய்தி கேள்விப்பட்டவுடனேயே அதற்கு முன்னைய தினம் நான் ஜனாதிபதியோடு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு அவ்வாறான செய்தியொன்று ஊடகங்களில் வெளியாகியிருக்கின்றது. பாதுகாப்புச் செயலாளர் பொதுபல சேனாவின் இந்த நிகழ்விலே கலந்து கொள்வதைத் தடுக்க வேண்டும் அப்படித் தடுக்கவில்லையென்றால், பாரதூரமான விளைவுகளும் இந்த அமைப்புக்குப் பாதுகாப்புச் செயலாளர் ஊக்கமளிக்கின்றார் என்கின்ற ஒரு வெறுப்புணர்வும் முஸ்லிம்கள் மத்தியிலே நிச்சயமாக வந்துவிடும். அதை நீங்கள் தடுக்கவேண்டும் என்று நான் ஜனாதிபதியிடம் நேரடியாகக் கேட்டிருந்தேன்.

அப்படிக் கேட்டும் அந்த வேண்டுகோள் கவனத்தில் எடுக்கப்படாததின் காரணமாக நான் வெகுவாக ஏமாற்றமடைந்துள்ளேன்.

நான் ஏற்கெனவே எதிர்வு கூறியது போன்று இப்பொழுது பொதுபல சேனா அமைப்பு ஒரு அசுர தாண்டவமாடுவதற்கு பாதுகாப்புச் செயலாளர் அந்த பொதுபல சேனாவின் நிகழ்விலே பங்குகொண்டதன் காரணமாக இவர்களுக்கு இப்பொழுது உற்சாகம் கூடிவிட்டது.

அந்த உற்சாகத்தைக் கூட்டிக் கொடுக்கின்ற விசயத்தைத்தான் பாதுகாப்புச் செயலாளர் செய்திருக்கின்றார் என்பதை நான் இங்கு திட்டவட்டமாகச் சொல்ல வேண்டியிருக்கின்றது.

இனியும் இந்த விசயங்கள் தொடர்வதற்கு இந்த அரசாங்கம் இடமளிப்பதாக இருந்தால் அது இந்த நாட்டிலே வாழ்கின்ற ஒரு சிறுபான்மைச் சமூகத்தை இலக்கு வைத்துத் தாக்குவதற்கு ஒரு சிறு கும்பலுக்கு அரசாங்கம் வழிசமைத்துக் கொடுத்ததாகத்தான் பார்க்கப்படப் போகின்றது.

யுத்தம் முடிந்த கையோடு இந்த நாட்டிலே யாரையாவது எதிரியாக வர்ணித்துக் கொண்டு அவர்கள் மேல் ஒரு பாய்ச்சல் பாய வேண்டும் என்கின்ற ஒருவிதமான விவேகமில்லாத பைத்தியக்காரக் கும்பல் உருவாகியிருக்கின்றது.

இந்தக் கும்பல்களுக்கு உடந்தையாக இருக்காமல் அரசாங்கம் இவர்களை உடனடியாகத் தடை செய்ய வேண்டும், சம்பவத்திற்குப் பொறுப்புதாரிகளையெல்லாம் கைது செய்ய வேண்டும், அவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும் என்று நான் தெளிவாகச் சொல்கின்றேன்..." என்கிறார் றவூப் ஹக்கீம் அவர்கள்.

அரசாங்கத்தோடு உள்ள இன்னொரு அமைச்சரான றிசாத் பதியுதீன் சற்றுக்காட்டமாகத்தான் இருக்கின்றார்.

"நான் இப்பொழுது இரவில் உறங்குவதில்லை. ஏனென்றால் எங்காவது முஸ்லிம்களுக்கெதிரான சம்பவங்கள் நடந்துவிடும், அதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் என்பதால் எனக்குத் தூக்கமே வருவதில்லை.

இப்பொழுது முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கின்ற அட்டூழியங்களைச் சட்ட திட்டத்தின் அடிப்படையில் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் இந்த அநியாயத்தை இப்பொழுதே தடுக்கவில்லை என்றால் இந்த நாடு இன்னும் முப்பது வருடங்கள் அல்ல முடிவுறாத காலத்திற்கு அழிவைச் சந்திக்க வேண்டிவரும் என்பதை ஜனாதிபதிக்கும், பஷில் ராஜபக்ஷவுக்கும், கோத்தபாயவுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் சொல்லிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

கலகம் விளைவிப்பவர்களை கைது செய்யுங்கள் அவர்களை அடையாளம் காட்ட மக்கள் தயாராக இருக்கின்றார்கள் என்றும் சொன்னோம்.

சட்டத்தைக் கையிலெடுக்கும் நாம் சட்டபூர்வமற்ற பொலிஸார் என்று சொல்கின்றவர்களை கைது செய்யுங்கள் என்று சொல்லியிருக்கின்றோம்.

கடை உரிமையாளர் முஸ்லிம் என்ற ஒரேயொரு காரணத்திற்காக அந்தக் கடையைச் சூழ்ந்து கொண்டு தாக்கியிருக்கின்றார்கள்.

பக்கத்திலிருந்த பௌத்த வழிபாட்டுத்தலத்திலிருந்து வந்துதான் இந்த அராஜகத்தைப் புரிந்திருக்கின்றார்கள்.

கலகக்காரர்களுக்குத் தேவை பிரச்சினை என்ற ஒன்றுதான். ஆனால் தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நாட்டிலே நிம்மதி தேவை.

நாட்டிலுள்ள 20 இலட்சம் முஸ்லிம்களையும் நையாண்டி செய்து குழப்பம் விளைவித்து அவர்களை எப்படியாவது வம்புக்கு வலிந்திழுத்தெடுக்க அவர்கள் கங்கணம் கட்டி நிற்கின்றார்கள்.

1400 ஆண்டுகள் பழமை வாய்ந்த முஸ்லிம்களின் சமய கலாசார பண்பாட்டு அம்சங்கள் இன்று நேற்று வந்தது போல இவர்கள் பூச்சாண்டி காட்டுகின்றார்கள்.

நாங்கள் கண்ணியமாக உடையணிவதைக் கூட ஒரு பிரச்சினையாகப் பார்க்கின்றார்கள். முழு நிர்வாணமாகப் போவது அவர்களுக்கு ஒரு பாதிப்பும் இல்லை.

உடலை மூடி கண்ணியமாகப் போவதுதான் அவர்களது கண்களைக் குற்றுகிறது. முழு நிர்வாணமாகி கொழும்பிலே, காலிமுகத்திடலிலே கண்டியிலே நடமாட முடியும். அது ஒன்றும் ஒருத்தருக்கும் பாதிப்பில்லை என்றுதான் அவர்கள் கருதுகிறார்கள்.

கௌரவமாக கண்ணியமாக உடையணிந்து மரியாதையாக நடந்து செல்லும் இஸ்லாமிய சமூகப் பெண்களால் அவர்களுக்கு அச்சமும் பயமும் ஏற்பட்டுள்ளதாம் என்று பூச்சாண்டி காட்டுகின்றார்கள்.

கடந்த 30 வருட கால உள்நாட்டு ஆயுதக் கிளர்ச்சியின் போது ஹபாவுக்குள் குண்டு கொண்டு வரவில்லை. தற்கொலைப் படை வந்து பாயவில்லை.

ஆனால் இப்பொழுது இந்த சமாதான சூழ்நிலையில்தான் ஹபாயாவுக்குள்ளும் பர்தாவுக்குள்ளும் குண்டு வந்துவிடும். அதனால் தாங்கள் பாதிக்கப்பட்டுவிடுவோம் என்று குண்டுப் புரளி எழுப்புகின்றார்கள்.

எங்களை இன்னுமின்னும் சீண்ட வேண்டாம் என்று நாங்கள் இவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றோம். வலிய வம்புக்கிழுத்து வளமான நாட்டை சுடுகாடாக்க வேண்டாம் என்று இந்த ஆசாமிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அது மட்டுமல்ல தேவைப்படுமிடத்து இந்த அமைச்சுப் பதவியையும் இப்பொழுதே தூக்கி எறிந்துவிட்டு சமுதாயத்தின் ஒற்றுமைக்காக ஒன்றுபடத் தயாராக இருக்கின்றோம் என்று சகோதரர் றவூப் ஹக்கீம் அவர்களுக்கும் அதாவுல்லாஹ் அவர்களுக்கும் நான் இந்த இடத்தில் அறைகூவல் விடுக்கின்றேன்.

நாங்கள் இந்த நாட்டில் கண்ணியமாக வாழ்வதற்கு இந்த அமைச்சுப் பதவி தடையாக இருக்குமாக இருந்தால் அதனைத் துச்சமென மதித்து உதறித்தள்ளி விட்டு ஓடிவர நாங்கள் தயாராக இருக்கின்றோம்." என்றார் அமைச்சர் றிசாத் பதியுதீன்.

# கட்டார் மன்னர் மனைவியின் பெயரில் வாங்கிய தீவு!

நிலத்தை வாங்கியவர், உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவர். அவர் வாங்கிய நிலம் இருப்பதோ, இன்று பொருளாதார நிலையில் திவால் ஆகக்கூடிய நிலையில் தள்ளாடும் அதி ஏழை நாட்டில்!

கட்டார் நாட்டின் மன்னர் (எமிர்) ஹமாத் பின் கலீஃபா அல்தானி, கிரீஸ் நாட்டில் உள்ள 6 தீவுகளை விலைக்கு வாங்கியிருக்கிறார். விலை, 8.5 மில்லியன் யூரோ. கிரீஸுக்கு சொந்தமான இந்த தீவுகள், அயோனியன் கடலில் உள்ளன.

கட்டார் மன்னருக்கு சொத்துக்கள், லண்டனில் இருந்து பீய்ஜிங் வரை உள்ளன. வருடத்தில் ஒருசில நாட்கள் தங்குவதற்காக வாங்கப்படும் ஹாலிடே ப்ராப்பர்டிகள் இவை. இந்த விற்பனை கட்டார் மன்னருக்கு ஒன்றும் பெரிய விஷயம் கிடையாது. ஆனால், பொருளாதார ரீதியில் தள்ளாடி, கிட்டத்தட்ட திவால் நிலையில் உள்ள கிரீஸ் நாட்டுக்கு மிகப் பெரிய போனஸ்!

எசினாடெஸ் என்று அழைக்கப்படும் இந்த தீவுகள், கிரீஸ் நாட்டின் இதாகா பகுதியில் உள்ளன.



இதாகா நகர மேயர் அயோனிஸ் காசியானோஸ், வெளிப்படையாக பேசுகிறார். "கிரீஸ் அரசு எந்திரம் நகர்வது, மிகவும் மெதுவாக.

நீங்கள் இங்கு வந்து ஒரு தீவை வாங்குவீர்கள் என்றால், நீங்கள் கட்டார் மன்னராகவும் இருக்கலாம், யாராகவும் இருக்கலாம், அரசு ஆவண வேலைகள் முடிந்து பதிவு செய்வதற்கு ஒன்றரை ஆண்டுகள் எடுக்கும். ஆனால், அதுவரை இங்கு தங்கியிருக்க எந்த தடையும் இல்லை"

இந்த விற்பனைக்கு கிரீஸ் அரசு அனுமதி கொடுத்தாலும், இது தனிப்பட்ட விற்பனைதான். 6 தீவுகளில் ஒன்று, கிரீஸ்-ஆஸ்திரேலியர் ஒருவருக்கு சொந்தமானது. அவரிடம் இருந்து தனிப்பட்ட முறையில் வாங்கியுள்ளார் கட்டார் மன்னர். மற்றைய 5 தீவுகளும், ஒரு லோக்கல் குடும்பத்துக்கு சொந்தமானவை. இவர்கள் கடந்த 150 ஆண்டுகளாக அங்கு வசிக்கின்றனர்.

தீவுகளை விற்பனை செய்து பெறப்பட்ட பணம், கிரீஸ் நாட்டில் முதலீடு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் விற்பனைக்கு அனுமதி கொடுத்துள்ளது கிரீஸ் அரசு! தீவு, மன்னரின் மனைவி ஷீகா மோசா (மன்னரின் மூன்று மனைவிகளில் இரண்டாவது மனைவி (படத்தில் உள்ளவர்). பெயரில் வாங்கப்பட்டுள்ளது.

---

**ராஜிவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் எழுதிய நீண்ட விளக்கக் கடிதத்தின் தொடர்ச்சி....**

# மறுக்கப்பட்ட நீதி!
## உயிர்ப் பிச்சை கேட்கிறார் பேரறிவாளன்



எனது வேண்டுதல்

அன்புக்குரியீர், மேற்சொன்னவற்றை எல்லாம் மறுசீராய்வு மனுவில் எடுத்துரைத்திருந்தால் நீதியரசர்கள் உண்மை உணர்ந்திருப்பார்களே என்று எம்மை நோக்கி கேள்வி எழுப்பக்கூடும். உண்மை என்னவெனில் இதைவிடக் கூடுதலாகவே எமது வழக்கறிஞர் மறுசீராய்வு வாதுரையில் எடுத்துரைத்தார்.

எமது குற்றமற்ற தன்மையை, எமக்கு இழைக்கப்பட்ட அநீதியை எழுத்து வடிவில் மறுசீராய்வு மனுவில் சமர்ப்பித்தோம். ஆயினும்கூட நீதி மறுக்கப்பட்டுவிட்டது. கொடுமை வென்னவெனில், மறு சீராய்வு மனு மீதான தனது உத்தரவில் நீதியரசர் வாத்வா,

"(Mr. Natarajan, who appeared for the convict review peritioners, submitted that he convict was not challenging the finding of guilt of the peritioners and was confining the review petitions only on question of award of death sentence) தண்டிக்கப்பட்டுள்ள மறுசீராய்வு மனுதாரர்களுக்காக வாதிட்ட திரு. நடராசன் அவர்கள் குற்றமிழைத்தவர்கள் என்ற முடிவை எதிர்க்கவில்லை என்றும் மரணதண்டனை விதிப்பது தேவைதானா என்று அளவோடு மறுசீராய்வு மனுக்களை கட்டப்படுத்திக் கொள்வதாகவும் எடுத்துரைத்தார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

எம்து எழுத்துப்பூர்வமான மறுசீராய்வுக்கான மனுவை படித்தறிந்தாலே இதற்கான விளக்கத்தை தாங்கள் உணர்வீர்கள் என்று நம்புகிறேன். உச்ச நீதிமன்றத்தின் நீதியில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தேன். ஆனால் மிகமோசமான முறையில் ஏமாற்றமடைந்தேன். தயவுகூர்ந்து இதை நீதித்துறை மீதான குற்றச்சாட்டாக தாங்கள் பொருள் கொள்ளமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

உண்மை என்னவெனில் எமது வ்ழக்கைப் பொறுத்தளவில் நீதிமன்றம் நீதி வழங்குதலில் சற்றுத் தடுமாற்றம் கண்டுவிட்டது என்பதை உறுதியோடு சொல்வேன். அதேவேளை, பொதுவில் நீதிமன்றம் கூறுவதையே உலகம் ஏற்கும், நம்பும் என்பதையும் அறிந்துள்ளேன்.

குறைந்தபட்சம் உங்களைப் போன்ற அறிவில் சிறந்தவர்களிடமும் மனித உரிமைப் போராளிகளிடமாவது உண்மையை நிலைநாட்டிவிட வேண்டும் எனத் துடிக்கிறேன். என்னை விடுதலை செய்யும் உத்தரவை வழங்கத் தங்களால் இயல முடியவில்லையானாலும் நான் குற்றமற்றவன் என்பதை நீங்கள் எந்தக் கணத்திலாவது உணர்வீர்களேயானால் அதுவே எனது விடுதலைக்கான வெற்றி என்பதை உறுதியோடு சொல்வேன்.

என் வழக்குத் தொடர்பான உச்ச நீதிமன்ற தீர்ப்புரை பக்கங்களையும் நீதியரசர்கள் அவற்றில் செய்துள்ள பிழைகளையும் எழுதி இணைத்துள்ளேன். படித்தறிந்து எனது தரப்பு உண்மைகளை உணர்வீர்கள் என்று நம்புகிறேன்.

தடா எனும் ஆள்தூக்கிச் சட்டம் எத்துணை எதிர்ப்பைப் பெற்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தச் சட்டம் அத்தனை எதிர்ப்பையும் பெறுவதற்கான காரணமாய் அமைந்தது தடா சட்டப்பிரிவு 15 என்ற ஒப்புதல் வாக்குமூலப் பிரிவு என்பதையும் நன்கறிவீர்கள்.

இந்தக் கொடூரச் சட்டத்தின் கீழ்தான் எமது வழக்கும் தொடுக்கப்பட்டது. ஆயினும் இறுதியில், நாங்கள் பயங்கரவாதிகளில்லை என்றும் தடா சட்டம் இவ்வழக்கில் பொருந்தாது என்றுரைத்த உச்ச நீதிமன்றம் ஒப்புதல் வாக்குமூலம் மட்டும் செல்லும் என்று தீர்ப்பளித்திருப்பதும் அந்த வாக்குமூலம் என்பதை மட்டுமே கொண்டு உயர்ந்தபட்ச தண்டனையான மரண தண்டனை விதிப்பதும் மிகுந்த வேதனையளிக்கும் செயலாகும்.

12, 15 என எண்களின் விளையாட்டிற்கு எமது உயிர் விலையாக்கப்பட்டுவிட்டது என்பதே வருத்தத்திற்குரிய உண்மை.

எனவே உச்ச நீதிமன்ற உத்தரவுச் செய்தியை அறிந்தபோது, உலகத்தின் மிகக் கொடிய குற்றங்களை நீதிபதிகள் ஆதரித்துள்ளனர். ஆகவே, இரு தரப்பு வழக்கையும் நீதிபதிகள் விசாரித்தறிகிறார்கள் என்பதால் உண்மைதான் வெளிப்படும் என்று எண்ணிவிடாதீர்கள் என்ற லெனின் அவர்களின் கூற்றைத்தான் வருத்தத்தோடு எண்ணிப் பார்த்தேன்.

சட்டப்படி நான் எந்தக் குற்றமும் செய்தவனல்ல. நியாயப்படியும் குற்றமற்றவனே. என்றாலும் எமதுத் தரப்பு நியாயங்களைவிட மறைந்தவர் உயர் பதவி வகித்தவர் என்பதுதான் முன்நின்று வழக்கின் முடிவைத் தீர்மானித்துவிட்டது.

தனிமனித விருப்பு வெறுப்புக்கள்தான் பலநேரங்களில் பலரின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. இதற்கான கடந்த கால சான்றுகள் பலவுண்டு. அன்று கேகர் சிங் கொடூரமான முறையில் தூக்கிலிடப்பட்ட போது யாரும் குரல் கொடுத்துவிடவில்லை. ஆனால் இன்று எமக்கான நிலைமை அவ்வாறில்லை என்பதை உணர்ந்துள்ளேன். அதையிட்டு நான் மகிழ்சசி கொள்கிறேன். எமக்காக ஒலிக்கும் அந்தக் குரல்களே எமக்கு உற்சாகத்தைத் தருகிறது. எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையை விதைக்கிறது.

எனது இந்த முறையீடு வெற்றுப் புலம்பல்கள் அல்ல. ஒரு நிரபராதியான மனிதனின் உள்ளத்து உண்மைகள். இறுதியில் உண்மை வெல்லும் என்ற நம்பிக்கையிருக்கிறது என்றாலும், நான்கு சுவற்றுக்குள் நடந்தேறிய உண்மைகள் பலரால் அறியப்பட வேண்டும் என்று ஆவல் கொள்கிறேன். அதன் விளைவுதான் இந்த முறையீடு.

சிலவேளை, எனது நீதிக்கான நெடும் போராட்டத்தில் இந்த மடல் வேறு பல மனித நேயங்கொண்ட இதயங்களையும் இணைக்கக்கூடும். அதை எதிர்பார்த்தே நான் ஆவலோடு இதை எழுதுகிறேன்.

எனது வேண்டுதல் எல்லாம், திறந்த மனதுடன் அனுகுங்கள், சட்டத்தின் அடிப்படையில் மட்டுமே எம்மைப் பாருங்கள் என்பதுதான்.

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக தனது மகனின் நியாயத்திற்காகப் போராடும் ஒரு தாயின் அர்ப்பணிப்பை, உறுதியைப் பாருங்கள். அவரின் உழைப்பிற்காகவாவது உண்மை வெல்லத்தான் வேண்டும். உறுதுணை செய்யுங்கள்.

எந்த ஒரு மனிதனும் இந்த நாட்டின் வரலாற்றில் உச்ச நீதிமன்றம் உறுதி செய்துவிட்ட பிறகும் நிரபராதி என நீதி கேட்டதாக உதாரணமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் நாம் கேட்கிறோம். அத்தனை மோசமாக நாம் அநீதிகளை சுமந்து நிற்கிறோம். சுமையை இறக்க வாருங்கள்.

வேதனைகள் எம்மோடு முடியட்டும். விடியப் போகும் காலைப் பொழுதிலாவது நீதி அனைவர்க்கும் சமமாக மாறட்டும். சட்டத்தின் மூலம் நிரபராதிகளைக் கொன்றொழிக்கும் கொடுமை சாகட்டும்.

இறுதியாக உலகப் பொதுமறை தந்த பெருநாவலரின் மேற்கோளோடு நீதிக்கான இம்முறையீட்டை முடிக்கிறேன்.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறி நீதி வெல்லட்டும்!

**இப்படிக்கு**
**அ.ஞா. பேரறிவாளன்**

(முற்றும்)




**கிருத்தவ** சிலுவைப் போர் வீரர்கள் ஆண்டியோக்கை முற்றுகையிட்டபோது, அங்கே சுமார் ஓராண்டுக்கான உணவுப்பொருட்கள் சேகரம் இருந்தது. நகர மக்கள் பசியால் வாடவேண்டிய அபாயம் இல்லை என்றே நிர்வாகிகள் கருதினார்கள். ஆனால் கிருத்தவர்களை எதிர்த்துப் போரிட வீரர்கள்தான் அப்போது அங்கே பிரச்சினையாக இருந்தது. ஆகவே முற்றுகைக் காலத்தில் போர் வீரர்களை ஆயத்தப்படுத்தி, புதிய வீரர்களை உருவாக்கி, தயாரிக்கும் மாபெரும் பணி அவர்களுக்கு இருந்தது. அதைத்தான் அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் சற்றும் எதிர்பாராவிதமாக, போரிட வந்த கிருத்தவ அணியினரின் உணவுப்பொருட்கள் தீர்ந்து விட்டன. ஆகவே பெரும் சிக்கல் ஏற்பட்டது. புகழ்பெற்ற சரித்திர ஆசிரியர் மில் இதனை வருணிக்கும்போது, கிருத்தவ வீரர்கள் உணவின்றி, தமக்குள்



தாமே ஒருவரையொருவர் கொன்று பிணத்தைப் புசிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்று எழுதுகிறார்.

இத்தனைக்குப் பிறகும் ஆண்டியோக் கோட்டையின் படைத் தலைவனாக இருந்த ஃபிரஸ் என்பவன் கிருத்தவ தளபதிகளிடம் பணம் பெற்றுக்கொண்டு கோட்டைக் கதவுகளைக் கட்டக் கடைசி நிமிடத்தில் திறந்துவிட்டதால், கோட்டை கிருத்தவர்களின் வசமாகிப்போனது. மிகப்பெரிய துரோகம் என்று இஸ்லாமிய சரித்திர ஆசிரியர்கள் இன்றளவும் வருணிக்கும் இச்சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து கோட்டைக்குள் இருந்த பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களைக் கிருத்தவர்கள் கண்மண் தெரியாமல் வெட்டி வீழ்த்தினார்கள். வெற்றிக் களிப்புடன் எக்காளமிட்டபடி ஜெருசலேத்தை அடைந்து, எதிர்ப்பட்ட அத்தனை பேரையும் கொன்று வீழ்த்தியபடியே முன்னேறிச் சென்றார்கள்.

ஜெருசலேத்தின் வீதிகள் அனைத்தும் உடல்களால் நிறைந்தன. பிணம் தின்னும் பறவைகள் ஏராளமாக வானில் வட்டமிட்டபடி இருந்தன. எங்கு பார்த்தாலும் அழுகுரல்கள், அவல ஓலங்கள், இடிந்த கட்டடங்களின் இடைவெளிகளில் பெரும்புகை எழுந்து வானை நிரப்பியது. தீவைக்கப்பட்ட வழிபாட்டுத்தலங்கள், கல்வித் தலங்களிலிருந்து எழுந்த புகை அது.

அந்தச் சம்பவத்தின்போது மட்டும் எழுபதாயிரம் ஜெருசலேம்வாசிகள் கிருத்தவர்களால் கொல்லப்பட்டதாக மிஷாட் என்கிற சரித்திர ஆசிரியர் எழுதுகிறார். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி ஒருவரின் கூற்றை மேற்கோளாகக் கொண்டு எழுதும் மிஷாட், கொல்லப்பட்டவர்களின் இரத்தம் உமர் மசூரியின் நுழைவு மண்டபத்தில் முழங்கால் ஆழத்தில் குதிரைக் கடிவாளத்தை எட்டிநின்றது என்றும் குறிப்பிடுகிறார்.

முழங்கால் ஆழத்துக்கு இரத்தக் குளம்! நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அப்படியொரு குரூர யுத்தத்தின் இறுதியில் ஜெருசலேம், சிலுவைப் போர் வீரர்களின் வசமானது.

ஜெருசலேம் நகரம், கிருத்தவர்களின் வசமாகிவிட்டது என்கிற தகவல் அறிந்தும் கலீஃபாவின் உடனடிச் செயல் என்னவாக இருந்திருக்கும் என்று ஒரு கணம் யோசித்துப்பாருங்கள்.

அதாவது, முஸ்லிம் வீரர்களுக்கு யுத்தத்தில் மிகப்பெரிய தோல்வி கிட்டியிருக்கிறது. இஸ்லாத்தின் இரண்டாவது கலீஃபாவான உமர் காலத்தில் முஸ்லிம்கள் வசமான ஜெருசலேம் நகரம், மூன்று மதங்களைச் சேர்ந்த மக்களும் அங்கே சண்டை, சச்சரவின்றி ஒற்றுமையாக வாழ வழிசெய்தவர் அவர். சரித்திரம் உள்ளவரை அவரது காலமும், அந்த வெற்றியும், வெற்றிக்குப் பிறகு அவர் மேற்கொண்ட மத நல்லிணக்க முயற்சிகளும் ஓயாமல் நினைவு கூரப்பட்டுக்கொண்டிருந்த சமயம் வேறு. பின்னால் வந்த ஆட்சியாளர்களின் செயற்திறன் குறைவுதான், இந்த மாபெரும் தோல்விக்குக் காரணம் என்று பள்ளிக்கூட சரித்திர ஆசிரியர்கள் இனி போதிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அதுகூட இரண்டாம்பட்சம். மத்திய ஆசியாவெங்கும் கலீபாக்களின் ஆட்சி என்று பெருமையுடன் இனி சொல்லிக்கொள்ள முடியாது. இன்றைக்குக் கிருத்தவர்கள் கை மேலோங்கியிருக்கிறது, நாளை யூதர்களின் கரங்கள் மேலோங்கலாம். வேறு யாராவது அந்நியர்களும் படையெடுக்கலாம். உடனடியாக ஏதாவது செய்தாலொழிய இதிலிருந்து மீட்சி கிடையாது.

அப்படிப்பட்ட நெருக்கடியான நிலை, என்ன செய்திருப்பார் அப்போதைய கலீபா?

நம்பமாட்டீர்கள். உட்கார்ந்து ஓவென்று அழுதாராம். தமது கையாலாகத்தனத்தை நினைத்து அவர் அழுததை அத்தனை சரித்திர ஆராய்ச்சியார்களும் தவறாமல் குறிப்பிடுகிறார்கள். போதாக்குறைக்கு கலீபா முஸ்தசீருக்கு அவரது மெய்காப்பாளரான பல்கியாருக் தாஜுத் என்பவருடன் அப்போது ஒரு பெரும் பிணக்கு வேறு ஏற்பட்டிருந்தது. மெய்க்காப்பாளரான அந்த பல்கியாருக்குத்தான் அப்போது அவரது இராணுவ மந்திரியும்கூட.

எதிரிகளின் அட்டகாசம் ஒருபுறம் இருக்க, சுல்தானுக்கு அவரது மெய்க்காப்பாளராலேயே ஏதாவது ஆபத்து ஏற்பட்டாலும் வியப்பதற்கில்லை என்பது போன்ற சூழ்நிலை.

ஆனால் சுயபுத்தி இல்லாத கலீபா தங்களுக்கிடையிலான சொந்தச் சண்டையை ஒதுக்கி வைத்துவிட்டு பொது எதிரியை ஒழிக்க ஏதாவது யோசனை சொல்லுமாறு பல்கியாரிடம் கேட்டார்.

தனக்குக் கூடுதல் அதிகாரங்கள், சில குறிப்பிட்ட பகுதிகளில் தனியாட்சி செய்யும் உரிமை போன்றவை கிடைத்தால் ஏதாவது யோசனை தரஇயலும் என்று அந்த இராணுவ அமைச்சர் தெரிவித்ததாகத் தெரிகிறது.

மிக உயர்ந்த அதிகார பீடத்திலேயே இத்தகைய தொரு அவலநிலை என்னும்போது அன்றைய இஸ்மிய சாம்ராஜ்ஜியத்தின் ஒட்டுமொத்த நிர்வாகம் எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பார்க்கலாம். ஒவ்வொரு மாநிலப் பகுதியின் ஆட்சியாளரும் தமது ஆளுகைக்கு உட்பட்ட இடத்துக்குத் தாங்களே சக்கரவர்த்தியாக வேண்டும் என்கிற கனவை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கிராம அதிகாரியும் தமது கிராமத்தில் வசூலிக்கப்படும் வரிகளைத் தமது உபரி வருமானமாகக் கருதத் தொடங்கியிருந்தார்கள். ஊழல், எல்லா மட்டங்களிலும் பரவி வேரூன்றியிருந்தது. ஆட்சியாளர்களே இராணுவ வீரர்களைத் தனியார் இராணுவம் போல் வாடகைக்குப் பயன்படுத்தவேண்டிய சூழ்நிலை இருந்தது. கேட்ட பணம் கிடைக்காவிட்டால் இராணுவ வீரர்கள் எதிரிப்படைக்கு விசுவாசமாக நடந்துகொண்டுவிடுவார்கள்.

இப்படியொரு அவலக் காலத்தில்தான், முஸ்லிம்களின் இழந்த செல்வாக்கை மீட்கும் வேட்கையுடன் முஹம்மது என்பவர் புதிய சுல்தானாகப் பதவியேற்றார். இவர் பல்கியாருக்கின் சகோதரர். தமது அண்ணனைப் போலவே, அவரது காலத்துக் கலீபாவான முஸ்தசீரைப் போலவோ அல்லாமல் கொஞ்சம் வீரமும் விவேகமும் கொண்டவராக இருந்தவர்.

(தொடரும்...)

# வைரஸ் தாக்காமல் இருக்க..



அண்மைக் காலங்களில் கணனிகள் மற்றும் மடிக் கணினிகளில் வைரஸ் தாக்கப்படுவதென்பது மிகவும் அதிகரித்துள்ளது.

வைரஸ் தாக்கினால் தகவல்கள் திருடப்படுவதுடன் தேவையில்லாமல் முக்கியமான தகவல்களும் அழிக்கப்படும்.

இதை தவிர்ப்பதற்காகவே வைரஸ் தடுப்பான்கள் [Anti-virus] மென்பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. இவை ஓரளவிற்கு வைரஸ்கள் உங்கள் கணினியை தாக்காமல் தடுக்கும்.

இதற்காக பல்வேறு நிறுவனங்கள் மென்பொருட்களை வடிவமைக்கிறது. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

1. Microsoft Security Essentials
2. Bullguard
3. F-Secure
4. Kaspersky Lab
5. McAfee
6. Panda
7. Norton by Symantec
8. Trend Micro
9. Bitdefender Windows 8 Security

# செவ்வாய் கிரகத்தில்
## உயிர்கள் வாழ்வது சாத்தியமே!

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வது சாத்தியமே. அங்கு ஒரு காலத்தில் உயிரினங்கள் வாழ்ந்திருப்பதற்கான ஆதாரங்கள், சூழல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நாசா ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



செவ்வாய் கிரகத்தில் உயிர் வாழும் சூழல் குறித்து ஆராய அனுப்பப்பட்டுள்ள ரோவர் விண்கலமானது அங்கிருந்து பாறைகளின் மாதிரிகளை சேகரித்து, அதன் மூலக்கூறுகள், வேதிக் கட்டமைப்பு தகவல்களை கடந்த மாதம் பூமிக்கு அனுப்பியது.

இதில் உயிர் வாழ்வதற்கு அடிப்படை வேதிப் பொருட்களான சல்பர், நைட்ரஜன், ஹைட்ரஜன், ஒட்சிசன், காபன் உள்ளிட்டவைகள் தேவையான அளவு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பாறைகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்ட இடத்தில் முன்னதாக நதியோ அல்லது ஏரியோ இருந்ததும் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

இதனை தொடர்ந்து செவ்வாய் கிரகத்தில் முன்னொரு காலத்தில் உயிரினங்கள் வாழ்ந்தது உண்மையே என்றும், எதிர்காலத்தில் உயிர் வாழ்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் நாசா தெரிவித்துள்ளது.

க்யூரியாசிட்டிக்கு முன் செவ்வாய் கிரகத்தின் இன்னொரு பகுதியில் தரையிறங்கிய மார்ஸ் எக்ஸ்பிரஸ், அங்குள்ள மிகப் பெரிய ஆற்றின் படத்தை அனுப்பியது நினைவிருக்கலாம். இந்த ஆறு பல நூறு ஆண்டுகளுக்கு முன்புவரை ஓடிக் கொண்டிருந்தது. இப்போது ஈரமிக்க மணற்பரப்பும் ஆற்றின் வழித்தடமும் மட்டும் அப்படியே உள்ளதைப் படம் பிடித்திருந்தது.

# நடைமுறைக்கு உதவாத ஜெயாவின் தீர்மானங்கள்!



**இலங்கை** தமிழர்களுக்காக தமிழகத்தில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தற்போது சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது. தமிழகத்தில் சீமான், வைகோ, ராமதாஸ், பழ நெடுமாறன், கருணாநிதி, ஜெயலலிதா, திருமாவளவன் ஆகியோர் ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுப்பதாக காலத்துக்குக் காலம் அரசியல் நடத்தியபோது அதை சர்வதேசம் கண்டு கொள்ளவில்லை.

பின்னர் இலங்கைத் தமிழர் விவகாரமானது தமிழ் நாட்டில் அரசியலுக்காகவும், தேர்தலுக்காகவும் கையில் தூக்கப்படும் ஓர் ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது என்று பல தரப்பினரும் முடிவு செய்திருந்தனர்.

தற்போதும் இலங்கை தமிழர் விவகாரத்தை தமிழக் அரசியல் கட்சிகள் வழமையான பாணியிலேயே கையாண்டு வருகின்றன. ஆட்சியில் இருக்கும்போது ஒருவகையாகவும், எதிர்க்கட்சியிலிருக்கும்போது இன்னொரு வகையாகவும் கையாள்வதில் தமிழகத்தின் இரு பிரதான கட்சிகளும் சளைத்தவர்களில்லை.

தற்போது தமிழகத்தில் அரசியல் கட்சிகளை ஓரம்கட்டி மாணவர்கள் இலங்கைத் தமிழர்களுக்காக வீதியில் இறங்கி போராடத் தொடங்கியுள்ளனர். மாணவர்களின் போராட்டத்திற்கு அரசியல் சாயம் பூசப்பட்டுவிடக் கூடாது என்று தூண்டுதலாக இருந்தவர்கள் திரைமறைவில் இருக்கக்கூடும்.

ஆனால் மாணவர்களின் போராட்டம் கூர்மையடைந்து வேறு ஒரு வடிவத்தையோ, அல்லது மத்திய அரசின் சிந்தனையில் மாற்றத்தையோ ஏற்படுத்திவிட்டால், தமிழகத்தில் பெரிய கட்சிகளாக இருக்கும் தமக்கு அது அவமானத்தை மட்டுமல்லாது அரசியலில் புதிய மாற்றங்களையும் ஏற்படுத்திவிடக்கூடும் என்று கருதிய கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.கவும், செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவும் பரபரப்போடு ஈழத்தமிழர் பிரச்சினையை கையில் எடுத்திருக் கின்றன.

தேர்தலுக்கு சில மாதங்களே இருப்பதாலும், தமிழக அரசியல் சூழலில் தாம் தனித்துவிடக்கூடாது என்பதாலும் மத்திய அரசிலிருந்து தாம் விலகிக்கொள்வதாக கலைஞர் திடீர் முடிவை அறிவித்தார்.

கலைஞரின் முடிவு அவரது அரசியல் தந்திரோபாயம் என்று தெரிந்தாலும் கலை ஞரின் முடிவை அம்பலப்படுத்துவதும், பிரச்சினையை தமது பக்கம் இழுப்பதும் தமது கடமை என்று கருதிய ஜெயலலிதா தனது பழைய தீர்மானங்களை தூசு தட்டிக் கொண்டு அதனோடு புதிய கோரிக்கைகளையும் இணைத்துக் கொண்டு புதிய தீர்மானம் ஒன்றை தமிழக சட்ட சபையில் கொண்டுவந்தார்.

அதாவது, இலங்கை இனப்போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து காத்திரமான நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும், இந்த சர்வதேச விசாரணையின் அடிப்படையில் போர்க் குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதி மன்றம் முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும் தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும்வரையும் இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும் இலங்கை தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு தனி ஈழம் குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடத்திலும் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினை கொண்டுவர நடவடிக்கை கொண்டுவர வேண்டும் என்றும் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது என்று கூறினார்.

அதன்பின்னர் இலங்கை தொடர்பாக தனது அறிக்கைகளில் கச்சதீவை இந்தியா இலங்கையிடமிருந்து மீண்டும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றார். பின்னர் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பங்குபற்றுவதாக இருந்தால் இம்முறை சென்னையில் நடை பெறுவதாக திட்டமிடப்பட்டிருக்கும் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளை தமிழகத்தில் நடத்த அனுமதிக்கப்போவதில்லை என்று கடும்போக்காகக் கூறினார்.

ஜெயலலிதாவின் தீர்மானமும் மாணவர்களின் கோரிக்கைகளும் ஒரே தொனியிலானதாக இருந்தாலும் மாணவர்கள் தம்மோடு இணைந்துகொள்வார்கள் என்ற ஜெயலலிதாவின் கணக்கு பிழைத்துப் போனது. மாணவர்கள் ஜெயலலிதாவின் தீர்மானங்களையும் நிராகரித்தார்கள்.

மாணவர்களின் போராட்டம் தனித்துவமாக இருக்க வேண்டும் என்று நகர்த்தப்படுகின்றபோதும், மத்திய அரசுக்கு எடுத்துச் செல்வதற்கு மாணவர்கள் தரப்பு ஒரு தலைமையின் கீழ் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. மாணவர்களின் மேய்ப்பர் யார் என்ற கேள்விக்கு விடை தெரியாததால் மாணவர்களின் போராட்டம் உதிரியானதாக அல்லது திட்டமிடல் இல்லாமல் தொடர்கின்றது. அதனால் தற்போது ஏற்பட்டிருக்கும் ஆபத்து என்னவென்றால் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டமாக வடிவமெடுத்த மாணவர்கள் போராட்டம் தற்போது இந்திய மத்திய அரசுக்கு எதிரானதாகவும், காங்கிரஸ் கட்சிக்கு எதிரானதாகவும் திசை மாறிக்கொண்டு போய்க் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் மாணவர்களோடு ஆட்சியிலிருக்கும் கட்சி என்றவகையில் ஜெயலலிதா நேரடியாக மோதாவிட்டாலும் காவல் துறையின் நடவடிக்கைகள், கல்லூரி களின் செயற்பாடுகள் என்பனவற்றை செயற்படுத்துவதற்கு எத்தனிப்பதானது மோதலாகவே அமையும்.

மறுபக்கத்தில் ஜெயலலிதாவின் தீர்மானங்களை இந்திய மத்திய அரசு பெரிதாக அலட்டிக் கொள்ளாமலே நிராகரித்துவிட்டது. இலங்கை அரசுடனான உறவு நட்புடனான உறவு என்றும், அதன் மீது பொருளாதாரத் தடையையோ, தனி ஈழத்துக்கான வாக்கெடுப்பையோ நடத்த முடியாது என்றும் திட்டவட்டமாக அறிவித்தது.

முன்னரும் ஜெயலலிதா இலங்கையில் தனிநாடு அமைவதே அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு தீர்வாக அமையுமென்று கொண்டுவந்த தீர்மானத்தையும் மத்திய அரசு நிராகரித்தது.

ஆகவே ஜெயலலிதாவுக்கு ஒருவிடயம் தெளிவாகத் தெரியும். அவர் எதைவேண்டு மானாலும் கூறலாம், தீர்மானங்களாக நிறைவேற்றலாம். அவை தமிழ் நாட்டுக் குள்ளும், இலங்கை அரசு மீதான முரண் பாட்டோடும் இருப்போருக்கும் இனிப்பாக இருக்குமே தவிர இந்திய மத்திய அரசு அதை நிராகரித்துவிடும் என்பது.

பொறுப்பு வாய்ந்த பதவியிலிருக்கும் ஜெயலலிதா இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளையோ, அயல் நாடுகளின் உள்ளகப் பிரச்சினைகளையோ தெரிந்து கொள்ளமுடியாதவர் அல்ல. தெரிந்து கொண்டாலும் நடைமுறை யதார்த்தம் பேச அவர் அஞ்சுகின்றார். தமிழ் நாட்டில் இலங்கை பிரச்சினை பற்றிப் பேசும் பெரும்பான்மையினர் கோவணங்கட்டிக் கொண்டு திரிகையில்தான் மட்டும் மாற்று ஆடை அணிந்துகொண்டால் தன்னையும் துரோகியாக்கி தூரப் படுத்திவிடுவார்கள் என்ற அச்சத்தில் நடைமுறை சாத்தியங்களைக் கடந்து தீர்மானங்களை நிறைவேற்றுபவராக இருக்கின்றார்.

**அலசுவது மதியூகி**

ஜெயலலிதாவின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் இலங்கையிலும் பிரதிபலிப்புக்களை காட்டத்தொடங்கியிருக் கின்றது. அதுவே இந்திய வம்சாவழித் தமிழர்களை இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பிவைக்க வேண்டுமென்று குரல்கள் எழுவதற்கு காரணமாக அமைந்தது.

தற்போது கிரிக்கெட் வீரர்கள் தமிழ் நாட்டில் விளையாட தடைவித்திருப்பதும், தமிழ் நாட்டுக்குச் செல்லும் இலங்கையர் களின் எண்ணிக்கை முப்பது விகிதத்தால் வீழ்ச்சி கண்டிருப்பதும் என்று ஜெயலலிதா வின் ஆட்சி மோசமான அடையாளங்களுக் குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஜெயலலிதாவின் தீர்மானங்களால் இலங்கைக்கு எவ்வித பாதிப்புகளும் இல்லை, மாநில அரசுகளுடன் இலங்கை அரசுக்கு எவ்வித இராஜ்ஜிய உறவுகளும் இல்லை. இவ்வாறு இலங்கை அரசு கூறியிருப்பதானது ஜெயலலிதாவுக்கு பெருத்த அவமானமாகவே அமைந்திருக்கும்.

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர் நோக்கியிருக்கும் அரசியல் பிரச்சினைக்கு நடைமுறைச்சாத்தியமான நியாயமான தீர்வொன்றைக் காண்பதற்கு முற்படாமல் வன்முறையை கையில் எடுத்துக் கொண்ட தாலேயே இத்தனை துன்பங்களையும் சந்திக்கவேண்டியதாக இருந்தது.

இன்னும்கூட இலங்கை நாட்டுக்கு ஏற்புடையதும். நடைமுறைச்சாத்திய மானதுமான தீர்வு முயற்சிகளுக்கான இடைவெளி அப்படியே இருக்கின்றது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்போர் நடைமுறைச்சாத்தியமான வழியில் பயணிப்பதற்கு மாறாக முரண்பாடான வழிமுறைகளையே பின்பற்றி தீர்வு முயற்சிகளை இழுத்தடித்துக் கொண்டு அரசியல் இலாபம் தேடுகின்றனர். அதையே தமிழகமும் தொடர்வதால் பலன் ஏது மில்லை.

தவறான அணுகுமுறைகளும், தீர்மானங் களும் குப்பையிலேயே வீசப்படும் என்பதையே மத்திய அரசின் நிராகரிப்பு மீண்டும் தெளிவு படுத்தியிருக்கின்றது மீண்டும் மீண்டும் வரலாறு அணுகுமுறையில் இருக்கும் தவறை சுட்டிக் காட்டிக் கொண்டே இருக்கின்றது.

**ஜெயலலிதாவுக்கு ஒருவிடயம் தெளிவாகத் தெரியும். அவர் எதைவேண்டு மானாலும் கூறலாம், தீர்மானங்களாக நிறைவேற்றலாம். அவை தமிழ் நாட்டுக்குள்ளும், இலங்கை அரசு மீதான முரண் பாட்டோடும் இருப்போருக்கும் இனிப்பாக இருக்குமே தவிர இந்திய மத்திய அரசு அதை நிராகரித்துவிடும் என்பது.**

**பொறுப்பு வாய்ந்த பதவியிலிருக்கும் ஜெயலலிதா இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளையோ, அயல் நாடுகளின் உள்ளகப் பிரச்சினைகளையோ தெரிந்து கொள்ளமுடியாதவர் அல்ல. தெரிந்து கொண்டாலும் நடைமுறை யதார்த்தம் பேச அவர் அஞ்சுகின்றார். தமிழ் நாட்டில் இலங்கை பிரச்சினை பற்றிப் பேசும் பெரும்பான்மையினர் கோவணங் கட்டிக் கொண்டு திரிகையில்தான் மட்டும் மாற்று ஆடை அணிந்து கொண்டால் தன்னையும் துரோகியாக்கி தூரப்படுத்திவிடுவார்கள் என்ற அச்சத்தில் நடைமுறை சாத்தியங்களைக் கடந்து தீர்மானங்களை நிறைவேற்றுபவராக இருக்கின்றார்.**



காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் மன்மோகன் சிங்குக்கே ஹாட்ரிக் சான்ஸ் கிடைக்கலாம். இல்லையெனில் இளவரசர் ராகுல் காந்திக்கு முடிசூட்டப்படலாம். நம்ம பச்சைத் தமிழன் சிதம்பரத்துக்கும் பிரதமர் ஆகும் வாய்ப்பு கிடைக்கலாம்.

பி.ஜே.பி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் அமர்ந்தால் நரேந்திர மோடிக்கு பிரதமர் ஆக வாய்ப்பு அதிகம். அத்வானியின் வாய்ப்பை ஒரேயடியாக நிராகரிக்க முடியாது. சுஷ்மா ஸ்வராஜ், நிதின் கட்காரி, அருண் ஜெட்லிக்குக்கூட கிடைக்கலாம்.

கூட்டணி கட்சிகளின் ஆதரவில் பி.ஜே.பி வரும் பட்சத்தில் நிதிஷ் குமாருக்கோ அல்லது காங்கிரஸ் ஆதரவில் பிற கட்சி களின் ஆட்சிவரும் பட்சத்தில் முலாயம் சிங்குக்கோ வாய்ப்பு கிடைக்கசாத்தியமுண்டு.

இந்தியாவின் அடுத்த பிரதமர் நரேந்திர பாய் தாமோதரதாஸ் மோடிதான் என்று காவிக் கும்பல் காவடி எடுத்து ஆடுகிறது. பார்ப்பன ஊடகங்கள் எல்லாம் துந்துபி முழங்குகின்றன.

# இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்?

**தற்பொழுது** இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் 2014இல் தன் பதவி காலத்தை பூர்த்தி செய்யும் போது அடுத்த பிரதமராக யார் வருவார்? 1 பில்லியன் மக்களின் பிரதிநிதியாக வரும் வாய்ப்பு யாருக்கு இருக்கும்?

பொதுவாக ஒருவர் பிரதமர் ஆகவேண்டும் என்றால் அதற்காக பல ஆண்டுகளுக்கு முன்பே திட்ட மிட்டு அந்த இலக்கை நோக்கி உழைத்திருப்பார் என்று நாம் நினைக் கலாம். ஆனால் இந்தியாவின் பிரதமர் களின் வரலாற்றை சற்று அலசி பார்த்தால் பிரதமராவதற்கு இரண்டு ஆண்டு களுக்கு முன் அவர்கள் திட்டமிடுவது ஒருபுறம் இருக்க, அவர்கள் அரசியலில் தண்ணியில்லா காட்டில் பணிமாற்றம் வாங்கியவர்களை போல் இருந்திருக்கிறர்கள் என்பதுதான் அதிசயமான உண்மை.

**மன்மோகன் சிங்**

மன்மோகன் சிங் 2004இல் பிரத மரானார். ஆனால் 2002ல் அவர் எங்கு இருந்தார் என்பது யாருக்கும் தெரியாது. 1999 நாடாளுமன்ற தேர்தலில் மன் மோகன் தோற்றத்தோடு பா.ஜ.ககூட்டணி சிறப்பாக செயற்பட்டு கொண்டிருந்தது. ஒருவேளை காங்கிரஸ் வெற்றி பெறும் நிலை என்றாலும் சோனியாதான் பிரதமராக அதிக வாய்ப்பிருந்தது. அதனால்தான் மன்மோகன் பிரதமராக ஆக்கப்பட்டபோது, 3 முதல் 6 மாதங் களில் ஆட்சி கலையும் என்று கூறப் பட்டது. ஆனால் எவ்விதஉணர்வுகளை யும் வெளிக்காட்டாமல் வருடங்களை ஓட்டி விட்டார் சிங்ஜி.

**குஜ்ரால்**

1997இல் குஜ்ரால் பிரதமரானது எல்லோருக்கும் தெரியும். ஆனால் எத்தனை பேருக்கு 1995ல் குஜ்ராலை தெரியும் என்பதே கேள்விக்குறிதான். பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத குஜ்ரால் நிலையில்லாமல் இருந்தாலும் 2 வருடங்களை ஓட்டினார்.

**தேவ கவுடா**

1996ல் பிரதமராக தேவ கவுடாவை நியமிக்க நடந்த ஆலோசனை கூட்டத் தில் கூட தேவ கவுடா பங்கேற்க வில்லை. கர்நாடக முதல்வராக இருந்த தேவகவுடா பிரதமராக வரு வார் என்பதை அவரே எதிர்பார்த் திருக்கமாட்டார்.

**வாஜ்பாய்**

1990களின் ஆரம்பத்தில் பி.ஜே. பி.யின் புதிய முகமாக தோற்றமளித்த அத்வானியே பிரதமர் பதவிக்கான வேட்பாளராக இருந்தார். ஹவாலா ஊழலில் தன் மேல் உள்ள குற்றச் சாட்டு தவறு என நிரூபிக்கும் வரை தேர்தலில் போட்டியிடமாட்டேன் என்று அறிவித்தார். அச்சமயம் பார்த்து பி.ஜே.பி.யும் தேர்தலில் வெற்றி பெற அரசியலில் இருந்தே ஓய்வு பெற்று விட்டார் என்று நினைக்கப்பட்ட வாஜ்பாய் பிரதமராகி விட்டார்.

**நரசிம்ம ராவ்**

1989இல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு ராஜீவை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியடைந்த நரசிம்ம ராவ் ராஜீவின் ஆலோசகராக ஒட்டிக் கொண்டார். அதுவே ராஜீவ் கொலையால் திடீரென்று பிரதமர் பதவி கிடைக்க காரணமாக இருந்தது என்று உறுதியாக சொல்லலாம்.

**ராஜீவ் காந்தி**

இந்திரா காந்தி கொலையுண்ட சம்பவம் நடந்திருக்காவிட்டால் பைலட்டாக பணி யாற்றிய ராஜீவ் காந்தி பிரதமராக வரு வதற்கான வாய்ப்பு குறைவு என்பதை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

**மொரார்ஜி தேசாய்**

1972இல் அசுர பெரும்பான்மை யோடு வெற்றி பெற்ற இந்திரா காந்தி 1975இல் அவசரகாலச் சட்டத்தை கொண்டு வந்தபோது அது நீண்ட காலத்துக்கு நீடிக்கும் என்று நினைக்கப்பட்ட போது எங்கே பிரதமர் கனவு எல்லாம்? ஆனால் மொரார்ஜிக்கு அவ்வாய்ப்பு 1977ல் கிடைத்தது.

**விதிவிலக்குகள்**

இந்தியா சுதந்திரமடைந்தபோது சர்தார் படேல், லால் பகதூர் சாஸ்திரி போன் றோரிடமிருந்து போட்டி இருந்தபோதிலும் ஜவஹர்லால் நேரு பிரதமராவார் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். லால் பக தூர் சாஸ்திரிகூட நேருவின் மரணத்தால் திடீரென்று பிரதமரானவர் தான். 1960களின் ஆரம்பத்தில் அவ்வளவாக அறியப்படாத இந்திரா, சரண் சிங், சந்திர சேகர் போன் றோரும் பிரதமருக்கான வேட்பாளர்களாக பிரபலமாக அறியப்படாதவர்கள் தாம்.

**அடுத்த பிரதமர் யார்?**

இதுவரை வந்த பிரதமர்களின் வரலாற்றை பார்த்தோம் என்றால் அடுத்த பிரதமர் யார் என்பதை கணிப்பது இன்னும் கடினமாகி றது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் மன் மோகன் சிங்குக்கே ஹாட்ரிக் சான்ஸ் கிடைக்கலாம். இல்லையெனில் இளவரசர் ராகுல் காந்திக்கு முடி சூட்டப்படலாம். நம்ம பச்சைத் தமிழன் சிதம்பரத்துக்கும் பிரதமர் ஆகும் வாய்ப்பு கிடைக்கலாம்.

பி.ஜே.பி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் அமர்ந்தால் நரேந்திர மோடிக்கு பிரதமர் ஆக வாய்ப்பு அதிகம். அத்வானி யின் வாய்ப்பை ஒரேயடியாக நிராகரிக்க முடியாது. சுஷ்மா ஸ்வராஜ், நிதின் கட்காரி, அருண் ஜெட்லிக்குக்கூட கிடைக்கலாம்.

கூட்டணி கட்சிகளின் ஆதரவில் பி.ஜே.பி வரும் பட்சத்தில் நிதிஷ் குமாருக்கோ அல்லது காங்கிரஸ் ஆதரவில் பிற கட்சி களின் ஆட்சி வரும் பட்சத்தில் முலாயம் சிங்குக்கோ வாய்ப்பு கிடைக்கசாத்தியமுண்டு.

**நரேந்திரபாய் தாமோதர தாஸ் மோடி பிரதமராகுவாரா?**

நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூம், வரலாற்று ஆசிரியர் இராமச்சந்திர குகாவும் என்ன சொல்லுகிறார்கள்?

இந்தியாவின் அடுத்த பிரதமர் நரேந்திர பாய் தாமோதரதாஸ் மோடிதான் என்று காவிக் கும்பல் காவடி எடுத்து ஆடுகிறது. பார்ப்பன ஊடகங்கள் எல்லாம் துந்துபி முழங்குகின்றன.

இப்பொழுதே அவர் பிரதமர் ஆகிவிட்டது போன்ற மாயை ஒன்றை உருவாக்கி யுள்ளனர்.

இந்த விளம்பரம் ஆக்கப்படும் மனிதர் பற்றி இந்தியாவின் பத்திரிகைக் கவுன்சில் தலைவரும், உச்சநீதிமன்ற முன்னாள் நீதி-பதியுமான மார்க்கண்டேய கட்ஜூம், பிரபல வரலாற்றாசிரியர் இராமச்சந்திர குகாவும் என்ன கருதுகின்றனர்? இவர்களின் கணிப்பு என்ன? இந்து ஏட்டிலிருந்தே இங்கே எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

திரு மார்க்கண்டேய கட்ஜு உச்ச நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி. தற்பொழுது அவர் இந்திய பத்திரிகையாளர்கள் சங்கத் தின் (Press Council of India) தலைவராக உள்ளார். அவர், அண்மையில் இந்து பத்திரிகையில் (15.2.2013 பக்கம் 13) எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சுருக்கம். இதோ: குஜராத் மாநிலத்தின் முதல்வர் நரேந்திர மோடியை சிலர் வருங்கால இந்தியப் பிரதமராக விளம்பரப்படுத்தி வருகின்றனர். கும்பமேளாவில் கூடிநின்ற ஆர்.எஸ்.எஸ்.காரர்களும், பாரதீய ஜனதா கட்சியினரும் மட்டும் அல்லாமல், சில படித்த இளைஞர் களும்கூட மோடி பற்றிய பிரச்சாரத்திற்குப் பலி ஆகியுள்ளனர்.

அண்மையில் நான் டில்லியிலிருந்து போபாலுக்கு விமானம்மூலம் பயணம் செய்தேன். என் பக்கத்தில் ஒரு குஜராத்தி வணிகர் அமர்ந்திருந்தார். நரேந்திர மோடியைப்பற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேட்டேன். அவர் மோடியைப் பற்றி வானளாவப் புகழ்ந்தார். 2002 ஆம் ஆண்டில் சுமார் 2000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதைப்பற்றி கேட்டேன். அவர் குஜராத்தில் எப்பொழுதும் முஸ்லிம்கள் தொல்லை கொடுத்துக்கொண்டு இருந்தனர். 2002-க்குப் பிறகு அவர்கள் நடுங்கிப் போய்விட்டனர். இப்பொழுது அமைதி நிலவுகிறது என்று சொன்னார். நான் சொன்னேன், இப்பொழுது நிலவுவது வெறும் மயானஅமைதி. நியாயமும் அத்துடன் இணைந்து இருந்தால்தான் அது நிலைத்து நிற்கும் என்று சொன்னேன். உடனே அவர் தனது இருக்கையை மாற்றிக்கொண்டு போய்விட்டார்!

உண்மை என்னவென்றால் இன்றைய குஜராத்தில் முஸ்லிம்கள் அச்சப்படுத்தப் பட்டு, 2002 நிகழ்ச்சியைப் பற்றி குறிப்பிடு வதற்கே அஞ்சுகின்றனர். திரும்பவும் தாக்கப்பட்டு பழிவாங்கப்படுவோம் என்று பயம் கொண்டுள்ளனர். 200 மில்லியன் முஸ்லிம் மக்கள் தொகையினர் ஒட்டு மொத்தமாக அனைவரும் மோடிக்கு எதிரா-கவே உள்ளனர் - விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரைத் தவிர கோத்ரா நகரில் 59 இந்துக்கள் ரயிலில் எரிக்கப்பட்டதற்கான பதிலடிதான் தன்னெழுச்சி நிகழ்ச்சியாகும் என்பதை என்னால் ஏற்கமுடியாது. தவிர கோத்ரா நிகழ்விற்குப் பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் அதற் காக குஜராத்தில் உள்ள அத்தனை முஸ்லிம்களையும் தாக்குவது எந்த விதத்தில் நியாயமானது? குஜராத்தின் மொத்த சனத்தொகையில் முஸ்லிம்கள் வெறும் 9 சதவிகிதம்தான். அவர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டும், வீடுகள் எரிக்கப்பட்டும் மற்றும் சொல் லொணாக் கொடுமைகளுக்கும் ஆட்படுத் தப்பட்டுள்ளார்கள்.

2002இல் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை பொங்கி எழுந்த கிளர்ச்சி! ஜெர்மனியில் 1938இல் கிருஷ்டலினா (Kristallnacht) என்ற இடத்தில், யூதர்கள் கொல்லப்பட்டு, அவர்கள் வழிபாட்டு இடங் கள் எரிக்கப்பட்டு கடைகள் கொள்ளையடிக் கப்பட்டதைத்தான் நினைவுகூர வைக்கிறது. ஜெர்மானிய அரசுப் பிரதி ஒருவர் ஒரு யூத இளைஞனால் பாரிஸ் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்குக் காரணம் அந்த இளைஞன் ஜெர்மானிய நாஜிக் கட்சியினரால் கொடுமைப்படுத்தப்பட்டதுதான். அதனால்தான் யூதர்கள் மீது வன்முறை ஏவப்பட்டதாக தங்களது கொடுஞ் செயலை நாஜிக்கள் நியாயப்படுத்தினர். மக்கள் தன்னிச்சையாகக் கிளர்ந்து எழுந்ததால் நடந்த தாக நாஜி அரசாங்கம் சொன் னாலும்கூட, உண்மையில் திட்டமிடப்பட்டு, நாஜி அதிகாரிகளால், மதம்பிடித்த மக்களைப் பயன்படுத்திச் செய்யப் பட்டகொடூரம்தான் அது.

வரலாற்றுப்படி இந்தியா பல வந்தேறிகளைக் கொண்டு இருப்பதால் ஏராளமான வேறுபாடுகளைக் கொண் டுள்ளது. ஆகவே இந்தியா ஒன்றுபட்டு இருக்கவேண்டுமானால், எல்லா இனத்த வருக்கும், மதத்தினருக்கும், மொழி யினருக்கும் சமமான வாய்ப்புகளும், நீதியும்கொண்ட ஜாதி மத வேறு பாடற்ற ஆட்சிமுறை வேண்டும். முன்னோடிகளான அக்பர்முதல் நேருவரை அதைத்தான் புரிந்து கொண்டு அமைதியான ஆட்சி முறைக்கு வழிவகுத்தனர்.

இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே உரித்தானது இல்லை. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், ஜைனர்கள் போன்ற அனைவருக்கும் பொதுவானது. 2002-இல் குஜராத்தில் நடந்த கொடுமை யாராலும் மறக்கவோ, மன்னிக்கப் படவோ முடியாதது.

மோடியின் விசுவாசிகள் இந்த நிகழ்வுகளுக்கும், மோடிக்கும் எந்த வித தொடர்புமில்லை. எந்த நீதிமன்றத் தாலும் அவர் தண்டிக்கப்படவுமில்லை என்று கூறுகின்றனர். அந்த கால கட்டத்தில் அவர்தான் முதல்வராக இருந்துள்ளார். ஆகவே அவர் காலத் தில் நடந்த கொடுமைகளுக்கு அவர் பொறுப்பல்ல என்று எப்படிச்சொல்ல முடியும்?

தான், குஜராத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதாக நரேந்திரமோடி குறிப்பிடுகிறார். எது வளர்ச்சி? மக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரம் உயருவது தான் வளர்ச்சி! ஆனால் மோடி, பெரிய வணிக நிறுவனங்களுக்கு சலுகை கள் பல கொடுத்துள்ளார்.

அவர்களுக்குக் குறைந்த விலையில் மின்சாரமும், நிலங்களும் கொடுத் துள்ளதால் மட்டும் பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடவில்லை.

குஜராத்தில் உள்ள குழந்தைகளில் 48 சதவீதம் பேர் ஊட்டச்சத்து குறை பாடினால் அவதியுறுகின்றனர். இது தேசிய அளவைவிட அதிகம். குழந்தைகள் இறப்பு விகிதமும், கர்ப்பிணிப் பெண்களின் சாவு விகித மும் அதிகம் பழங்குடி மற்றும் தாழ்த் தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களில் 57 சதவிகிதம் ஏழ்மை நிலைக்குக் கீழேயுள்ளனர். சுற்றுச் சூழல் கேடுகள் வளர்ந்துவருகின்றன. கல்வித்தரம் குறைந்து வருகிறது.

உடல் நலம், கல்வி, வருமானம் ஆகிய துறைகளில் மற்ற இந்திய மாநிலங்களை விட குஜராத் 8ஆவது இடத்தில்தான் உள்ளதாக ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

வணிகத் துறையினர் மோடியைப் பாராட்டலாம். ஆனால், இந்தியாவில் அவர்கள் மட்டும்தான் உள்ளனரா? என்று கட்ஜு எழுதியுள்ளார்.

**வரலாற்று ஆசிரியர் இராமச்சந்திர குகா**

வரலாற்று ஆசிரியர் இராமசந்திர. குகா என்ன சொல்லுகிறார்? அதுவும் இந்து ஏட்டில் (18.2.2013) வெளி வந்ததுதான். சமீபத்தில் நரேந்திர மோடியைப் பேட்டிகண்ட ஒரு பத்திரிகையாளர் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

குஜராத் கடல் பகுதியை மட்டுமே கொண்டிருக்கிறது. மூலப்பொருட்கள் எதுவுமே இல்லை என்றாலும் குஜராத் அனைத்திலும் முதன்மை கண்டுள்ளது. அசாம், ஜோர்க்கண்ட், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கும் இயற்கை வளங்கள் எங்களிடம் இருந்தால் இந்தியாவின் முகத்தையே மாற்றிக் காட்டியிருப்பேன் (தி. டெலி கிரா.்.ப் ஜனவரி 18.2013).

இதுதான் மோடி கொடுத்த பேட்டி சாதனைகளைக் குவிக்கும் வீரனாகத் தன்னைக் காட்டிக் கொண்டுள்ளார் மோடி. தான் பிரதமரானால் இந்தியா வின் வளர்ச்சி 8 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதத்திற்கு எட்டிப் பிடித்து விடும். ஒரே இரவில் அதிகாரிகள் எல்லாம் கோப்புகளை முடித்துவிடு வார்கள். நிர்வாகத்தில் ஊழலே தலை காட்டாது. வறுமைக்கோடு பூஜ்ஜியத்தை நோக்கி விரையும் தொடர்வண்டிகள் ஒழுங்காக நேரப்படி பயணிக்கும் என்றெல்லாம். மோடியின் இந்தக் கூற்றையெல்லாம் அப்படியே நம்பி ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் எல்லாம் யார்? பல தரப்பட்டவர்கள் தனியார் நிறுவனங்களின் அதிகாரிகள், பெரும் முதலீட்டாளர்கள் மேற்கு நாடுகளின் தூதர்கள் மறந்துவிட வேண்டாம். இளஞ்சிவப்பு அல்லது வெள்ளைச் செய்தித்தாள்களின் தொடர் எழுத்தாளர்களும் இந்தப் பட்டியலில் அடங்குவார்கள். இவற்றை எதிர்ப்பவர்கள் இருவகையினர். அவர் கள் மோடியின் சாதனைகளைப் புஸ் வாணம் ஆக்கிவிடுகின்றனர்.

நேருவின் ஆதரவுக் கொள்கையு டையவர்கள் காங்கிரஸ்காரர்கள். அவர்கள் 2002 இல் குஜராத்தில் நடைபெற்றதுபோல முஸ்லிம் எதிர்ப் பைத் தொடரக் கூடியவர் மோடி. தனிப்பட்ட முறையில் நிரூபிக்கப்படாவிட்டாலும் குஜராத்தில் நடைபெற்ற வன்முறைகள், படுகொலைகள்




ரிஷி

# புலிகளின் வீழ்ச்சி! இறுதி நாட்கள்...

**காமினி** திசநாயகேவுக்கும், ராஜிவ் காந்திக்கும் எப்படி நெருக்கம் ஏற்பட்டது? கிரிக்கெட் விளையாட்டினால் ஏற்பட்ட நெருக்கம் அது. காமினி திசாநாயகே தான் அந்த நாட்களில் இலங்கை கிரிக்கட் போர்டின் சேர்மனாக இருந்தார். அப்போது இந்திய கிரிக்கட் போர்டின் சேர்மனாக இருந்தவர், N.K.P சால்வே (நரேந்திர குமார் சால்வே). காமினியும், சால்வேயும் நண்பர்கள்.

N.K.P சால்வே, ராஜிவ் காந்தியுடன் நெருக்கமானவர். (சால்வே சமீபத்தில் – 2012 ஏப்ரல் 1ஆம் திகதி தனது 91ஆவது வயதில் டில்லியில் மரணமடைந்தார்.)

இப்படி இவர் மூலமாக அவர், அவர் மூலமாக மற்றையவர் என்று, ஜே.ஆர்.ஜெயவர்த்தனே – ராஜிவ் காந்தி – டிக்சித் – காமினி திசாநாயகே கூட்டணி ஏற்பட்டது. இவர்கள் இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். ஜே.ஆர்.ஜெயவர்த்தனேவின் அமைச்சரவையில் இருந்த மற்றய அமைச்சர்களுக்கே கூடத் தெரியாமல்! (அப்போது இலங்கை பிரதமராக இருந்த பிரேமதாசாவுக்குக்கூட, ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தம் பற்றி எதுவும் தெரியாது!)

கொழும்பு – புதுடில்லி – திம்பு பெங்களூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற சில பேச்சுவார்த்தைகளை அடிப்படையாக வைத்தே இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது என்றாலும், அதில் தமிழர்கள் யாருடைய பங்களிப்பும் இருக்கவில்லை. இந்த கூட்டணிகள் எதிலும் தமிழர்கள் யாரும் இல்லை.

அதற்கு காரணம், என்னவென்று சொல்ல முடியும். சொன்னால் துரோகி பட்டம் கட்டிவிடுவார்கள். அதெல்லாம் ஜீன் சமாச்சாரம்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் பற்றிய தகவல்கள் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன. இந்தியத் தூதரகத்தின் ஊழியர்களைக்கூட நம்பாமல் டிக்சித் தாமே நேரடியாக ஒப்பந்தம் பற்றிய குறிப்புக்களை டைப் செய்தார். இந்திய தயாரிப்பு என்று கூறப்படும் இந்த ஒப்பந்தத்தின் ஆரம்ப கால டைப்பிங்கை, இந்திய தூதர் டிக்சித் எங்கே வைத்து செய்தார் தெரியுமா?

கொழும்பில் உள்ள காமினி திசநாயகேவின் நண்பர் ஒருவருடைய வீட்டில் வைத்துத்தான் டைப் செய்தார்.

டில்லிக்கும் கொழும்புக்கும் இடையே ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு, அது இறுதி வடிவமும் பெற்ற பின்னர், அன்றைய இலங்கை அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் முக்கியமான சிலருக்கு மாத்திரம் சொல்லலாம் என்று தீர்மானிக்கப் பட்டது.

அன்றைய அமைச்சர் (இன்று எதிர்க்கட்சித் தலைவர்) ரணில் விக்ரமசிங்கே, இந்த ஒப்பந்தத்தை அமைச்சரவையின் முன்னே வைக்க வேண்டும் என்று கோரினார். ஜே.ஆர். ஜெயவர்தனேவும் அதற்குச் சம்மதிக்கவே, ஜூலை 15ஆம் திகதி, முதல் தடவையாக இலங்கை அமைச்சர்களின் கண்களில் ஒப்பந்தம் காட்டப் பட்டது.

இந்த ஒப்பந்தம் முழுமையாக வெளியிடப்படவில்லை.

இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையிலான இரகசிய டீல்கள் சில கடைசிவரை வெளியிடப்படவே

## இரகசிய ஒப்பந்தம்

இல்லை. ஒப்பந்தத்தை முன்னின்று செய்த தலைவர்களின் அரசியல் எதிர்காலத்தை அது பாதிக்கலாம் என்று கூறப்பட்டு, இரகசியமான சில பகுதிகள் தொடர்ந்தும் இரகசியமாகவே வைக்கப்பட்டன.

அப்படியான டீல்களில் ஒன்று என்ன என்று, பின்னாட்களில் தகவல் கசிந்தது.

அது என்ன என்றால், இலங்கையின் வடக்கு மாகாணத்தையும் (யாழ்ப்பாணம்) கிழக்கு மாகாணத்தையும் (திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை) ஒன்றாக இணைப்பதற்கு இலங்கை அமைச்சரவையின் சம்மதம் கிடைத்தால், இந்தியா அதுவரை ஈழ விடுதலை இயக்கங்களுக்கு செய்து வந்த உதவிகள் அனைத்தையும் நிறுத்திக்கொள்ளும். அவர்களை தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கும்.

இந்த விவகாரம் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் இரகசிய பகுதியாக இருப்பது வெளியே தெரியவந்தால், அப்போது என்ன ஆகியிருக்கும்? இதோ பாருங்கள்:

1) சிங்கள மக்களின் எதிர்ப்பை ஜே.ஆர்.ஜெயவர்தனேவின் அரசு



சந்திக்க நேரிடும்.

2) இந்தியா, ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்த கதையை வெளிப்படையாக ஒப்புக் கொண்டதாகிவிடும்.

3) ஈழ விடுதலை இயக்கங்கள் இந்தியாவை சந்தேகப்படுவார்கள். இந்தியாவின் பேச்சை கேட்க மாட்டார்கள்.

இதனால்தான் இதுபோன்ற டீல்கள் எல்லோரிடமும் இருந்து மறைக்கப்பட்டன.

ஆனால் இதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் தேவை என்பதால், ஒப்பந்தம் முக்கிய அமைச்சர்களுக்கு காட்டப்பட்டது. அதை அப்போது பிரதமராக இருந்த (பின்னாட்களில் ஜனாதிபதி) பிரேமதாச எதிர்த்தார். (விடுதலைப் புலிகள் எதிர்த்த அதே ஒப்பந்தத்தை எதிர்த்த பிரேமதாசா, 1993இல் விடுதலைப் புலிகளின் தற்கொலை தாக்குதலில் கொல்லப் பட்டார்)

இந்த இரகசிய ஒப்பந்த விஷயத்தில் மற்றுமோர் வேடிக்கை என்னவென்றால், பிரதமர் பிரேமதாசவுக்கு கொழும்பு முழுவதும் கண்களும் காதுகளும் உண்டு. அதனால், பிரேமதாச லண்டன், டோக்கியோ ஆகிய நகரங்களுக்கு சுற்றுப்பயணம் செய்த வேளையிலேயே, இப்படியான இரகசியச் சந்திப்புகள் நடைபெற்று, ஒப்பந்தம் உருவாக் கப்பட்டது.

விஷயம் பிரேமதாசவுக்குத் தெரியவந்த போது, "எமது ஜனாதிபதி நாட்டையே இந்தியர்களிடம் விற்றுவிட்டார் என்பது மாத்திரமல்ல, தனது பிரதம மந்திரியிடமே ஒரு இரகசியத்தைச் சொல்லாமல் மறைத்து வைத்திருந்தார்" என்றார் கோபமாக.

ஜூலை 15ஆம் திகதி இலங்கை அமைச்சர்கள் சிலருக்கு ஒப்பந்தம் காண்பிக்கப்பட்டது. மறுநாள் 16ஆம் திகதி டிக்சித், இலங்கையின் 10 அமைச்சர்களை சந்தித்து ஒப்பந்தம் பற்றி விளக்கினார். ஜூலை 21ஆம் திகதி சென்னை சென்ற டிக்சித், அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரைச் சந்தித்து ஒப்பந்தம் பற்றி எடுத்துக் கூறினார்.

கொழும்பில் இப்படியாக பல இரகசிய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில்தான், தொடரின் ஆரம்பத்தில் கூறியது போல, புதுடில்லி நேரடியாக காரியத்தில் இறங்காமல், கொழும்புவில் உள்ள இந்திய தூதர் டிக்சித் மூலமாக கொழும்புவின் அனுமதியை பெறுவது என்ற முடிவுக்கு வந்தது.

டிக்சித்துக்கு டில்லியில் இருந்து தகவல் போனது – "யாழ்ப்பாணத்திலுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை புதுடில்லிக்கு அனுப்பி வைக்கவேண்டும். அவரை அழைத்து செல்ல இந்திய விமானப் படையின் ஹெலிகொப்டர் யாழ்ப்பாணத்தில் தரையிறங்க இலங்கை அரசின் அனுமதி வேண்டும்".

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

வதை 55

மணியம்

**எமது** இந்தத் திட்டங்கள் அனைத்தும் எமது சந்திப்பு சம்பந்தமான நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் பதியப்பட்டு, தில்லையின் வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. அதையும் புலிகள் கைப்பற்றி விட்டார்கள்.

புலிகளைப் பொறுத்தவரை, புலிகளது ஆட்சியதிகாரத்தின் கீழ் உள்ள பகுதியில் நாம் இரகசியமாகக் கூட்டம் கூடியது முதல் தவறு. அதுமட்டுமின்றி அக்கூட்டத்தில் ஓர் அமைப்பை (கல்வி வட்டத்தை – கல்விக்கும் தேசியத் தலைவருக்கும் உள்ள எட்டாப் பொருத்தம் என்பது எல்லோரும் அறிந்தது தான்) உருவாக்கியது மகா குற்றம். அதில் மாணவர்களைக் குறி வைத்தது மகா குற்றம். எனவே இந்தியாவில் சுதந்திரப் போராட்ட காலத்தில் லாகூர் சதி வழக்கு, மீரத் சதி வழக்கு என பல சதி வழக்குகளை தேசபக்தர்களுக்கு எதிராக பிரித்தானிய வெள்ளை ஏகாதிபத்தியம் சோடித்து நடாத்தியது போல, எமது கல்வி வட்ட விவகாரத்தையும் புலிகள் தமக்கு எதிரான ஒரு சதியாகவே பார்த்தார்கள். பார்த்தார்கள் என்றால், அதன் தொடர்ச்சி புலிகளைப் பொறுத்தவரையில் வெள்ளை ஏகாதிபத்தியம் செய்தது போன்று நீதிமன்ற விசாரணை அல்ல என்பது, 'தமிழ் ஈழ'த்தின் சிறு குழந்தைக்குக்கூடத் தெரியும்.

எனவே என்னைக் கைதுசெய்தது எதற்காக என்ற விசாரணை இன்னமும் பாதி வழி தாண்டாத நிலையில், விசாரணைக்குள் விசாரண்யான இந்த கடிதங்கள் மற்றும் கல்வி வட்டம் தொடர்பான விசாரணைகள் வந்து என்னை மாபெரும் குற்றவாளியாக்கி விட்டது. இதற்கே புலிகள் எனக்கு மரண தண்டனை தரக்கூடும். இருந்தாலும் காந்தி என்னவோ தெரியவில்லை சற்றுப் பொறுமையுடன் இந்தக் கல்வி வட்டம் தொடங்கப் பட்டதற்கான காரணத்தை அடுத்த நாள் என்னைத்தான் விசாரிக்கும்போது கேட்டான். அவனது வழமையான அடிதடிப் பாணியை விட்டு விட்டு இந்த மாதிரி ஒரு அணுகுமுறையைக் கைக்கொண்டபடியால், நேற்று இரவு இது பற்றி வேறு யாருடனோ ஆலோசித்திருக்கிறான் என்பது விளங்கியது.

காந்தியின் விசாரணைகளுக்கு மத்தியில், தயாபரனின் வழமையான விசாரணையும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அதுமாத்திரமின்றி இடையிடையே வேறு சிலரும் வெளியிலிருந்து வந்து அரசியல் ரீதியிலான விசாரணையும், இராணுவ ரீதியிலான விசாரணையும் செய்து கொண்டிருந்தனர். அவ்வாறு அங்கு ஒருமுறை சந்தித்தவன் பொட்டம்மான். இன்னொருமுறை கபிலம்மான். பின்னர் பொட்டம்மானை இரு தடவையும், கபிலம்மானை ஒரு தடவையும் சந்தித்தேன்.

என்னைப் புலிகள் கடத்தி மூன்று கிழமைகளுக்கு மேலாகிவிட்ட போதிலும், என்ன காரணத்துக்காக என்னைத் தாங்கள் கடத்தினோம் என்பதை இதுவரை புலிகள் தெரிவிக்கவில்லை. குறிப்பான காரணங்கள் எதுவும் இல்லாமல் தங்களுடைய அரசியல் எதிரி என்ற காரணத்துக்காகக் கடத்துவதானால், அவர்கள் என்னை எப்பொழுதோ கடத்தியிருக்க வேண்டும். அன்ரனை (விவேகானந்தன்) புலிகள் கடத்தியவுடன் அப்படி ஒரு எதிர்பார்ப்பில் நான் இருந்தேன். பின்னர் செல்வி, தில்லை போன்றோரைக் கடத்திய நேரத்திலும் நான் அதனை எதிர்பார்த்தேன். அப்படியில்லாமல் இதுநாள்வரை விட்டு வைத்துவிட்டு, இப்பொழுது திடீரெனக் கடத்துவதானால் நிச்சயமாக ஏதோ காரணம் இருக்கவேண்டும்.

கடந்து இந்த மூன்று வாரங்களிலும் வதை முகாம் வாழ்க்கையில் குறிப்பிடும்படியான மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. ஒரேயொரு மாற்றம், துனுக்காய் வதை முகாமில் வைக்கப் பட்ட நாலாயிரம் பேரும் பெரிய விசாரணைகள் எதுவும் இல்லாமல் கொல்லப்பட்டது போல இல்லாமல், இங்கு விசாரித்து விசாரித்துக் கொல்கிறார்கள். அவ்வளவுதான். அந்த கெட்ட நாளை எதிர்பார்த்து ஒவ்வொரு கைதியும் நடுக்கத்தில் தவித்தனர். புலிகள் பார்வையில் மிகக் குறைந்த குற்றங்கள் செய்தவர்கள் என்று புலிகளால் கருதப்படுவோரை மட்டும் தாம் நடாத்தி வந்த 'பண்ணை' (திறந்தவெளிச் சிறைச்சாலை) ஒன்றுக்கு அனுப்பி கட்டாய உழைப்பில் ஈடுபடுத்துவதாக சிறைக்குள் இருந்த சில புலி உறுப்பினர்கள் மூலம் அறிய முடிந்தது.

சாப்பாட்டைப் பொறுத்தவரையிலும், குளிப்பு முழுக்கைப் பொறுத்தவரையிலும் பழைய பல்லவிதான். அதே வெள்ளைப் பச்சரிசி சீனிப் பொங்கல்தான் மூன்று வேளை உணவு. சில வேளைகளில் அதுவும் இரண்டு வேளைகளாகக் குறைந்துவிடும். குளிக்கும்போது பாவிப்பதற்கென அங்கிருந்த அவ்வளவு பேருக்குமாக மாதத்துக்கு ஒரேயொரு 'லைப்போய்' சோப் வழங்கப் படும். தண்ணீர் வந்தால்தானே குளிக்க முடியும்! எனவே புலிகள் கருதியது போல அந்த ஒரு சவர்க்காரம் ஒரு மாதத்துக்குத் தாராளமாகப் போதும்!!

நான் இரவில் தூக்கத்தைத் தொலைத்து வெகுநாட்களாகிவிட்டன. வீட்டாரைப் பற்றிய கவலை ஒருபுறம். இன்னொருபுறம் அடுத்த நாள் விசாரணையில் என்ன கேட்கப்போகிறார்கள் என்ற யோசனையே மேலோங்கி நிற்கும். அந்த மன உளைச்சலால் நான் மட்டுமின்றி விசாரணையில் இருக்கும் கைதிகள் அனைவரும் பெரும்பாலும் இரவு நேரங்களில் தூங்காமல் தான் இருப்பார்கள். நித்திரை கொள்ளும் சிலர் கூட பயங்கரக் கனவுகளைக் கண்டுவிட்டு நள்ளிரவில் வீரிட்டுக் கத்துவது சர்வசாதாரணம். அதில் "ஐயோ அடிக்காதையுங்கோ" என்று கத்திக் குளறுவதுதான் நான் அங்கிருந்த காலத்தில் பல தடவைகள் கேட்ட ஓர் ஓலம். இரவின் அந்தகாரத்தில் இந்த கெட்ட கனவுகளின் ஓங்காரம் மரண தேவதையை பக்கத்தில் நிறுத்தி வைப்பது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தும்.

எனது விசாரணை இன்னமும் முடிவடையாதபடியால், என்னுடன் பெரும்பாலான கைதிகள் மனம்விட்டுப் பழகப் பயந்தனர். இருப்பினும் அவர்கள் என்னுடன் கதைப்பதற்கு மிக ஆவலாக இருக்கிறார்கள் என்பது, அவர்கள் என்னைப் பார்த்து அன்புடனும் வாஞ்சையுடனும் புன்னகைப்பதிலிருந்து புரிந்தது. சிலர் பட்டும்படாமல் சாதாரண விடயங்களை என்னுடன் பகிர்ந்துகொண்டனர்.

(துன்பியல்கள் தொடரும்...)



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



பொறையுடைமை

**இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.**

வறுமையுள் வறுமை, விருந்தினரைப் போற்றாமல் நீக்குதல்; வல்லமையுள் வல்லமை என்பது அறிவிலார் தீங்கு செய்தலைப் பொறுத்தலாகும்.

குறள்:153

# புலியைக் கொன்ற அதிசயப் பசுக்கள்!



**முத்து** ஒரு அநாதை வாலிபன். மாடு மேய்ப்பது ஒன்றுதான் அவனுக்குத் தெரிந்த தொழில். நான்கு பசுமாடுகளைத் தவிர வேறு எதுவும் அவனுக்குக் கிடையாது. தினமும் தன் கிராமத்தின் எல்லையில் இருந்த காட்டிற்குத் தன் மாடுகளை அழைத்துச் சென்றபின், அவற்றை மேய விட்டு விட்டு, முத்து ஒரு மரத்தடியில் அமர்ந்து குழல் ஊதிக் கொண்டே பொழுதுபோக்குவான்.


ஒருநாள் முத்து அவ்வாறு குழல் ஊதிக் கொண்டிருக்கையில், திடீரென ஒரு புலியின் உறுமல் சத்தம் கேட்டது. தன் மாடுகளைப் புலி கொன்றுவிடுமே என்று பதறிக் கொண்டே எழுந்த போது, அவன் கண்களில் ஓர் அதிசயக் காட்சி தென்பட்டது. புலியைக் கண்டு பயந்து போய் தலைதெறிக்க ஓடாமல், அவனுடைய நான்கு மாடுகளும் புலியைச் சூழ்ந்து கொண்டு அதைத் தன் கொம்புகளால் தாக்கின.

வாழ்வில் முதன்முறையாக தன் பசுமாடுகள் தாக்குவதைக் கண்டு அதிர்ச்சியுற்ற புலி தப்பித்து ஓட முயற்சித்தது. ஆனால் மாடுகள் அதைத் தப்பிக்கவிடாமல் தன் கொம்புகளால் குத்திக் கிழித்துக் கொன்றுவிட்டன.

அன்று முதல், தன் மாடுகளின் மீது முத்துவிற்குப் பெருமதிப்பு ஏற்பட்டு விட்டது. அவற்றைப் பொக்கிஷம் போல், பத்திரமாகப் பாதுகாத்தான். அந்த ஆண்டு வானம் பொய்த்ததால், அவனுடைய மாடுகளுக்கு சரியானபடி தீவனம் கிடைக்கவில்லை. தன்னுடைய மாடுகள் அரை வயிற்றுக்கு உண்டு பட்டினி கிடப்பதைக் காண சகிக்கவில்லை. அதனால் அந்த கிராமத்தை விட்டுத் தன் பசுக்களுடன் வெகுதூரம் சென்று ஒரு மலைப்பிரதேசத்தை அடைந்தான்.

அங்கு கிராமத்தினர் தங்கள் மாடுகளை மேய்க்க அந்த இடத்திற்கு செல்லாமல் இருப்பது முத்துவிற்கு ஆச்சரியத்தை அளித்தது. உடனே அவன் கிராமத்து மக்களிடம் அதற்கான காரணத்தை கேட்க, அவர்கள், "குன்றுகள் நிறைந்த அப்பகுதியில் பல புலிகளும், சிங்கங்களும் எங்கிருந்தோ வந்து சேர்ந்துவிட்டன. அங்கு மேயச்செல்லும் எங்கள் மாடுகள் காணாமற் போய்விட்டன. ஆனால் உண்மை என்னவென்றால், அந்தக் குன்றுப் பிரதேசத்தில் கஜராஜன் என்ற திருடன் வசித்துவந்தான். அவன் பசுக்களைத் திருடி விற்றுக் கொண்டிருந்தான். அந்த விடயம் முத்துவுக்கு தெரிந்துவிட்டது.

முத்துவை ஒரு சந்தர்ப்பத்தில் கையும் களவுமாக பிடித்துவிட்டான். இதை அறிந்த கிராமத்தினர் கஜராஜனை அடித்துத் துவைத்தனர். அவன் அன்றே அக்கிராமத்தையே விட்டு ஓடியேவிட்டான். அன்றுமுதல், முத்து அந்த கிராமத்திற்குத் தலைவன் ஆகிவிட்டான். கிராமத்தினரும் பயமின்றி தங்கள் கால்நடைகளை அங்கு மேய்க்க அனுப்பினர்.



இரண்டு படங்களுக்கிடையில்
5 வித்தியாசங்கள் உள்ள கண்டுபிடிக்கவும்.

# மர்ம எண்கள்!

13ஆம் நூற்றாண்டில் இத்தாலியக் கணக்கு நிபுணரான லியோனார்டோ ஃபிபனோச்சி என்பவர் வகுத்த எண் வரிசைதான் இந்த ஃபிபனோச்சி எண்கள். பூஜ்ஜியத்தில் தொடங்கி, 0. 1. 1. 2. 3. 5. 8. 13. 21. 34. 55. 89. 144 என்று செல்கிறது இந்த எண் வரிசை.

இந்த வரிசையை உற்று கவனித்தாலே தெரிந்துவிடும். ஒரு எண் தனக்கு முன் உள்ள எண்ணோடு கூட்டப்பட்டு அந்தக் கூட்டுத்தொகையே அடுத்த எண்ணாக இந்த வரிசையில் அமர்கிறது.

### சரி, இந்த எண்களில் என்ன விசேஷம்?

"உங்கள் தோட்டத்தில் இருக்கும் மரத்தில் எத்தனை கிளைகள் உள்ளன என்று எண்ணிப் பாருங்கள். அல்லது ஒரு அன்னாசிப் பழத்தில் உள்ள முள் முனைகளை எண்ணிப் பாருங்கள். அதில் வரும் கூட்டுத்தொகை ஃபிபனோச்சி வரிசை எண்களில் ஒன்றாக இருக்கலாம்" என்று பல காலமாகவே சொல்லி வந்திருக்கிறார்கள் கணித நிபுணர்கள்.

இந்தக் கூற்றை விஞ்ஞானிகள் உதாசீனப்படுத்தியே வந்தனர். ஆனால், இன்று கணித மேதைகளும் விஞ்ஞானிகளும் இந்த ஃபிபனோச்சி எண்களை நுட்பமாக ஆராயத் துவங்கியிருக்கிறார்கள். அண்டத்தின் இயக்கத்துக்கும் இந்த எண்களுக்கும் தொடர்பு இருக்கக் கூடும் என்ற நம்பிக்கை இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பின் தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த ஃபிபனோச்சி எண்கள் புகாத அம்சமே உலகில் இல்லை எனலாம். உலக இலக்கியங்கள் அனைத்திலும் உள்ள யாப்பு அமைப்பு முறைகூட இந்த எண் வரிசையை அடிப்படையாகக் கொண்டிருப்பதை கணக்கிட்டிருக்கிறார்கள் நிபுணர்கள்.

இது மட்டுமல்ல பங்குச்சந்தையின் ஏற்ற இறக்கங்களை ஆராய்ந்ததிலும் அடிக்கடி ஃபிபனோச்சி எண் வரிசையின் அடிப்படையில் இவை நடைபெறுவது தெரிந்தது. குதிரைப் பந்தயத்தில் கூட ஜெயிக்கும் குதிரைகளின் எண்களை வரிசைப்படுத்தியபோது, அது ஃபிபனோச்சி எண் வரிசைப்படி இருந்திருக்கிறதாம்.

விண்வெளியில் உள்ள நட்சத்திரக் கூட்டங்களில் உள்ள நட்சத்திர எண்ணிக்கை கூட இந்த வரிசை எண்களில் ஒன்றாக இருக்கிறதாம். இதனால்தான் இந்த எண் வரிசைக்கும் அண்டங்களின் உருவாக்கத்துக்கும் ஏதோ அபூர்வத் தொடர்பு இருக்கலாம் என சந்தேகிக்கிறார்கள் விஞ்ஞானிகள். ஒருவேளை, ஆண்டவன் போடுவது இந்தக் கணக்குதானோ!

# சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 16.04.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 986**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 984**

பரிசுக்குரியவர்:
ஸ்ரீ.சஞ்சுதன், கோவில் வீதி,
நல்லூர்.

பாராட்டுக்குரியவர்கள்

01. கு.மாதங்கி, யா/இனுவில் இந்துக் கல்லூரி.
02. உ.அபர்ணா, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.
03. ஏ.எச்.ஏ.ரிஹானா, ஹெக்கிராவ.
04. ம.ருக்ஷிகா, றெட்பானா, விசுவமடு.
05. கே. மிதுஷிகன், செங்கலடி, மட்டக்களப்பு.
07. ஆர்.குந்தவை, காளி கோவிலடி, திருகோணமலை.
08. அ.ரமணன், பிரதான வீதி, கண்டி.



## சிறுவர் உலகம் சிறுவர்க்கே

சின்னஞ்சிறு துரும்புகளாய்
துள்ளிக் குதித்துத் திரியும்
செல்வக் குழந்தைகளே - நம்
நாளைய வம்சமாம்
நாம் நாளைய தலைவராம்.

அன்பாகப் பழகி பண்பாக வாழ்ந்து
அன்பினால் உயர்ந்து பண்பினால்
வாழ்ந்து- சாதிக்க வந்திட்ட அரும்பெரும்
பொக்கிஷச் செல்வமே நாம்.

இவ் விசித்திர உலகம்
கவிமொழியும் மழலைச் செல்வங்களின்
வாழ்க்கைக்கே - இவ்வுண்மை நாளை
தலைவராகவே புரிந்து கொள்வாய்
உலகத்தாயே!

க.கயானி,
உரும்பிராய் வடக்கு.

## அஸ்பிரின்

இரத்தக் கொதிப்பு, நீரிழிவு, அதிக பருமனான உடல், மாரடைப்பு அபாய அறிகுறிகள் உள்ளவர்கள் அஸ்பிரின் மாத்திரையை மிகவும் குறைந்தளவில் நாள்தோறும் உட்கொண்டால் மாரடைப்புவராமல் கட்டுப்படுத்தலாம். அபாய அறிகுறியில்லாதவர்கள் அஸ்பிரின் உட்கொள்ளக்கூடாது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

## தூங்காதே!

உலகிலேயே அதிக நேரம் உறங்கும் ஒரு கும்பகர்ண விலங்கு கோயலா ஆகும். சோம்பேறித்தனம் கொண்ட இந்த விலங்கு ஒரு நாளைக்கு சராசரியாக 22 மணி நேரம் தூங்குகிறது.

## ஆயுர் வேதம்

உலகில் தொன்மையான மருத்துவமுறை இந்தியர்களின் ஆயுர்வேதம்தான். 2000 வருடங்களுக்கு முன்பே ஆயுர்வேத சிகிச்சை முறைகளைத் தொகுத்து வழிகாட்டினார் சரகர் என்பவர். இன்றும் இந்த வைத்திய முறைக்கு சில வெளிநாடுகளில் நல்ல மதிப்பிருக்கிறது.

கு.துவிஷா, கிருலப்பனை

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

151

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**சிறைவாயிலை** அடைய முன்னர் அங்குள்ள காவலனை எப்படி மடக்குவது என்று தன் ஆட்களுக்குக் கூறியிருந்தாள் பூலான்.

உள்ளே நின்று பலமுறை கதவைத் தட்டிய பின்னர் தான் வெளியே நின்ற காவலனுக்குச் சத்தம் கேட்டது.

வந்து கதவைத் திறந்து குனிந்து பார்த்தான். சட்டென்று அவன் கையைப்பிடித்து ஒரே இழுப்பாக உள்ளே இழுத்தாள் பூலான்.

அவன் சுதாகரிப்பதற்கு முன்பாக, பூலானின் ஆட்கள் இரு வரும் போர்வையால் அவனை மூடி அமுக்கிக் கொண்டனர்.

அவன் திமிற, அவனிடமிருந்து நழுவிய துப்பாக்கியின் பிடியினால் தலையில் ஓங்கி ஒரே அடியாக அடித்தான் பூலானின் ஆள்.

காவலன் மடங்கி விழுந்து கிடந்தான். நால்வரும் வெளியேறினார்கள்.

பூலானும், அவளுடன் மூன்று பேரும் நடந்துவரும் காட்சியைப் பதுங்கியிருந்த மான்சிங்கும், ஏனையோரும் கண்டுவிட்டனர்.

மான்சிங்குக்கு அப்போதுதான் உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

பூலான் சென்றதில் இருந்து, அவள் ஆபத்து ஏதுமில்லாமல் திரும்பி வர வேண்டும் என்று அவன் மனம் தவித்தது.

பூலானைக் கண்ட சந்தோசத்தில் அவளுடன் மேலதிகமாக ஒருத்தன் வருவது கூட மான்சிங்கின் புத்தியில் உறைக்கவில்லை.

மான்சிங்கும், அவனுடன் நின்றவர்களும் பூலானையும், மற்றவர்களையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அப்போதுதான் புதிய ஆளைக் கவனித்தான் மான்சிங்.

அவனைப் பார்த்ததும் மான் சிங்கின் முகம் சுண்டிப் போனதை பூலான் கவனிக்கவே செய்தாள்! ஏன் என்றுதான் புரியவில்லை.

"நீ என்ன செய்யப்போகிறாய்? எங்காவது ஓடித் தப்புவது!" என்றாள் பூலான்.

அந்தக் கைதி பூலானின் முன்பாக மண்டியிட்டு "தாயே! என்னையும் உங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு விசுவாசமாக உழைப்பேன். நாய் மாதிரி உங்கள் கால்களைச் சுற்றிக் கொண்டு கிடப்பேன்!" என்றான்.

பூலானுக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. மான்சிங்கைப் பார்த்தாள். அவன் மறுப்பேதும் சொல்லவில்லை.

மான்சிங்கின் போக்கு பூலானுக்குப் புதிராக இருந்தது.

"சரி வா!" அவனையும் அழைத்துக் கொண்டு சென்றனர்.

தங்கள் இடத்துக்கு அவர்கள் சென்றபோது பொழுது புலர்ந்துவிட்டது.

சிறையில் இருந்த தம் சகாக்களை மீட்டுக் கொண்டு பூலான் வந்து விட்டதைப் பார்த்ததும், அங்கிருந்த பூலானின் ஆட்களுக்கு மகிழ்ச்சி பிடிபட வில்லை.

"பூலான் தேவிக்கு ஜே!" என்று முழக்கமிட்டனர். பூலான் மட்டும் ஆணாக இருந்திருந்தால் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு ஆடியிருப்பார்கள்.

அவர்கள் முழக்கமிட்டு முடிந்ததும் மான்சிங்கின் குரல் எழுந்தது.

"எங்கள் கூட்டத்திற்கு வந்துள்ள புதிய ஆள் ஒருவரை நாங்கள் எல்லாம் மரியாதை செய்ய வேண்டியுள்ளது!"

மான்சிங் கூறியதும் எல்லோரும் எல்லோரும் புதிய ஆளையே பார்த்தனர்.

பூலானுக்கு மான்சிங் ஏன் அப்படிக் கூறுகிறான் என்று தெரிய வில்லை. கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டிக்கொண்டு மான்சிங்கைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"இவர் யார் என்று தெரிந்தால் நீங்கள் எல்லோரும் முண்டியடிக்கப் போகிறீர்கள்!" மான்சிங்கின் பேச்சு ஆவலைத் தூண்டியது. பூலானுக்கோ புதிராக இருந்தது.

புதிய ஆளின் முகத்தில் கலவர ரேகைகள் தோன்றுவதையும் பூலான் கவனித்தாள்.

"யார் இவர் என்று பார்த்ததுமே அடையாளம் கண்டுகொண்டேன். ஐயாதான் உத்தரப்பிரதேச பொலிசுக்கு நம்பிக்கையான கைக்கூலி."

பூலான் சட்டென்று நிமிர்ந்தாள். பொலிசின் ஆள் என்று தெரிந்ததும் பூலான் ஆட்கள் ஆவேசத்துடன் அவனை மொய்த்தனர். மான்சிங் தடுத்தான்.

"டேய் கைக்கூலி நாயே! உன்னை அடித்தே கொன்று விடு வார்கள். நீயாக உண்மையைக் கக்கினால் தப்புவாய். இல்லையோ, இரத்தம் கக்குவாயாடா மகனே!"

புயலில் ஆடும் மரம்போல அவன் உடல் தடதடத்தது. கண்கள் பிதுங்கி வெளியே வந்துவிடும்போல இருந்தது.

"சொல்கிறேன். எல்லாவற்றையும் சொல்கிறேன். உயிர்ப்பிச்சை தாருங்கள்!"

"சொல்லடா பரதேசி!" மான்சிங் உறுமினான்.

"உங்கள் ஆட்கள் இரண்டு பேருடனும் பழகிப் பழகி பூலான் தேவியைப் பற்றிய விபரங்களை அறியச் சொன்னார்கள். அதுதான் இவர்கள் இருந்த சிறைக்குள் என்னையும் கைதிமாதிரி அடைத்துவைத்தார்கள்." அவன் மேற்கொண்டு எதையோ மறைக்கிறான் என்பது மான்சிங்குக்கு தெரிந்துவிட்டது.

காலை விசிறி அவன் நெஞ்சில் இடியாய் இறங்கினான்.

"ஏனடா எங்களோடு வந்தாய்?"

அவன் தயங்க, மான்சிங்கின் துப்பாக்கிப் பிடி அவன் விலாவில் விளாசியது.

"அய்யோ..." சுருண்டு, புரண்டான்.

"சொல்லடா..!"

"சொல்கிறேன்... பூலான் தேவியைக் கண்டுபிடித்து கொன்றுவிட்டு வா. பத்தாயிரம் ரூபா தருகிறேன் என்றார்..." அவன் குரல் நடுங்கியது.

"எந்த வேசி மகனடா சொன்னான்?"

அவன் சொன்ன பதிலில் இன்னொரு இரை காத்திருந்தது.

அந்தக் கேள்விக்கு அவன் சொன்ன பதிலைக் கேட்டதும், பூலானின் நெஞ்சுக்குள் தீப்பற்றிக் கொண்டது.

"ஜகதீஷ் சிங்" என்றாள் உளவாளி. அந்தப் பொலிஸ் அதிகாரிதான் தன்னை இக்காரியத்தில் ஈடுபடுத்தினான் என்ற உண்மையைக் கக்கிவிட்டான்.

அவன்தான் பூலானை பொலிஸ் நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்த அதிகாரி.

கோழிக்குஞ்சுபோல பூலான் ஒடுங்கி, ஒடுங்கிப் போக, அவள் இளமையைச் சாப்பிட்ட பருந்துதான் அந்த அதிகாரி.





திருப்பங்கள் தொடரும்...

மருத்துவம்

## இரத்த பரிசோதனையிலேயே புற்றுநோயை கண்டறியலாம்!



சளியில் இரத்தம் வருதல்
இரத்த வாந்தி
கறுப்பு நிறத்தில் மலம்
மலத்தில் இரத்தம்
சிறுநீரில் இரத்தம் கசிதல்
அதிக இரத்தப்போக்கு
மாதவிடாய் நின்றபிறகும் இரத்தப்போக்கு

குடிப்பழக்கம், சிகரெட், புகையிலை போன்ற தீய பழக்கவழக்கங்கள் உடையவர்களுக்கு மட்டுமே புற்றுநோய் தாக்கும் என்ற நிலை மாறி, 25 வயது இளைஞர்கள் கூட இன்று புற்றுநோய் நோயாளிகளாக இருக்கிறார்கள். ஆண், பெண், வயது என எந்த பாரபட்சமின்றி அனைத்து தரப்பினருக்கும் புற்றுநோய் தொற்றிக்கொள்ள வாய்ப்புள்ளது என்பதே நிதர்சனமான உண்மை.

புற்றுநோய் பற்றி நம் மக்களிடையே விழிப்புணர்வு இல்லை என்பது உண்மைதான். புற்றுநோய்க்கு மருந்தே கிடையாது. புற்றுநோய் வந்தால் இறந்துவிடுவோம் என்றுதான் நினைக்கிறார்கள். ஆனால், தற்போதைய மருத்துவ துறையில் அதிநவீன தொழில்நுட்பங்கள் வந்துள்ளன. சாதாரண இரத்த பரிசோதனையிலேயே புற்றுநோய் இருக்கிறதா இல்லையா என்பதை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் அளவுக்கு மருத்துவம் முன்னேறியுள்ளது.

புற்றுநோய் பொறுத்தவரை, டயக்னோசிஸ் ரொம்பவே முக்கியம். புற்றுநோய் கட்டி உடலில் எந்த இடத்தில் உள்ளது, எங்கெங்கு பரவியிருக்கிறது என்பதை கண்டறிவதே டயக்னோசிஸ். இதில் சரியான ரிப்போர்ட் கொடுத்தால் மட்டுமே டாக்டர்களால் தகுந்த சிகிச்சையை வழங்க முடியும். டயக்னோசிஸ் 2 வகைப்படும். ஒன்று, சாதாரண இரத்த பரிசோதனை, மற்றொன்று, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்கான் கருவி. இரத்த பரிசோதனையின்மூலம் கொழுப்பு, சீனி அளவை மட்டுமே தெரிந்துகொள்ள முடியும் என்றில்லை.

சிஏ125 என்ற டெஸ்ட் மூலம் கருப்பையில் புற்றுநோய் உள்ளதா என்பதை கண்டறியலாம். சிஏ19.3 டெஸ்ட் மூலம் பித்தப்பை, கணையத்தில் புற்றுநோய் புற்றுநோய் உள்ளதா என்பதையும், ஏஎப்பி டெஸ்ட் மூலம் கல்லீரலிலும், சிஇஏ மூலம் பெருங்குடலிலும் புற்றுநோய் இருக்கிறதா என்பதை கண்டறியலாம். இது போல, நுரையீரல், எலும்பு, தைராய்டு போன்ற இடங்களில் புற்றுநோய் உள்ளதா என்பதை இரத்த பரிசோதனையின் மூலமாக தெரிந்துகொள்ளலாம். அதனால், 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை மாஸ்டர் ஹெல்த் செக்கப் செய்து கொள்ள வேண்டியது அவசியம்.

அத்துடன் கேன்சருக்கான பிரத்தியேக டெஸ்ட்களும் எடுத்துக் கொள்வது நல்லது. இரத்த பரிசோதனையில் கேன்சர் இருப்பது தெரிந்தால், அதை சிடி, எம்ஆர்ஐ, எக்ஸ்ரே போன்ற ஸ்கான் டெஸ்ட் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இதில், தற்போதைய நவீன தொழில்நுட்பம் பிஇடி அல்லது சிடி ஸ்கான் கருவியாகும். இதன் சிறப்பு, உடலில் புற்றுநோய் கட்டி இருப்பதை பிடி கருவி உறுதி செய்யும், அதே நேரத்தில் எந்த இடத்தில் கேன்சர் இருக்கிறது என்பதை சிடி ஸ்கேன் உறுதி செய்யும்.

இவை இரண்டும் இணைந்து இருப்பதால், துல்லியமான ரிப்போர்ட் நமக்கு கிடைக்கும். உடலில் எந்த இடத்தில் புற்றுநோய் கட்டி இருக்கிறது, வேறு எங்காவது பரவியிருக்கிறதா அல்லது எங்கிருந்து இன்னொரு இடத்திற்கு பரவியிருக்கிறது என்பதையும் இந்த ஸ்கேன் தெளிவாக காட்டிவிடும். இதன் ரிப்போர்ட்டை வைத்தே முறையான சிகிச்சை தொடங்கப்படும். சிகிச்சையின் போதும், 2 மாதத்துக்கு ஒருமுறை பிஇடி அல்லது சிடி ஸ்கேன் டெஸ்ட் எடுத்துக் கொள்வது நல்லது. அப்போதுதான், நாம் உட்கொள்ளும் மருந்து நமது உடலுக்கு ஒத்துக்கொள்கிறதா, கேன்சரின் வீரியம் குறைந்துள்ளதா என்பதையும் தெரிந்துகொள்ள முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

இது பெண்களுக்காக...

40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவருமே ஆண்டுக்கு ஒருமுறை மார்பகப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம். இது புற்றுநோய்க்காக மட்டுமல்ல, மார்பகத்தில் எந்த பிரச்சினையும் இல்லை என்பதை நீங்களே உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. இதில், மாமோகிராம் பரிசோதனை நவீனமானது. அதிலும், வலியில்லாத டிஜிட்டல் மாமோகிராம் பரிசோதனையும் வந்துள்ளது.

## கழுத்துவலி வராமல் இருக்க...

கழுத்துவலி இளம் வயதினரையும் பாதிக்கிறது. இதற்கு என்ன காரணம் என்றால் இன்றைய இளைஞர்களின் உணவுப் பழக்கவழக்கம் மற்றும் நவீன வாழ்க்கை முறை, பைக், கார் போன்றவற்றில் மோசமான ரோட்டில் பயணம் செய்வது, அதிகநேரம் குனிந்து அமர்ந்து கம்பியூட்டர் டைப் செய்வது, எடையுள்ள பொருட்களை திடீரென தூக்குவது, உயரமான தலையணை வைத்து அதிக நேரம் படிப்பது, டி.வி பார்ப்பது போன்ற செயல்களால் கழுத்து பகுதியில் சவ்வு பலவீனமடைந்து வலி ஏற்படுகிறது.

கழுத்துவலி வராமல் இருக்க உயரமான தலையணை, சமனில்லா படுக்கையை உபயோகப்படுத்தக்கூடாது. இருசக்கர வாகனங்கள், கார், ஆட்டோவில் நீண்டதூர பயணங்களை தவிர்க்க வேண்டும். அதிக எடை தூக்கக் கூடாது. மருத்துவரின் ஆலோசனைப்படி சில உடற்பயிற்சிகள் செய்யலாம். இது கழுத்தை சுற்றியுள்ள தசைகளை பலப்படுத்தும். அதிகநேரம் ஒரே இடத்தில் குனிந்து வேலை செய்வதை தவிர்க்கவேண்டும்.






## இலட்சியங்க
## இல்லத்தரசி
## ஜோதிகாதா

நடிகர் சூர்யா 'அகரம்
அமைப்பு மூலம் ஏழை மா
படிப்புக்கு உதவி வருகிறா
'சிங்கம்-2' படப்பிடிப்பு இ
உள்ளது. இந்நிலையில்
பேட்டி வருமாறு:
எனது தந்தை கோ

# நயன்தாராவுடன் நெருக்கம் உண்மைதான் - ஆர்யா

சினிமாவில் எந்த நடிகையுடனும் இல்லாத அளவுக்கு நெருக்கமாக நயன்தாராவுடன் பழகி வருவது உண்மைதான். ஆனால் அது திருமணமாக மாறுமா என்றெல்லாம் சொல்ல முடியாது என்று நடிகர் ஆர்யா கூறியுள்ளார். கடந்த சில வாரங்களாக சினிமா உலகில் அதிகம் கிசுகிசுக்கப்படுவது நயன்தாரா - ஆர்யா நெருக்கம்தான். நயன்தாரா ஏற்கெனவே சிம்பு, தனு', பிரபுதேவா ஆகியோருடன் நெருக்கமாக இருந்தவர். சிம்பு - நயன் காதல் மற்றும் மோதல் ரொம்ப பிரபலம். அதேபோல, நயன்தாராவை திருமணம் செய்ய தன் மனைவியை விவாகரத்து செய்தவர் பிரபு தேவா. ஆனால் அந்தக் காதலும் முறிந்துவிட்டது.

இப்போது நயன்தாராவின் புதிய காதலன், அதையும் தாண்டி திருமணம் செய்து கொள்ளப் போகிறவர் என ஆர்யாவைக் குறிப்பிடுகிறார்கள். இதுகுறித்து ஆர்யாவே இப்போது மனம் திறந்துள்ளார்.

அவர் கூறுகையில், நானும் நயன்தாராவும் நெருங்கிப் பழகுவது உண்மைதான். இந்த இன்டஸ்ட்ரியில் எனக்கு ஏகப்பட்ட நடிகைகளுடன் நல்ல பழக்கம் உள்ளது. ஆனால் அதையெல்லாம் தாண்டி, நெருக்கமான உறவு நயன்தாராவுடன் உள்ளது. அவருடன் பல தனிப்பட்ட விஷயங்களை பகிர்ந்து கொள்ள முடிகிறது.

எங்கள் உறவு பற்றி பத்திரிகைகளில் வரும் செய்திகளுக்கு எல்லாம் பதில் சொல்வது கஷ்டம். எங்கள் நட்பின் அடுத்த கட்டம் என்ன என்பது குறித்தெல்லாம் இப்போது சொல்ல முடியாது, என்றார்.




# 10 வருடம் கதாநாயகியாக நீடிப்பது பெருமை -திரிஷா

ஜெயம் ரவியுடன் பூலோகம், ஜீவாவுடன் என்றென்றும் புன்னகை படங்களில் நடிக்கிறார் திரிஷா. 2002-ல் சினிமாவில் அறிமுகமானார். பத்து வருடங்கள் கதாநாயகியாக தொடர்ந்து நடித்து வருகிறார். சினிமா வாழ்க்கை குறித்து ஐதராபாத்தில் திரிஷா அளித்த பேட்டி வருமாறு:

சினிமாவில் வாய்ப்பு கிடைப்பது கஷ்டம். கிடைச்சாகூட அதை தக்க வைக்கிறது ரொம்ப கஷ்டம். நான் பத்து வருடமா சினிமாவில் இருக்கேன். தொடர்ந்து கதாநாயகியாகவே நடிக்கிறேன். இதை அதிர்ஷ்டம்னு தான் சொல்லனும். ஒவ்வொரு படத்திலும் வெவ்வேறு கேரக்டர்களில் நடித்து என் திறமையை நிருபித்து இருக்கேன். இத்தனை வருட சினிமா வாழ்க்கை எனக்கு ரொம்ப திருப்தியாக இருக்கிறது.


எல்லா படங்களையும் ஏற்றுக் கிட்டு நடிக்க ஆரம்பிச்சு இருந்தால் கைவசம் நிறைய படங்கள் இருக்கும். எண்ணிக்கையை அதிகப்படுத்திக் காட்டலாம். ஆனால் அந்த மனநிலையில் நான் இல்லை. நல்ல கதைகளில் மட்டுமே நடிப்பேன்.

# காதலில் பட்ட காயம் ஆறவில்லை!

பிரியங்கா சோப்ராவும், ரண்பீர் கபூரும், மாஜி காதலர்கள். சில ஆண்டுகளுக்கு முன், இருவரும், நெருக்கமாக காதலித்து வந்தனர். யார் கண்பட்டதோ தெரியவில்லை. இவர்களின் காதல், பிரேக் அப் ஆகி, இருவரும், பிரிந்துவிட்டனர். ஒருவரை ஒருவர், நேரில் சந்தித்தால்கூட, முகம் கொடுத்து பேசுவது இல்லை.

ஆனால், காலம், இப்படியே போய்விடுமா என்ன? யே ஜவானி ஹை திவானி என்ற படத்தில், இருவரும், ஒன்றாக நடிக்கின்றனர். காதலில்பட்ட காயம், மனதில் இருந்தாலும், இருவரும், அதை வெளிக்காட்டாமல், படத்தில் நடித்து முடித்துவிட்டனர். ஆனால், படத்தை விளம்பரப்படுத்தும் நிகழ்ச்சி, சமீபத்தில் மும்பையில் நடந்தபோது, எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்தன.

இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த மீடியாக்காரர்கள், படத்தை பற்றி கேட்பதை விட, பிரியங்கா - ரண்பீரின் கடந்த கால காதல் பற்றியே, கேள்விகளை கேட்டனர். ஒரு கட்டத்தில், கண்ணீர்விட்டு அழுதுவிட்டார், பிரியங்கா. அருகில் அமர்ந்திருந்த, மாஜி காதலர், ரண்பீர்தான், பிரியங்காவை தேற்றினாராம்.








தலைவா...



சங்கரபுரம்...

## ...களை விட்டுக்கொடுத்து ...யாக இருக்கும் ...ன் எங்கள் சந்தோசம் - சூர்யா

...வுண்டேஷன்' ...னவ - மாணவிகள் ...ர். அவர் நடிக்கும் ...துதிக் கட்டத்தில் ...சூர்யா அளித்த ...வை அருகே

உள்ள காசிகவுண்டன்புதூர் என்ற கிராமத்தில் இருந்து வந்தவர். படிப்பு இல்லாமல் நாங்கள் இங்கே வந்து இருக்கமுடியாது. என் தந்தை படிப்புக்கு உறவினர்கள் பணஉதவி செய்துள்ளனர். ஆசிரியர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

கல்வி, வாழ்க்கையை மாற்றி அமைக்கும். எங்களையும் மாற்றி உள்ளது. எனவே அகரம் பவுண்டேசன் மூலம் கல்விப் பணிகள் செய்கிறோம்.

என் மனைவி ஜோதிகா என்னை முழுமையான மனிதனாக்கியுள்ளார். படப்பிடிப்பில் கடினமாக வேலை செய்துவிட்டு வரும்போது ஜோதிகாவின் சிரிப்பு என் களைப்பை போக்கிவிடுகிறது. பெண்கள் நமக்காக நிறைய செய்கிறார்கள். எனக்கு எல்லாம் இருக்கிறது. இந்த நகரம் வீடு போன்று இருக்கிறது. ஆனால் ஜோதிகாவுக்கு அப்படி இல்லை. அவர் மும்பையில் இருந்து வந்து இருக்கிறார். இலட்சியங்களை விட்டுக்கொடுத்து இல்லத்தரசியாக மாறி இருக்கிறார். ஜோதிகாதான் எங்கள் சந்தோசம்.

தியா என்னைப் போன்றும், தேவ் ஜோதிகா போன்றும் இருக்கின்றனர். ஒரு தந்தையாக எது நல்லது, எது கெட்டது என்று குட்டிக் கதைகள் மூலம் அவர்களுக்கு சொல்கிறேன். படுக்கையிலும் கதைகள் சொல்கிறேன். அவர்களை வீட்டு மாடிக்கு கூட்டி போய் விளையாடுகிறேன். கூட்டம் இல்லாதபோது பார்க்குக்கு கூட்டிப்போகிறேன். இரவில் பீச்சுக்கும் அழைத்து போகிறேன். ஜப்பான் சென்று இருந்தபோது ஓடியோ புத்தகங்கள் வாங்கி வந்து கொடுக்கிறேன். அப்புத்தகங்கள் மூலம் உலகை பற்றி நிறைய தெரிந்துகொள்கிறார்கள். இவ்வாறு சூர்யா கூறினார்.

## ஹீரோயின் மட்டும் நடிக்கும் படம்

ஊமை விழிகள், உழவன் மகன், தாய்நாடு உட்பட பல படங்களை இயக்கியவர் அரவிந்த்ராஜ். இவர் தற்போது கவிதை என்ற பெயரில் படம் இயக்கி உள்ளார். அல்மைட்டி கம்பென்ஸ் சார்பில் பெஞ்சமின் தயாரிக்கிறார். மிதுன் ஷெனாய் இசை. டி.வில்ஸ் ஒளிப்பதிவு. படம் பற்றி அரவிந்த்ராஜ் நிருபர்களிடம் கூறியதாவது:

காதலர் தினத்தில் மனம் கவர்ந்தவனிடம் காதல் சொல்ல கடற்கரைக்கு வரும் பெண், இயற்கை சீற்றத்தில் சிக்கி படகுக்குள் மாட்டிக் கொள்கிறாள். ஆள் நடமாட்டமில்லாத அந்த கடற்கரையில் எங்கிருக்கிறோம் என்பதுகூட அவளுக்குத் தெரியாது.

அங்கிருந்து எப்படி தப்பிக்கிறாள் என்பதுதான் கதை. அவளுக்கு ஏற்படும் இடையூறுகள், அவ்வப்போது வரும் காதல் உணர்வுகள் என இயக்கி உள்ளேன்.

6 அடி நீளம், 3 அடி அகலம், 4 அடி உயரம் கொண்ட கவிழ்ந்த படகுக்குள்தான் கதை நடக்கிறது. ஒரு டியூப் லைட்டும் டார்ச் லைட்டுமே லைட்டிங்கிற்காக பயன்படுத்தப்பட்டு படமாக்கப்பட்டுள்ளது. சாதனை முயற்சியாக இதை செய்துள்ளோம்.





## ஹாரி பொட்டரின் மாமாவாக நடித்த ரிச்சர்ட் க்ரிப்பித்ஸ் மரணம்

குழந்தைகளின் மனங்கவர்ந்த ஹாரி பொட்டர் வரிசை திரைப்படங்களில் ஹாரி பொட்டரின் மாமா கதாபாத்திரத்தில் நடித்து புகழ் பெற்றவர், ரிச்சர்ட் கிரிப்பித்ஸ்(65).

இங்கிலாந்தின் தலைசிறந்த மேடை மற்றும் திரைப்பட நடிகராக கருதப்படும் இவர், இதய அறுவைச் சிகிச்சைக்காக வார்விக் ஷைர்-ரில் உள்ள கவென்ட்ரி பல்கலைக்கழக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஒப்பரேஷனுக்கு பின்னர் உடல்நலம் தேறி வந்த ரிச்சர்ட் கிரிப்பித்ஸ், கடந்த வெள்ளிக்கிழமை மரணமடைந்தார்.

ஹாரி பொட்டர் படத்தின் கதாநாயகன் டேனியேல் ராட்கிளிப்பே, அங்கிள் வெர்னான் ஆக நடித்த தனது சினிமா மாமாவைப் பற்றி கூறுகையில், நடிப்புத் தொழிலை இன்ப அனுபவமாக மாற்றிக்கொண்ட அற்புத நடிகர் என்றார்.

## கதாநாயகனை செருப்பால் அடித்த கதாநாயகி!

மெரிட் மீடியா தயாரிக்கும் படம் இசக்கி. இனிது இனிது சரண்குமார், கன்னட நடிகை ஆஷிதா நடிக்கிறார்கள். ஸ்ரீகாந்த் தேவா இசை. சசிகுமார் ஒளிப்பதிவு செய்கிறார். படம் பற்றி இயக்குனர் எம்.கணேசன் கூறியதாவது:

ஆசிரியையான ஹீரோயினை, ஹீரோவும், வில்லனும் இருவேறு காரணங்களுக்காக துரத்துவது கதை. ஹீரோ, ஹீரோயினை டார்ச்சர் பண்ணிக் கொண்டே இருப்பார். பொறுக்கமாட்டாமல் அவரை செருப்பால் அடிப்பது போன்றும் அதை ஹீரோ தடுப்பது போலவும் காட்சியை படமாக்கினோம். ஹீரோயின் நிஜமாகவே அடித்துவிட்டார். பிறகு ஹீரோவிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு அன்று முழுவதும் அழுது கொண்டே இருந்தார். அது சின்ன தவறுதான் என்று எடுத்துச் சொல்லி மறுநாள் அந்த காட்சியை திரும்ப எடுத்தோம்.

### தயாரிப்பாளர் ஆகிறார் ஸ்ரீகாந்த்

தமிழில் பல ஹீரோக்கள் சொந்த நிறுவனம் தொடங்கி, படம் தயாரித்து நடிக்கின்றனர். அந்த வரிசையில் ஸ்ரீகாந்த் இணைந்துள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது: பிரபா-கர் இயக்கும் ஓம் சாந்தி ஓம் படத்தில், நீலம் ஜோடியாக நடிக்கிறேன். அடுத்து கணேஷ் இயக்கும் நம்பியார், படத்தில் நடிக்கிறேன்.

தலைப்பை வைத்து, வில்லனாக நடிக்கிறேனா என்று கேட்கிறார்கள். அதை இப்போது சொல்ல முடியாது.

## சிவாஜியை அவமானப்படுத்துகிறாரா விவேக்?

நடிகர் விவேக் 'சாமியார்' வேடத்தில் இருப்பது போன்ற போஸ்டர்கள் சென்னையில் ஒட்டப்பட்டுள்ளன.

கில்லாடி படத்தில் இந்த கெட்டப்பில் அவர் நடித்துள்ளார். சிவாஜிகணேசன் திருவருட்செல்வர் படத்தில் நடித்த அப்பர் வேடம்போல் இது இருப்பதாக சிவாஜி ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர். சிவாஜி ரசிகர் மன்ற தலைவர் கே.வி.பி.பூமிநாதன் வெளியிட்ட அறிக்கையில் விவேக் போஸ்டர்கள் சிவாஜியை அவமதிப்பதுபோல் உள்ளது.

இது குறித்து விவேக்கிடம் நேரில் பேசி உள்ளேன். இந்துக்களை இழிவுபடுத்துவது போன்றும் அவர் செயல் உள்ளது. சிவாஜி ரசிகர்கள் இதை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று கூறியுள்ளார். சிவாஜி சமூகநல பேரவை தலைவர் சந்திரசேகரனும் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். இது குறித்து படத்தின் இயக்குனர் ஏ.வெங்கடேசிடம் கேட்டபோது, விவேக் சாமியார் வேடத்தில்தான் நடித்துள்ளார். அது சிவாஜி நடித்த அப்பர் வேடம் அல்ல. இதனை நடிகர் பிரபுவுக்கு தெரிவித்துவிட்டோம்.

# தேன் கிண்ணம்



# புனித நட்பின் புலம்பல்

ஒடிதலுக்கு
வரவில்லை
ஒப்புத்தலுக்காக வந்துள்ளேன்
தப்பு செய்தவன் விடும்
ஒப்புதல் வாக்குமூலமிது!

மன்னித்திடு நண்பா...!
மனம் நோகடிப்பது
என் குணம் அல்ல...
மனம் நொந்து
குணமடையாத நோயாளிக்கு
வைத்தியம் செய்யும்
வைத்தியர் அல்லவா நான்...
காப்பாற்ற வந்தவன் கையால்
கொலையுண்ட கதையாச்சு
என் வார்த்தையின் பிரவாகம்.

வாயை விட்டு வார்த்தை பறந்து விட்டால்
மீளவராது விழுங்கவும் முடியாதென்பேன்...
வாயில் இருந்து
வார்த்தைகளை
அளந்து அனுப்பும்படி
அறிவுரை கூறுவேன்...
வார்த்தையை விட்டு விட்டால்
காப்பாற்றும் படி
கட்டளை இடுவேன்...
மனிதனின்
மனிதம் இதுதான் என்று
மந்திரம் ஓதும்
நானா அதைச் செய்தேன்?
நம்ப முடியவில்லை!



என்னை நேசிப்பவராய் இருந்தால்
எதையாவது? சொல்லி சமாதானம்
செய்வேன்
நான் நேசிப்பவர் என்பதால்
நான் என்ன செய்வேன்?

கஷ்டமா இருக்கு நண்பா!
மன்னித்தாலும்
மனம் கண்ணீர் சிந்துகிறது...
விழி
விம்மியழுகிறது
நட்பை கற்புழித்தவன் எனும்
நாணயமில்லாத காடையன் என்பதால்!



அழாதே இதயமே...
உன்நேசம் போல்
உன்னை நேசித்திருப்பார்
காயப்பட்ட இதயத்தின்
கனத்த வரிகள் என்பதை
அன்பரும் அறிந்திருப்பார் — இனி
தப்பு செய்யாமல் கவனித்துக் கொள்!

எல்லாம் மறந்திடு...
சொல்லால் சுடுவது உன் கொள்கையா?
சொல்லால் இறக்கச் சொன்னாலும்
நீ சுமை இறக்கச் சொன்னாலும்
அடுத்தவரை கவனத்தில் கொள்..
நீ அழு
அடுத்தவரை அழ வைக்காதே என்று
அழும் மனதுக்கு
ஆறுதல் கூறி
ஆமை வேகத்தில் நகர்கிறது
அதற்கு முன்னைய நாள் நோக்கி
இதயம்!

A.பாரிஸ்
கட்டுக்கெலியாவ,
மிகிந்தலை.

# நீள்கின்றன எனக்கான தேடல்கள்




நினைவுகள் கனதியானவைதான்
நீளமாய் விரிகையில்
நிசப்தத்தை கலைக்கையில்
மனசின் ஓரமாய்
வந்துபோகும் துன்பத்தில்
வாடுகின்றேன் நான்.

நினைவுகளில் இன்னமும் நீ
நிலைத்திருக்கிறாய்தான்
மறக்கமுடியவில்லை...
ஆனாலும் மறந்துதானே
ஆகவேண்டும்.
இன்னொருத்தன் வாழ்வை
எனக்காக கேட்க
எப்படி முடியும்?

அடுத்தவன் தெருக்களை அபகரித்து
அகலக்கால் பதிப்பதைவிட
எனக்கான தெருக்களில்
உவகையோடு நடந்துகொண்டிருப்பது
சாலச் சிறந்தது அல்லவா!

உஷா, யாழ்ப்பாணம்.

# காதலே கவனி!



புவனத்தில் பல தினங்கள்
பூத்துக் குலுங்கினாலும்
புரியும் மனங்கள்
பூக்கும் தினங்கள் இன்றுதானே!
இருப்பதற்கு இல்லிடம் அற்றும்
இரைதேடுவதற்கு வழியற்றும்
குடிப்பதற்கு நீர் வற்றும்
அம்மா என்கையில் மண்முற்றும்
அப்பாவோடு பல கற்றும்
அவளோடு இருப்பதற்கு என்னவளின்
மனதில் இடமிருந்தால் போதும்.
அவனோ என்னவள் இதயத்தில்
அமர்ந்தால்போதும்.
இதுவே காதலின் தடம்பாதம்!
போரிலே போராளி காயமாகின்றான்
போதுமென்று தியாகி ஆகின்றான்
காதலுக்காக இரு மனங்கள் சேயாக
கண்களின் பார்வையில் தாயாக
மரங்களில் பறிக்கும் காயாக
இதயத்தைக் கவரும் நோயாக
இன்றாகின்றார்கள் தயாராக!
பாசத்தின் உச்சிக்கு
பாரினிலே விழா அரிது
பாச நேசம் கொண்ட
மனங்களுக்கோ விருது
இதைக் காண மாசி 14 வருது!
கல்தோன்றா மண்தோன்றாக்
காலத்தே உதித்த காதலே
கடைசிவரையும்
காற்றைவிட்டுப் பறக்காத மோதலே!
காதலில் கட்டுண்டு
கரம்பிடிக்க பூவோடு மொட்டுண்டு
கல்லிலே கண்ணை வைத்து
கவனிலே சொல்லைத் தைத்து
கவனி என்று இதயத்திற்குப்
பவனி போக-
சாதி சனம்
மதம் மதிப்பு
மொழிவழி பாராத தீபங்கள்
விரும்புகின்ற இந்நாள் அதுவே
அரும்புகின்ற நன்நாள்!
இன்று ஆகும் நாளைவேகும்
ஒன்றுசேரும் காளை
கன்னி என்னவாகும்
நன்று பாரும்
இவ்வேளை காதல்கூடவும்
வென்று வாரும்
கோழை தன்னிலும்
காதல் மலரும்.

தமிழமுதன்,
முல்லைத்தீவு.

# ஏமாற்றம்



மலரொன்று வாங்கிக் கொடுத்தேன்
மலரே உந்தன் குழல் வெறுமையில்,
வாடி விடக் கூடாதென்று...
வாடியது உன் குழலல்லடி...
வாட்டி விட்டாய் எந்தனது
உள்ளமதை...
கொடுத்த மலரை நீ சூடவில்லை
சூட்டிவிட்டாய் எந்தனது
கல்லறைக்கு...

R.கஜகாந்த்,
கல்வயல்.

## ஈழத்து கவிஞர்கள்

### தர்மு சிவராம் (பிரமிள்)



பிரமிள் (ஏப்ரல் 20, 1939) என்ற பெயரில் எழுதிய தருமு சிவராம், இலங்கையில் பிறந்தவர். தமிழகத்து எழுத்தாளர். பாரதி, புதுமைப்பித்தனுக்குப் பிறகு தோன்றிய ஒரு இலக்கிய மேதை. தமிழின் முதன்மையான கவிஞர், விமர்சகர், சிறுகதை ஆசிரியர். புதுக் கவிதை முன்னோடிகளுள் முக்கியமான ஒருவராக இவர் கருதப்படுகிறார்.

இவர் பானுசந்திரன், அரூப் சிவராம், பிரமிள் போன்ற பல புனைபெயர்களில் எழுதினார். அடிக்கடி தம் பெயரை மாற்றிப் புதுப்பித்துக் கொண்டேயிருந்தவர்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையைச் சேர்ந்தவர். எழுபதுகளின் ஆரம்பத்திலேயே தமிழ்நாடு சென்றுவிட்டார். பிறகு தம் பெரும்பாலான வாழ்நாளைச் சென்னையிலேயே கழித்தார்.

சி.சு.செல்லப்பாவின் எழுத்து பத்திரிகையில், தமது இருபதாவது வயதில் எழுதத் துவங்கிய பிரமிள், நவீன தமிழ்க் கவிதையுலகில் தனி அடையாளம் கொண்டவர். ஓவியம், சிற்பம், நாடகம், மொழியாக்கம், விமர்சனக்கட்டுரைகள் என விரிந்த தளங்களில் இயங்கிய பிரமிள், நவீன தமிழ் இலக்கியம் குறித்துக் கூர்மையான விமர்சனமும் அவதானிப்பும் கொண்டவர்.

ஆரம்பக் கல்வி மட்டும் ராமகிருஷ்ணமடம் நடத்திய இரவுப் பாடசாலையில் கிடைத்தது. தமிழின் மாமேதை என்று தி.ஜானகிராமனாலும், உரைநடையின் அதிகபட்ச சாத்தியத்தை நிறைவேற்றியவர் என்று சி.சு.செல்லப்பாவாலும் பாராட்டப்பட்டவர் பிரமிள். இளம் வயதிலேயே மௌனியின் கதைத் தொகுப்புக்கு முன்னுரை எழுதிய பெருமை இவருக்குண்டு.

"கவிதைக் கோட்பாடுகளும் பாரதி கலையும்" என்ற தலைப்பில் பாரதியை மதிப்பீடுசெய்து மிகச் சிறந்த கட்டுரை ஒன்றை எழுத்துருவில் எழுதினார். மைசூரிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை, கேரளக் கருத்தரங்கில் படித்த தமிழ்க்கவிதை பற்றிய இவரது கட்டுரை ஒன்றைக் கேட்டு வாங்கி வெளியிட்டது.

**இவரது நூல்கள்**

கண்ணாடியுள்ளிருந்து, கைப்பிடியளவு கடல், மேல்நோக்கிய பயணம், பிரமிள் கவிதைகள்

**சிறுகதை தொகுப்பு**

லங்காபுரி ராஜா, பிரமிள் படைப்புகள்

**சிறுகதைகள்**

காடன் கண்டது, பாறை, நீலம், கோடரி, கருடனூர் ரிப்போர்ட், சந்திப்பு, அசரீரி, சாமுண்டி, அங்குலி மாலா, கிசுகிசு

**குறுநாவல்**

ஆயி, பிரசன்னம், லங்காபுரிராஜா

**நாடகம்**

நட்சத்ரவாசி

**விருதுகள்**

நியூயோர்க் விளக்கு அமைப்பு 'புதுமைப் பித்தன்' விருதை இவருக்கு அளித்தது. கும்பகோணம் சிலிக்குயில் 'புதுமைப்பித்தன் வீறு' வழங்கியது.

உதரவிதானத்தில் ஏற்பட்ட புற்றுநோயால் பக்கவாதத்தால் உடல் செயலிழந்து, மூளையில் பாதிப்பு ஏற்பட்டு, பக்கவாதத்தால் உடல் செயல் இழந்து, பல மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தவர், 1997ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி காலமானார்.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 15



32

# சிங்கை மைந்தன்

## அமரசிம்மன்

ஓர் இனவாதியான தனவந்தன், அவனுக்கும் அவனுடைய ஆசை வார்த்தைகளுக்கு மயங்கிப்போன சில சிற்றரசர்களான அடிவருடிகளுக்கும் பாடம் புகட்டுவதற்காகத்தான் நாம் போரை விரும்பாத போதும் எமது மானத்தை இழக்கவில்லை என்று காட்டுவதற்காகவே நீண்ட பயணமாக இன்று படை புறப்படுகின்றது.

நானே தங்களுக்குத் தலைமைதாங்கி படை நடத்த முன்வந்தேன். உங்கள் தளபதியும், உபதளபதிகளும் என் கரங்களைக் கட்டிப் போட்டுவிட்டார்கள். எனது புஜபலம் துடிக்கின்றது. எனது உடைவாள்கூட உறையைவிட்டு என்னை வெளியே எடுங்கள் என்று கூறுகின்றது. ஆனால் இந்தச் சுண்டங்காய் சண்டைக்குத் தாங்கள் வரவேண்டாம் என்று தடுத்துவிட்டார்கள். ஆனாலும் ஒவ்வொரு படை வீரனின் புஜபலபராக்கிரமத்திலும் நானிருக்கிறேன். வெற்றியோடு திரும்புங்கள் என்று கூறி தனது வீரனனை உருவிக்காட்டினார். படைவீரர்கள் வெற்றிக் கோஷமிட்டனர். தாரை தப்படைகள், முரசுகள் முழங்கின. படையணி புறப்பட்டது.

சிங்கைத்துறையில் பத்துக்கும் மேற்பட்ட போர்க்கலங்கள் மிகவும் கலகலப்புடன் காணப்பட்டன. கடல் போர் வீரர்கள் நிரம்பியிருந்த அந்த மரக்கலங்கள் சிலவற்றில் அசுவங்களும் காணப்பட்டன. அவை கனைக்கும் ஒலியும், வீரர்களின் ஒலியுடன், கடலோசையுடன் சேர்ந்து பெரும் கலகலப்புடனிருந்தது. மாலைச் சூரியன் மஞ்சள் வெயில் அசுவங்களின் மேனியில் பட்டுப் பிரகாசித்ததை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான் காராளன்.

"என்ன காராளா மிகுந்த சந்தோஷத்துடன் இருக்கின்றாயா, எனக்கும் சொல்லேன்" என்று கேட்டவாறு அவனுக்கு அருகே வந்தமர்ந்தான் மாடன்.

"இந்தச் சண்டை எங்களுக்கு புதிய அனுபவம் தரப்போகின்றது. இதுவரை நாம் கடற்போரில் மரக்கலங்களைக் கொக்கி போட்டு இழுத்து அவற்றில் பாய்ந்துதான் தாக்குதல்களை நடத்தினோம்."

"தெரிந்த விடயம்தானே. அதுசரி இந்த அசுவங்களை தளபதியார் ஏன் ஏற்றிக்கொண்டு வருகின்றார்?"

"அதைத்தான் கூறவந்தேன். கடலில் சமர் நடக்கும் வாய்ப்பு எமக்கிருக்காது. கடல்மார்க்கமாகச் சென்று பாணந்துறையில் இறங்கி நாமும் இவற்றில் சென்று இரு வாரங்களுக்கு முன்பு சென்ற படையுடன் சந்திக்கப் போகின்றோம். அதற்கிடையில் யாராவது இடையில் குறுக்கிட்டால் அங்கேயும் சமர் நடக்கும்."

"என்ன இருந்தாலும் தளபதியார் அதிபுத்திசாலித்தனமுள்ளவர் தான்."

"அப்படியிருப்பதால்தான் ஓர் இளவரசருக்குரிய மதிப்பும், மரியாதையும் அரச சமூகத்தில் அவருக்கு இருக்கின்றது."

"கடற்கொள்ளையர்களான எம்மைக் கௌரவித்து கதிரவனைக்கூட உபதளபதிகளில் ஒருவனாக படையணிக்கு தலைமை தாங்க வைத்திருக்கின்றாரே அதுதான் அவருடைய பெருந்தன்மை. அதோ அவரே வந்துகொண்டிருக்கிறார்" என்று இருவரும் எழுந்து சென்றனர்.

அலை ஓசையைத் தவிர கலங்கள் யாவும் அமரசிம்மன் வருகையால் அமைதி நிலவியது. வீரர்கள் ஒழுங்காக நின்றிருந்தனர். அவர்களைப் பார்த்து புன்முறுவல் பூத்தபடியே தான் ஏறிய மரக்கலத்தை சுற்றிப் பார்த்துவிட்டு காராளன், மாடன் பின்தொடர ஒவ்வொரு கலமாகச் சென்று பார்த்துவிட்டு திருப்தியுடன் முன்னே நின்ற ஓர் மரக்கலத்தின் இருக்கையில் அமர்ந்தான்.

"காராளா"

"பிரபு"

"எமது படையினர் பன்னாகத்திலிருந்து இன்று அதிகாலை புறப்பட்டு கோட்டை நோக்கிப் புறப்படுவார்கள். இதுவரை எங்கேயும் எதுவித எதிர்ப்புமின்றி சென்றுகொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. நாம் முதற்சாமத்தில் புறப்பட்டால் அதிகாலையில் மாந்தைக்கு அப்பால் தம்பண்ணையைத் தாண்டிவிடலாம் இல்லையா?" என்றான்.

"காலை எமது போர்க்கலங்கள் வருவதை கரையோரத்திலுள்ள ஒற்றர்கள் அறிந்து கொள்ள வேண்டும் பிரபு"

"அப்படி அவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பயணம், காரையை அண்டி எமது கலங்கள் ஒன்றிரண்டு தான்செல்லும். ஏனையவை கரையோரப் பார்வைக்கு எட்டாத தூரத்தில் சென்று பாணந்துறைக்கு சமீபமாக நங்கூரமிடும் அங்கிருந்து கரையோரமாக நாமும் கோட்டைக்குச் செல்லலாம். எமது வரவை எதிர்பார்த்திராத அளகக் கோனாரின் படை வீரர்கள் எமது வரவு கண்டு சிதறியோடுவார்கள். அவர்களைத் துரத்தி துரத்தியடிக்க வேண்டும். அப்பொழுதுதான் தெரியாத்தனமாக கருங்குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்துவிட்டோமே என்று துன்பப்படுவார்கள் மாடா" என்றான்.

"பிரபு"

"நீ கரையோரம் செல்லும் கலங்களுடன் செல். எங்கேயாவது எதிர்ப்புக் காட்டினால் அந்த இடங்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ செய்துகொள்"

"எமது வணிகத்தலங்களும் இருக்கின்றனவே பிரபு"

"அவர்களுக்கு எல்லாத் தகவல்களும் அனுப்பியுள்ளேன். அவர்களும் ஆயத்தமாக இருப்பார்கள்."

"பிரபு! மற்றும் கலங்களுக்கும் தாங்கள் கூறிய தகவல்களை அறிவித்துவிடலாமா?"

"ஆமாம். எல்லோரையும் ஆயத்தமாக இருக்கச் சொல். முதற்சாமம் முடிந்ததும் நாம் புறப்படலாம்" என்று கூறிவிட்டு கடல் அலைகளின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். அலைகளின் ஒவ்வொரு அசைவிலும் மதுரவல்லியின் மதிவதனம் புன்னகை பூத்தவாறு அவளைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை."

என்னதான் அரசன் மகளாய் போர்ப்பயிற்சி பெற்றவளாயிருந்தாலும் புறப்படும் சமயத்தில் ஆரார்த்தி எடுத்து செந்தூரத் திலகம் இட்டதும் இதழ்களில் பூத்திருந்த புன்னகை மாறாமலே விழிகளில் நீர் திரண்டு முத்துப்பரல்களென அவள் வதனத்தில் உருண்டபோது அவள் கண்ணீரைத் துடைப்பதற்கு தன்கரம் நீண்டதும்.

"பிரபு! இது ஆனந்தக் கண்ணீர். எனது தந்தையாருக்கு தாயார் வெற்றித் திலகமிட்டு அனுப்பியதை பார்த்திருக்கிறேன். இன்று நானே...! வெற்றியோடு திரும்புங்கள். உங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பேன் என்று கூறிய காட்சி அவனுடலைச் சிலிர்க்க வைத்தது.

(தொடரும்...)

3 ஆவது ஆண்டில்...

தினமுரசு

நாளிதழ்

தினம்தோறும்
கல்விமுரசு
இணைப்பு

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

ரூ.10/=
மட்டுமே

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - 'பரமர் சங்கமம்", "மெய்தான் பாருங்கோ"
  "பதிவிறக்கப்பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப்
பரிசில் மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள் - விடைகளுடன்
தினமும்
சனி, ஞாயிற்றுக்கிழமைகள்
க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான
அலகு ரீதியான குறிப்புகள்,
மாதிரி வினாக்களும்
விடைகளும் வெளியாகின்றன!





# லேடிஸ் ஸ்பெஷல்

# அம்மாவுக்கு தெரியவேண்டும் மகளின் பந்தங்கள்!

**சிறுமிகள்,** டீன்ஏஜ் பெண்கள் பாலியல் தொடர்புடைய சிக்கல்களில் எளிதாக மாட்டிக் கொள்கிறார்கள். செல்போன், இணையத்தளம் போன்றவை அதற்குக் காரணமாக இருக்கின்றன. அம்மாக்கள் கவனமாக இருந்தால், பெண்களுக்கு சிக்கல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம்!

பாலியல் வன்முறை ரீதியாக பெண்கள் வஞ்சிக்கப்படும் சம்பவங்கள் நடக்கும்போது, அந்த சம்பவம் எப்படி நடந்தது, ஏன் நடந்தது என்று அம்மாக்கள் மகள்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்படி ஒரு சம்பவம் நடந்தால் எப்படி அதில் இருந்து தப்பிக்கவேண்டும், என்று சொல்லிக் கொடுக்கவேண்டும்.

அறிமுகமற்ற ஆண்களோடு பேசும்போது எப்படி எல்லாம் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ளவேண்டும் என்பதை மகள்களுக்கு கற்றுக்கொடுங்கள். செல்போன், இன்ரநெற் போன்றவை மூலம்தான் சிக்கலுக்குரிய பந்தங்கள் உருவாகின்றன. அதனால் மகள் எதற்காக செல்போன், இன்ரநெற் போன்றவைகளை பயன்படுத்துகிறாள் என்பதை எப்போதும் அம்மா கண்காணிக்கவேண்டும்.

அதற்காக அம்மா, தோண்டித் துருவி துப்பறிய வேண்டியதில்லை. அவளது நண்பர்கள் யார், அவர்களது நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன என்பதை எல்லாம் அம்மா அறிந்திருக்க வேண்டும். காதல் தொடர்பு ஏதாவது இருப்பதாக அறிந்தால், நிலைகுலைந்து போகாதீர்கள். மகளை அடக்குதல், அடித்தல், முடக்கிப்போடுதல் போன்றவை எதிர்விளைவுகளையும், பழிவாங்கும் உணர்வுகளையும் தோற்றுவித்துவிடும்.

அதனால் காதலின் நிஜங்களை புரியவைத்து மனதளவில் மாற்றத்தை உருவாக்கவேண்டும். சரியான பருவத்தில் ஏற்படும், சரியான காதலுக்கு தான் ஒருபோதும் எதிரியல்ல என்பதை புரியவைத்து, பிரச்சினையை சுமுகமாக தீர்க்க முன்வரவேண்டும். டீன்ஏஜ் பருவத்தில் நாகரிக உடை அணியும் ஆர்வம் அதிகரிக்கும்.

ஆனால் அது அவள் உடலுக்கு பொருத்தமாக இருக்கிறதா என்பதைப் பார்த்து சரியான முறையில் அணியச் செய்யவேண்டும். உடல் உறுப்புகளை பாதுகாப்பதில் உடையின் பங்கு என்ன என்பதை மகள்களுக்கு புரிய வைக்கவேண்டும். முடியாது, கூடாது, அதெல்லாம் நடக்காது என்று சொல்லும் தைரியம் எந்த பெண்களிடம் எல்லாம் இருக்கிறதோ அவர்கள் காதல் வலைகளில் எளிதாக சிக்குவதில்லை.

முடியாது என்று சொல்லத் தைரியம் இல்லாத பெண்களே காதலில் பெரும்பாலும் சிக்குகிறார்கள். ஆண் ஒருவர் அநாவசியமாக பெண்ணின் உடலைத் தொடுதல், உடலை வர்ணித்தல், அநாவசிய அழைப்பு விடுத்தல் போன்ற எதிலாவது ஈடுபட்டால் அந்த நிமிடத்திலே விழிப்படைந்து கோபத்தையும், ஆக்ரோஷத்தையும் காட்டத் தெரியவேண்டும்.

இந்த மாதிரி வேலைகளை எல்லாம் என்னிடம் வைத்துக்கொள்ளாதே என்று தைரியமாக சொல்ல வேண்டும். அவ்வாறு தைரியமாக சொன்னால், இந்தப் பெண்ணிடம் தன் எதிர்பார்ப்பு எதுவும் நடக்காது என்று அவன் ஒதுங்கிவிடுவான். படித்துக்கொண்டிருக்கும் மகள் காதல் வசப்பட்டால், அவள் அவனை உலகிலே மகாயோக்கியன் என்பாள். அதை அப்படியே தாய் நம்பிவிடக் கூடாது.



ஒருவேளை அந்த பையன் வசதிபடைத்தவனாக இருப்பான். அதனால் மகளின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்று நம்பி, அந்த காதலை ஒருபோதும் ஊக்குவிக்கக்கூடாது. இப்போது நீ படிக்கவேண்டும். அதுமட்டுமே உன்வேலை. காதலை எல்லாம் உடனே ஒதுக்கிவிடு என்று கூறி, படிப்பின் முக்கியத்துவத்தையும், எதிர்காலத்தையும் நினைவுபடுத்துங்கள்.

எதை வேண்டுமானாலும் என் அம்மாவிடம் என்னால் பேச முடியும் என்ற நம்பிக்கையை மகளுக்கு கொடுங்கள். அப்படி ஒரு நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டுவிட்டால், எந்த விஷயத்தையும் அவள் மனதில் வைக்கமாட்டாள். எல்லாவற்றையும் மனந்திறந்து பேசத் தொடங்கி விடுவாள்.

டீன்ஏஜில் ஒரு பெண் பாலியல் பற்றி எதை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமோ அதை எல்லாம் அவள் தன் தாய்மூலம் தெரிந்துகொள்வது நல்லது. தவறான புத்தகங்கள், தோழிகள், படங்கள் மூலம் அவள் தெரிந்துகொள்ள விரும்புவது நல்லதாக இருக்காது.



**எல்லாக்** காலங்களிலும் இளமையையும் அழகையும் கட்டுக்கோப்பாக வைத்திருக்கிற பெண்கள் அபூர்வம். நடிகை சினேகா அப்படியொரு அபூர்வப் பெண்மணி! கல்யாணத்துக்கு முன் எப்படி இருந்தாரோ, இப்போதும், அதே அழகு!

சாப்பிட, தூங்க மறந்தாலும், உடற்பயிற்சி செய்ய மறக்காத பிடிவாதம்!

"சாப்பிடாம இருந்தா வெயிட் குறைஞ்சிடும்னு நினைக்கிறவங்க நிறைய பேர். ஒரு காலத்துல நான் கூட சரியா விவரம் தெரியாம அப்படித்தான் இருந்திருக்கேன். ஆனா, அது சட்டுன்னு முகத்துல காட்டிடும். அப்புறம்தான் கரெக்டான டயட்டிங் பத்தித் தெரிஞ்சுக்கிட்டேன். கிட்டத்தட்ட மூணு வருஷமா அதை ஃபாலோ பண்றேன். முன்னைவிட இப்ப என் ஸ்கின்னும் உடம்பும் அழகா இருக்கிறதை உணரமுடியுது.

# புன்னகை இளவரசியின் அழகு இரகசியம் என்ன?

டயட் பண்ண ஆரம்பிச்ச முதல் 2 வாரங்களுக்கு நான் வேற எந்த வேலையும் பண்ணமாட்டேன். முதல்ல அதுக்கு என் உடம்பு பழகணும். எங்களை மாதிரி ஆட்களுக்கு முகத்தையும் உடம்பையும் அழகா வச்சுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறதால. வேற எந்த கவனமும் இல்லாம அதுல மட்டுமே சிந்தனையா இருப்போம். மத்தவங்களுக்கு அந்த நிர்ப்பந்தம் இருக்கிறதில்லை.

"ஒரு வாரம் டயட் பண்ணிட்டு, ஒரு மாற்றமும் இல்லைன்னு மறுபடி பழையபடியே சாப்பிட ஆரம்பிச்சிடுவாங்க. எப்பேர்பட்ட டயட்டும் உடற்பயிற்சியும் 6 வாரம் கழிச்சுதான் ரிசல்ட்டை காட்டும். அது வரைக்கும் பொறுமை அவசியம்" என்கிறார் புன்னகை இளவரசி. காலையில் எழுந்ததும் தண்ணீர், பிறகு உடற்பயிற்சி... காலை உணவுக்கு ஆம்லெட்டும் பிரவுன் பிரெட்டும் ஒரேஞ்சு ஜுஸும். மதியத்துக்கு மறுபடி பிரவுன் பிரெட், சாலட், கொஞ்சம் சிக்கன்.

மாலை நேரத்தில் கொஞ்சம் பழங்கள் அல்லது சூப். இரவுக்கு சப்பாத்தி, வெஜிடபுள் சாலட், சிக்கன் டிக்கா... இதுதான் சினேகாவின் தினசரி மெனு. அழகா, இளமையா இருக்கிறதுங்கிறது ஒருவிதமான வைராக்கியம். அவ்வளவுதான், என்கிறார் மாறாத புன்னகையுடன்!

# காரச் சட்னி



**சின்ன வெங்காயம் – 1 கப்**
**தக்காளி – 1**
**பூண்டு – 2 பல்,**
**காய்ந்த மிளகாய் – 6 முதல் 8**
**புளி – 1 சிறு துண்டு**
**உப்பு – தேவைக்கேற்ப.**
**தாளிக்க:**
**கடுகு, உளுந்து – தலா அரை கரண்டி,**
**எண்ணெய் – 3 கரண்டி**

## செய்முறை

வெங்காயம் முதல் உப்பு வரையிலான அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து அரைக்கவும். தாளித்து, அதை சட்னியின் மேல் கொட்டவும். தாளிப்பின் மேல் சட்னியை விட்டுக் கொதிக்க விடக்கூடாது.

# பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-362

**கேள்வி : டீன்ஏஜ் பெண்கள் யார்மூலமாக பாலியல் தொடர்பானவற்றை அறிந்துகொள்ள வேண்டும்?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-16.04.2013

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 362
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 360 இற்கான விடை :- மேரி ஸ்டொப்ஸ்
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- பா.துஷாந்தினி, 1/42B கதிரான வத்த, மட்டக்குளிய.

362

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
..............................
கையொப்பம் : ..............................

# நான்காம் மாதத் தொடக்கத்தில் என்ன சாப்பிடலாம்?



தாய்மையின் முதல் மூன்று மாதங்கள் அநேகப் பெண்களுக்கு தவிப்பான மாதங்கள். கரு நல்லபடியாகத் தேறி வளர வேண்டுமே என்கிற பயம் ஒரு பக்கமும், வாந்தி, மயக்கம், தலைசுற்றல் என மசக்கை தரும் இம்சை இன்னொரு பக்கமுமாக 3 மாதங்களைக் கடப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிடும்.

நான்காம் மாதத் தொடக்கத்தில்...

நிலைமை கொஞ்சம் சீரடையும். மூன்றாம் மாதம் வரை தண்ணீர் குடித்தால் கூட வாந்தி எடுத்துக் கொண்டிருந்தவர்கள், மசக்கை நின்றதும், உணவில் கவனம் செலுத்த வேண்டும். 4-5-6 மாதங்களில் இரும்புச்சத்துக் குறைபாடு சற்று அதிகமாகக் காணப்படும். இரும்புச்சத்து நிறைய சேர்த்துக் கொண்டால் குழந்தை கறுப்பாகப் பிறக்குமோ என்கிற பயம், படித்த பெண்களுக்கே உண்டு.

இரும்புச்சத்தால் குழந்தை கறுப்பாகவோ, குங்குமப்பூவால் சிவப்பாகவோ பிறப்பதில்லை. குழந்தையின் நிறம் என்பது தாய், தந்தையின் மரபினைப் பொருத்து அமைவது. இரும்புச்சத்து அதிகமுள்ள உணவுகளை உட்கொண்டால்தான் இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் அதிகரித்து, குழந்தையின் வளர்ச்சி மேம்படும். இரும்புச்சத்து குறைவாக உள்ள கர்ப்பிணிகளுக்கு கருச்சிதைவோ, குறைமாதப் பிரசவமோ ஏற்படலாம்.

முதல் 3 மாதங்கள் தாயின் கருவறையில் அமைதி காத்த சிசு, அடுத்தடுத்த மாதங்களில் தனது கராத்தே உதைகளால் உள்ளே தன் இருப்பை தாய்க்கு உணர்த்த ஆரம்பிக்கிறது. அதிக இரத்த ஓட்டம் காரணமாக, கர்ப்பிணிகளின் பல், ஈறு, மூக்கு துவாரப் பாதைகள் மென்மையாக மாறும். கர்ப்பிணிகளின் இயல்பான இரத்த அழுத்தம் 140/90 என இருந்தால், இம்மாதங்களில் அது 110/70 என மாறும்.

குறைந்த இரத்த அழுத்தம் காரணமாக மயக்கம் வரும். காலை எழுந்ததும், இயற்கையான பழச்சாறு குடித்துவிட்டு, பிறகு சற்று நேரம் ஓய்வெடுத்தால் இது சரியாகும். கருவின் வளர்ச்சி அதிகமாக உள்ள இம்மாதங்களில், தாய், சேய் இருவருக்கும் கல்சியம் மற்றும் இரும்புச் சத்து தேவை அவசியமாகிறது.

இவைகளுக்கு இறுதியில் பொறுப் பேற்க வேண்டியவர் அம்மாநிலமுதல் அமைச்சர் மோடிதானே என்ற வினாவை முன்வைக்கின்றனர்.

இதற்கான பொறுப்பை இதுவரை மோடி ஏற்க முன்வராமையால் நாட்டை ஆள மோடி தகுதியானவர் அல்லர் என்று இவர்கள் கூறுகின்றனர். மோடி யின் மதச்சார்பு தன்மை என்ற நிலை யானது அவருக்குப் பெருங்குறை யுடையதாகும்.

குஜராத்தில் முன்னேற்றம் முறை யாக அமைந்துவிடவில்லை என்பது நிரூபிக்கப் பட்டுவிட்டது.

குஜராத்தில் தெற்குப் பகுதி மாவட்டங்கள் (எடுத்துக்காட்டாக சவுராஷ்டிரா உள்பகுதிகள்) வறண்டுப் போய்க் கிடக்கின்றன. சுற்றுக்சூழல் அதிகம் மாசுபட்டுக் கிடக்கிறது. கல்வித் தரம் பெரும் வீழ்ச்சி அடைந்து விட்டது. ஊட்டச்சத்துக் குறைந்த குழந்தைகளின் எண் ணிக்கை மிக அதிகம் தனி மனித வின் வருமானம் அதிகமாக உள்ள ஒரு மாநிலத்தின் நிலைமை இது!

ஒரு சமூக இயல் ஆர்வலராக முழுமை யான முன்னேற்றத்தின் புள்ளிவிவரங்களில் நம்பிக்கையற்ற நான், இந்தியாவில் குஜராத் முன் னேறியுள்ளது என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

மூன்றாம் முறையாக நரேந்திர மோடி ஆட்சி ஏற்ற நிலையில், சவுராஷ்டிரா வழியாக நான் பயணம் செய்தேன். சுற்றுச் சூழல் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியாகவும், உயிருக்கே பெருமளவில் போராட வேண்டிய பகுதியாகவும் தெளிவாகத் தெரிந்தது.

குடிநீர், சாலைகள், பயண வசதிகள், துப்பரவுப் பணிகள் மிகவும் மோசம் பரிதாபத்திற்குரிய நிலையில் இருந்தன. இயற்கை வளங்கள் அரிதாகவே காணப் பட்டன. ஆடு மேய்ப்பவர்கள் புல் வெளியைத் தேடி பல மைல்கள் நடக்கவேண்டியிருந்தது.

சமூக, பொருளாதார முன்னேற் றத்தில் சுமாரான மாநிலங்களை விட குஜராத் சிறந்ததுதான். ஆனால் நாட்டின் மிகச் சிறந்த மாநிலங்களுள் ஒன்றல்ல!

இந்தியா முழுவதும் நான் பயணம் செய்த மாநிலங்களில் கேரளா, இமாச்சலப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் தான் அதிகமானவர்களுக்கு மரியாதையான வாழ்வாதாரங்களை வழங்குகின்றன என எண்ணுகிறேன்.

தெற்கு குஜராத்தில் பட்டேல்கள், பொது வளங்களைக் கபளீகரம் செய்துள்ளதைத் தடுத்து நிறுத்த வில்லை. பணக்கார விவசாய முதலாளிகளுக்கு குறைந்த கட்டணத் தில் மின்சாரம் வழங்கப்படுகிறது.

எனது கண்ணோட்டத்தில் மோடி இந்தியாவின் பிரதமராவதற்குத் தகுதியற்றவர் என்பது. அவர் உள்ளுணர்வும் அடா வடித்தனமான எதேச்சதிகாரத் தன்மையும் தான் காரணம்.

நான் இந்தியாவின் முகத்தை மாற்றிய மைப்பேன் என்கிறார் நாம் அல்ல, நான் நான்தான் எல்லாம்!

மோடியின் குஜராத்திலே உடன் உழைப்பார் யாருமில்லை. உடன் பணியாளர்களும் யாரும் இல்லை. அவருக்கு 56 அங்குல நெஞ்சுண்டு. அவரே இப்படி தற் புகழ்ச்சியில் ஈடுபடுவதுண்டு. எனவே குஜராத் மாநிலத்தில் ஆண் - பெண் இருபாலா ரும் அவருடைய சர்வ அதிகாரத் திற்கும் கட்டுப்பட்டே இருக்க வேண்டும்.

எதிலும் ஆதிக்கம் செலுத்தும் மனிதர் அவர் என்பது வெளிப் படை யானது. சமூக அறிவியலாளர் களின் கருத்துக்களை எடுத்துக் கொள்வதில்லை. ஒரு பதினைந்து நிமிடங்கள் அவர் பேச்சைக்கேட்டாலே போதும்.அவர் குறுக்கே யார் வந்தாலும் உதறித் தள்ளி விடும் மனிதர் மோடி என்பது புலனாகிவிடும். அவர் குரல் வலிமையானது - கேட்ப வர்களை அச்சமூட்டித் தன்னைப் பின்பற்றச் செய்யும் முயற்சியாகும்.

அரசியல் முரடர்கள் எல்லோரைப் போலவும் சுதந்திரமான பேச்சுகளை யும், கலைப் படைப்புகளையும் மோடி வெறுக்கிறார்.

சில புத்தகங்களையும், சில திரைப் படங்களையும் அவர் தடை செய்துள்ளார். - (புத்தகங்களைப் படிக்காமலும், திரைப் படங்களைப் பார்க்காமலுமே இவ்வாறு செய் துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது).

சுதந்திர மனம்கொண்ட எழுத் தாளர்களையும், சிந்தனையாளர் களையும், கலைஞர்களையும் அச்சுறுத்தி வந்திருக்கிறார் என்று விரிவாக பிரபல வரலாற்றாளர் - சமூக இயலாளர் திரு.இராமச்சந்திர குகா இந்து ஏட்டில் எழுதியுள்ளார்.

மோடியைப் பற்றி இந்த இரண்டு சிந்தனையாளர்களும் சொன்னது போதாது என்றால் உச்சநீதிமன்ற நீதிபதிகள் துரை சாமி ராஜு (தமிழ் நாட்டவர்) அரிஜித் பசாயத் ஆகியோரின் தீர்ப்பில் நரேந்திர மோடியை நீரோ மன்னனுக்கு ஒப்பிட்டதை யும் இணைத்துக்கொள்ளலாமே!

ஆமாம், இந்தியாவுக்கு இப்படிப்பட்ட ஒரு பிரதமர் நீரோ மன்னன் தேவையாம்! சொல்லுகிறது காவிக் கூட்டமும் பார்ப்பன ஊடகங்களும் உஷார்! உஷார்!!

**அடுத்த பிரதமர் யார்?**

கருத்துக் கணிப்பில் மோடிக்கு முத லிடம், ராகுலுக்கு இரண்டாம் இடம் இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்? என்ற கேள்வியோடு தனியார் நிறுவனம் ஒன்று நடத்திய கருத்துக்கணிப்பில் பா.ஜ.க கூட்டணி சார்பில் பிரதமர் பதவிக்கு நிறுத்தப்படவுள்ள மோடிக்கு முதல் இடம் கிடைத்துள்ளது. அதே சமயம் காங்கிரஸ் கட்சி பெரிதும் நம்பியிருக்கும் ராகுல் காந்திக்கு இரண்டாம் இடம் கிடைத்துள்ளது.

விரைவில் வர உள்ள பாராளுமன்ற தேர்தலுக்காக, காங்கிரஸ் கூட்டணியும், பா.ஜ.க கூட்டணியும் பரபரப்பாக களத்தில் இயங்கிவருகிறது. இதில் காங்கிரஸ் கூட்டணியின் தேர்தல் வேட்பாளராக ராகுல் காந்தி நிறுத்தப் படுவார் என்று கூறப்படுகிறது. அக்கட்சி யின் மூத்த தலைவர்களும் அதற்கு பச்சைக்கொடி காட்டிவருகிறார்கள். அதேபோல் பா.ஜ.க சார்பில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தேர்தல் வேட்பாளராக களம் இறக்கப்படலாம் என்றும், அதற்கு பா.ஜ.க கட்சியின் மூத்த தலைவர்கள் சிலரும் விருப்பமும் தெரிவித்துள்ளார்கள்.

இந்த நிலையில் "அடுத்த பிரதமர் யார்?" என்ற கருத்துக்கணிப்பை தனியார் நிறுவனம் ஒன்று சமீபத்தில் நடத்தியது. பிரதமர் பதவிக்கு யார் பொருத்தமானவர் என்று கேள்வி கேட்கப்பட்டது.

மன்மோகன்சிங், சோனியா, அத்வானி, நரேந்திர மோடி, ராகுல் உட்பட சிலரது பெயர்களும் கொடுக்கப்பட்டன. கருத்து கணிப்புகளில் பங்கேற்றவர்கள் இந்த பெயர்களில் இருந்து ஒருவரை தேர்வு செய்ய கூறப்பட்டிருந்தனர். கருத்துக் கணிப்பு முடிவு வெளியிடப்பட்டது. இதில் குஜராத் முதல்வர் நரேந்திரமோடி 43 சதவீதம் பேரின் ஆதரவை பெற்று முதல் இடத்தைப் பிடித்தார்.

சென்னை, டெல்லி, மும்பை, கொல் கத்தா, லக்னோ நகரங்களில் நரேந்திர மோடிக்கு அபரிமிதமான மக்கள் ஆதரவு கிடைத்திருக்கிறது. பெண்களைவிட ஆண்கள்தான் நரேந்திரமோடிக்கு அதிக ஆதரவு தெரிவித்துள்ளனர். ராகுல் காந்திக்கு கருத்துக்கணிப்பில் 2ஆவது இடமே கிடைத்துள்ளது.

இந்திய நகரங்களில் பெங்களூரில் மட்டுமே ராகுல்காந்திக்கு ஆதரவு உள்ளது என்றும், மற்ற அனைத்து நகரங்களிலும் ராகுலுக்கு எதிர்ப்பு அலையே காணப்படுகிறது என்று தெரிவித்துள்ள தன-யார் நிறுவனம், ராகுலுக்கு ஆண்களைவிட பெண்களிடம் அதிக ஆதரவு இருப்பதாகக் கூறியுள்ளது.

பிரதமராக ஜெயலலிதாவுக்கும் ஆசை "காங்கிரசுக்கு முடிவுகட்டும் தகுதி ஜெய லலிதாவுக்கு மட்டும்தான் உள்ளது" என அ.தி.மு.க., கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நாஞ்சில் சம்பத் சில வாரங் களுக்கு முன்பு பேசினார்.

புதுச்சேரி அ.தி.மு.க. சார்பில், ஆட்டுப் பட்டி அந்தோணியார் கோவில் அருகில் உள்ள பெரியார் திடலில் பொதுக்கூட்டம் நடந்தது. மாநிலச் செயலாளர் அன்பழகன் எம்.எல்.ஏ., தலைமை தாங்கினார். அவைத் தலைவர் பாண்டுரங்கன், எம்.எல்.ஏ.க்கள் ஓம்சக்தி சேகர், புருஷோத்தமன், பெரியசாமி, பாஸ்கர், காரைக்கால் மாவட்டச் செயலாளர் ஓமலிங்கம் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நாஞ்சில் சம்பத் பேசியதாவது: இந்தியாவின் அடுத்த பிரதமர் ஜெயலலிதாதான். மத்திய அரசினால் காலம் காலமாக வஞ்சிக்கப்படும் தமிழகத்தை, காவிரி நதி நீர் பிரச்சினையில் இருண்டு கிடக்கும் தமிழகத்தை, வெளிச் சத்திற்கு கொண்டுவர ஜெ., தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில் பேசும் போது, சில நிமிடங்களுக்குள் மணி அடித்துவிட்டனர். இது, ஏழு கோடி மக்களுக்கு இழைத்த அவமானம். மணி அடித்தவர்களுக்கு, சாவுமணி அடிக்கும் காலகட்டத்தில் உள்ளோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒருவர் பிரதமராக இருப்பதை எப்படி ஏற்பது? கருணாநிதி யின் சதிகளைக் களைந்து, மக்களுக்கு கடமையாற்றிவரும் ஜெ., இருக்க வேண்டிய இடம் செயின்ட் ஜோர்ஜ் கோட்டை அல்ல, டில்லி செங்கோட்டை. காங்கிரசுக்கு முடிவு கட்டியாக வேண்டும். அதற்கு ஜெ.வுக்கு மட்டும்தான் தகுதி உள்ளது. காவிரி நீர், தமிழர்களின் வாழ்க்கைப் பிரச்சினை. இப்பிரச்சினைக்கு நடுவர் மன்றம் வேண்டும் என முதல் முதலில் கூறியவர் எம்.ஜி.ஆர்., நடுவர் மன்றத்தை அமைத்தவர் வி.பி.சிங். காவிரி நதி நீர் பிரச்சினைக்கு காரணமே கருணாநிதிதான் என்றுகூறிய அவர் இலங்கைத் தமிழர் விடயத்திலும் ஜெயல லிதா பிரதமரானால் முக்கிய மாற்றங்கள் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

**அ.தி.மு.க. பிரச்சார பீரங்கிகள்**

தமிழக முதலமைச்சர் ஜெயலலி தாவை எதிர்வரும் மக்களவை தேர்தலுக் குப் பிறகு எப்படியாவது பிரதமராக்கியே தீருவது என்ற முடிவுடன் அ.தி.மு.க. பிரச்சார பீரங்கிகள் மேடைகளில் முழங்கிவருகிறார்கள்.

குறிப்பாக அ.தி.மு.க. தலைமையிட மிருந்து கார், சீர எல்லாம் பெற்று துணை கொள்கை பரப்புச் செயலாளர் ஆக்கப் பட்ட நாஞ்சில் சம்பத் நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரது சமீபத்திய பிரச்சாரங்களில் ஜெயலலிதாவைப் பிரதமராக்குவோம் என்ற முழக்கத்தை அடிக்கடி கேட்கமுடிகிறது.

சுதந்திர இந்தியாவில் தேர்தல்மூலமோ அல்லது சட்டம் அனுமதித்துள்ள வழிகளில் போட்டி யிட்டோ அல்லது உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டோ பிரதமராகும் சாத்தியம் உள்ளது. எனினும் இந்திய அளவில் பிரதமராவதற்கு நாற்பது எம். பிக்களைப் பெற்றிருந்தால்போதும் என்ற நம்பிக்கை சற்று அதிகம்தான். 10%க்கும் குறைவான எம்பிக்களை வைத்துக் கொண்டு, காங்கிரஸ், பா.ஜ.க ஆகிய கட்சிகளின் சார்பில் பிரதமர் போட்டியிலுள்ளவர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு பிரதமர் ஆகிவிடலாமென்று நம்புவதற்குப் பலமான அரசியல் பின்புலம் அவசியம். அத்தகைய பின்புலம் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு இருக்கிறதா என்று யாரும் யோசித்ததாகத் தெரியவில்லை.

கட்சித் தலைவரை அளவுக்குமீறி புகழ்வதும், அருமை பெருமைகளை எடுத்துரைப்பதும் எல்லாக் கட்சியிலும் உள்ளதுதான். இதுவே பிரச்சாரகர்களுக்கு வழங்கப் பட்டுள்ள முக்கிய பணி என்பதும் மக்கள் அறியாத விசயமன்று. அ.தி.மு.க.வினருக் கும் அதன் தலைவர் ஜெயலலி தாவுக்கும் இத்தகைய புகழ்ச்சிகளில் அதிக ஆர்வ முண்டு.

வருங்கால பிரதமர் ஜெயலலிதா என்று முழங்கும் அ.தி.மு.க.வினருக்கு, ஜெய லலிதா பிரதமர் ஆகிவிட்டால் தமிழக முதலமைச்சர் யாரென்று சொல்வதற்குத் துணிச்சல் உண்டா? அல்லது அதைத் தான் ஜெயலலிதா சகித்துக் கொள்வாரா? என்ற கேள்விகள் ஒருபக்கமிருக்க ஜெயலலிதாவின் நண்பர்கள் மோடி, சோ சுப்ரமணியசாமி, தா.பாண்டியன் ஆகியோர்தான் ஏற்றுக்கொள்வார்களா? ஜெயலலிதாவைப் பிரதமராக்கும் அ.தி.மு.க. வினரின் ஆசை குறித்து இவர்கள் வெளிப்படையாக கருத்து தெரிவிக்காமல் இருப்பதன் காரணம் என்னவோ.

**ஜெயலலிதாவின் கனவு**

"நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றிபெற வேண்டும் நாட்டின் பிரதமராக வேண்டும்" என்ற கனவு ஜெயல லிதாவை அனைத்து வகைகளிலும் ஆட்டிப்படைத்து, அல்லோல கல்லோலப்படுத்துகிறது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி வெளி யிட்டுள்ள கேள்வி பதில் அறிக்கையில்

கேள்வி : மின் பற்றாக்குறைக்கு முழுக்க முழுக்க தி.மு.கதான் காரணம் என்கிறாரே ஜெயலலிதா?

கருணாநிதி : ஆமாம், எதற் கெடுத்தாலும் தி.மு.க.வும், நானும் தான் காரணம்! மக்கள் பிரச்சினை களைப்புரிந்து கொள்ளவோ, அவற்றை உரிய முறையில் தீர்க்கவோ இயலாதவர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்ள இப்படித்தான் மற்றவர்கள் மீது பழி சுமத்திட முயலுவார்கள்.

நான் ஏற்கனவே, "மின்சாரத்தைத் தமிழகத்திற்குக்கொண்டு வருவதற் கான வழிவகை இல்லாத போது எவ்வாறு குஜராத்துடன் ஒப்பந்தம் செய்தார்கள், அதிகாரிகள் முன் கூட்டியே எச்சரிக்கவில்லையா" என்று கேட்டிருந்தேன். அதைப் போலவே, "டெல்லியிலிருந்தும் மின்சாரத்தைக் கொண்டுவர இயலாது அதற்கு மாறாக, தமிழகத்திலே மத்திய அரசின் முயற்சியிலே உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கேட்டுப்பெற வேண்டும்" என்று கூறினேன். இதிலே வேடிக்கை என்னவென்றால்,' ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அரசு சார்பில் வைக்கப் பட்ட 2012-2013ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை பக்கம் 44 இல் "வெளி மாநிலங்களில் கிடைக்கும் மின்சாரத்தை நமது மாநிலத்திற்குக் கொண்டு வருவதற் கான மின் வழித் தட வசதிகளில் நெருக்கடி உள்ளதால், மின்சாரத்தை வெளியிலிருந்து கொண்டுவருவதற்கும் வழியில்லை" என்று அவர்களே ஒப்புக்கொண்டு தெரிவித்துவிட்டு, அவர்களே குஜராத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டதும், மத்திய அரசு டெல்லியிலிருந்து மின்சாரத்தை வழங்கிடவில்லை என்பதற்காக - மத்திய அரசின் மீது பழி போடுவதும் -உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதும் முறைதானா?

அது மாத்திரமல்ல ஜெயலலிதா மத்திய அரசுக்கு அவசரக்கடிதம் எழுதி கூடங்குளம் ஆலைப் பணி களைத்தடுத்து நிறுத்தாமல் இருந் திருந்தால், அங்கிருந்து மின்சாரமும் கிடைத்திருக்கும், இந்த அளவிற்கு மின்வெட்டும் வந்திருக்காது. ஆனால் ஜெயலலிதா ஆட்சியினர் கூடங்குளம் போராட்டக்காரர்களை உசுப்பிவிட்டார்கள். பின்னர் அவர் களை கைவிட்டுவிட்டார்கள். இதெல்லாம் தமிழகத்தில் அனைவருக்கும் தெரி யும். இப்போது தாம் தப்பித்துக் கொள்ள தி.மு.கமீது பழி சுமத்து கிறார் என்பதும் தமிழ் நாட்டு மக்களுக் குத் தெரியும். "நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றிபெற வேண்டும், நாட்டின் பிரதமராக வேண்டும்" என்ற கனவு அவர்களை அனைத்து வகைகளிலும் ஆட்டிப்படைத்து. அல்லோலகல் லோலப்படுத்துகிறது. பழிசுமத்துவதும், பாசாங்கு செய்வதும், பசப்பு மொழி பேசுவதும் - அந்தக் கனவின் விளைவு களே!" என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அடுத்த பொதுத் தேர்தலில் மிக அதிகளவில் நாடாளு மன்ற ஆசனங் களைக் கைப்பற்றுவ தும் மத்திய ஆட்சியில் தீர்மானகர மான சக்தியாக விளங்குவதுடன் தொடர்ந்து தமிழக ஆட்சியை தக்க வைப்பதும் அ.தி.மு.க.வின் இலக்காக உள்ளது என அரசியல் ஆய்வாளர் கள் தெரிவிக்கின்றனர். இலங்கை விவகாரம் தொடர்பான ஜெயலலிதா வின் அதிரடி அறிவிப்பு அணு குமுறைகள் தமிழ்நாட்டு வாக்காளர் களை கவர்வதற்கான ஒரு பிரதான யுக்தியாகவும் உள்ளதை ஆய்வாளர் கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



**நான் இந்தியாவின் முகத்தை மாற்றியமைப்பேன் என்கிறார் நாம் அல்ல, நான் நான்தான் எல்லாம்!**

**மோடியின் குஜராத்திலே உடன் உழைப்பார் யாருமில்லை. உடன் பணியாளர்களும் யாரும் இல்லை. அவருக்கு 56 அங்குல நெஞ்சுண்டு. அவரே இப்படி தற்புகழ்ச்சியில் ஈடுபடுவதுண்டு. எனவே குஜராத் மாநிலத்தில் ஆண் - பெண் இருபாலாரும் அவருடைய சர்வ அதிகாரத் திற்கும் கட்டுப்பட்டே இருக்க வேண்டும்.**

**தொகுப்பு - வேணுகிருஷ்ணா**

**இந்துசமயம்** தொன்மையானது. தொடர்ந்தும் வளர்ந்து வருவது. காலத்திற்குக் காலம் ரிஷிகளும், மெய்ஞானிகளும், சித்தர்களும் நாயன்மார்களும் இதை வளர்த்து வந்துள்ளனர். வருகின்றனர். இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட வேதங்களும், ஆகமங்களும், இதிகாச புராணங்களும், திருமுறைகளும், சித்தாந்த சாஸ்திர நூல்களும், இந்துக்களது மெய்ஞான சிந்தனைகளே! நவீன விஞ்ஞானத்தின் முன்னோடி என்ற உண்மையினை விளக்கி நிற்கின்றன.

எமது இந்து சமயத் திருநூல்களின் சிந்தனைகள் எவ்வாறு நவீன விஞ்ஞானத்திற்கு முன்னோடியாக அமைய முடியும்: அமையலாம் என்ற வினா நம்மில் பலருக்கு ஏற்படலாம். இந்திய, ஐரோப்பிய வரலாறுகள் தெரிந்தவர்கள் இதற்கான விடையினை இலகுவில் புரிந்துகொள்வர். குறிப்பாக இந்தியாவும், இலங்கையும் மேலைத்தேசத்தவர்களால் பல நூற்றாண்டுகள் ஆட்சிக்குட்பட்டிருந்துள்ளன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் இந்த நாடுகள் அடிமைப்படுத்தப்பட்டு, ஆட்சி செய்யப்பட்டிருந்தன. வர்த்தக நோக்கத்திற்காக இந்நாட்டவர்கள் இந்தியாவிற்கு வந்திருந்தாலும், இந்நாடுகளின் அறிவுச் செல்வங்களை அள்ளி செல்வதிலும், சூறையாடுவதிலும் கவனம் செலுத்தி வந்தனர். அவ்வாறு அள்ளிச் சென்ற அறிவுச் செல்வங்களில் வேதம், ஆகமம், இதிகாச புராணங்கள் முக்கியமானவை.

இவற்றினைத் தத்தமது நாடுகளிற்குக் கொண்டு சென்ற அந்நிய தேசத்தவர், அதனை தத்தமது மொழிகளில் மொழிபெயர்த்து அதிலுள்ள அறிவியல் சிந்தனைகளை ஆராய்ந்தறிந்து அதனடிப்படையில் பல விஞ்ஞானக் கண்டு பிடிக்களை மேற்கொண்டிருந்தனர்.

அமெரிக்கா, பிரான்ஸ் தேசங்களில் அமைந்துள்ள 'கீழைத்தேசக் சுவடிகள் காப்பகம்', நூதன சாலைகள் என்பன இதற்குச் சான்று பகிர்கின்றன. மேலும் பிரான்சில் காணப்படும் 'பாண்டிச்சேரி ஆய்வு நிறுவனமும்' இதனை உறுதிப் படுத்தும். இந்த ஆய்வு நிறுவனம் வேதங்கள், ஆகமங்கள், இதிகாச புராணங்கள் என்பவற்றில் கூறப்பட்டுள்ள விடயங்களை ஆய்வுசெய்து கொண்டிருப்பது கற்றோர் அறிந்ததே!

இந்த அடிப்படையில்தான் ஆரம்பத்தில் கீழைத்தேச அறிவியல் களஞ்சியங்கள் மேலைத்தேச நாடுகளிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவை விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களாக வளர்ச்சி பெற்று வந்துள்ளன என்ற உண்மையின்

# இந்துக்களது மெய்ஞான சிந்தனைகளே விஞ்ஞானத்தின் முன்னோடி!



அடிப்படையிலேயே! இந்த ஆய்வுக் கட்டுரையினை நாம் நோக்க வேண்டும்.

**அறிவும் விஞ்ஞானமும்**

இந்துசமயத்தின் மிகத் தொன்மையான நூல் வேதங்கள். இது இறை வழிநின்ற ரிஷிகளால் தோற்றுவிக்கப்பட்டதென்பது இந்துசமய மரபு. இந்த வேதம் 'வித்' என்ற வினையடியிலிருந்து பிறந்ததென்பர். இதன் கருத்து 'அறிவு' என்பதாகும். அவ்வாறே! 'ஆகமம்" என்ற சொல்லுக்கு கருத்து, 'தொன்று தொட்டுவரும்' அறிவு' என்பதாகும். இதிகாச புராணங்களும் இந்துக்களது அறிவுக் களஞ்சியமாகவுள்ளன என்பது இதனை ஆய்வு செய்த வெளிநாட்டு அறிஞர் கருத்தாகும். விஞ்ஞானம் என்ற பதமும் அறிவு என்பதையே சுட்டும். மெய்ஞானிகளும், விஞ்ஞானிகளும் அறிவு ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

**மெய் ஞானியும் விஞ்ஞானியும்**

இந்து மெய்ஞானிகளினதும், சிந்தனைகளும், விஞ்ஞானிகளினது சிந்தனைகளும் இப்பிரபஞ்சத்தின் உண்மை பற்றிய ஆய்வாகவே காணப்படுகின்றது. இதனை இன்னொரு விதமாகக்கூறின், இரு பகுதியினரது சிந்தனைகளும், ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகவே காணப்படுகின்றன. எனினும் இப்பிரபஞ்ச உண்மைகளைக் கண்டுபிடிக்கும் முறைமைக்கிடையில் இரு பகுதியினருக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது.

இந்து மெய்ஞானிகள் மனத்தினைக் கருவியாகக் கொண்டு இறைவழி அல்லது ஆன்மீக வழிநின்று செபம், தவம், தியானத்தின் மூலம் ஞானத்தைப் பெற்று, பிரபஞ்ச உண்மைகளை அகக்கண்ணினால் கண்டுணர்ந்து வெளிப்படுத்தி வந்தனர். ஆனால் விஞ்ஞானிகள் புறக்கருவிகளைத் துணை கொண்டு, ஆய்வுகூடப் பரிசோதனைகள் மூலம் விஞ்ஞானக் கண்டுபிடிக்களைச் செய்துள்ளனர். மேலும் இந்து மெய்ஞானிகள் இப்பிரபஞ்ச இரகசியத்தை மட்டுமன்றி கண்ணுக்குப் புலப்படாத கடவுள், ஆன்மா பற்றியும் அவற்றின் இருப்பு, செயற்பாடு, இயல்புகள் பற்றியும் அறிந்து கூறியுள்ளனர். இதுவே இந்து மெய்ஞானிகளுக்கும், மேலைத்தேச விஞ்ஞானிகளுக்குமுள்ள முக்கிய வேறுபாடாகும்.

இந்து மெய்ஞானிகள் தங்கள் மனத்தினைப் பிரபஞ்ச வெளியுடன் தொடர்பு படுத்திப் பல உண்மைகளைக் கண்டுணர்ந்து வெளிப்படுதியுள்ளனர். இதனை நவீன விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர். புதிய கருத்துக்கள் ஆகாயத்திலிருந்து தமக்குக் கிடைத்ததாக தோமஸ் அல்வா எடிசன் தெரிவித்துள்ளார். நம்நாட்டுச் சித்தாந்த மேதை அளவெட்டியூர் கைலாசபதி, 'மெய்யியல்' என்ற தனது நூலிலும் இதனைத் தெரிவித்துள்ளார். ஆகவே கண்டுபிடிக்கான விடயங்கள் யாவும், இப்பிரபஞ்சம் எங்கும் மறைந்து பொதிந்து இருக்கின்றன. அதனை மெய்ஞானிகளும், விஞ்ஞானிகளும் கண்டுபிடித்துள்ளனர் என்பதே யதார்த்தம்.

**கண்டுபிடிப்பு என்பது என்ன?**

விஞ்ஞானக் கண்டுபிடிப்பு என்பது புதிததாக எதனையும் இப்பூவுலகில் தோற்றுவிப்பதல்ல. ஏற்கனவே உள்ளவற்றைக் கண்டுபிடித்து வடிவ மாற்றம் செய்து, அதனை மனிதர்களின் வாழ்வியல் தேவைகளிற்குப் பயன்படுத்தி வரும் ஒரு தொடர் செயற்பாடு முறைமையாகும்.

'விசை' என்ற சக்தியை எடுத்துக்கொண்டால், இது பல்வேறு வடிவங்களில் பிரபஞ்சம் எங்கும் நிறைந்து காணப்படுகிறது. அதனை தொழில்நுட்ப வல்லுநர்கள் வாகனத்தைக் செலுத்துவதற்கும், மோட்டாரை இயக்குவதற்கும், மின்னை உற்பத்தி செய்வதற்கும், றொக்கட்டை விண்ணுக்குச் செலுத்துவதற்கும், பயன்படுத்துகின்றனர்.

N.P. ஸ்ரீந்திரன், ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.

(தொடரும்...)

# சூடு பிடிக்குமா? மட்டக்களப்பின் உள்ளூராட்சி தேர்தல் களம்

நாட்டில் எது நடக்கிறதோ, இல்லையோ அரசியல் மாத்திரம் நடந்து கொண்டே இருக்கிறது. அந்த வகையில் அனைத்து அரசி யல் தரப்பினரதும் விசேட எதிர்பார்ப்பு கிழக்கின் உள்ளூராட்சி சபைகளேயாகும். அண்மையில் கலைக்கப்பட்ட மட்டக்களப்பு மாநகர சபை உள்ளிட்ட 9 சபைகள் பற்றியே இந்த எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. இவ்விவகாரம் குறித்தே இந்தவாரம் ஆராயவிருக்கிறோம்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்குரிய தனது வேலைகளை கடந்த வருடத்திலிருந்தே ஆரம்பித்திருந்தது. இதற்கு ஒரு வருட காலத்துக்கு குறித்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒத்தி வைத்ததை முதல் வேலையாக சொல்ல முடியும். அதேநேரம் ஒவ்வொரு கட்சியும் தத்தம் பாட்டுக்கு அரசியல் நகர்வுகளை நடத்த ஆரம்பித்திருக்கிறது.

கிழக்கின் முக்கியத்துவம்மிக்க கட்சி என்று சொல்லிக் கொள்ளும் கிழக்கு மீட்கப்பட்ட பின்பு நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் குறிப்பிட்ட அனைத்து சபைகளையும் தன்வசம் வைத்திருந்த கட்சியாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உள்ளது.

இக்கட்சி கிழக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பின்பு, புலிகளிலிருந்து பிரிந்த கருணா தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக இந்தக் கட்சியினை உருவாக்கியிருந்தார். ஆனால் அவரது துரதிர்ஷ்டம் லண்டனுக்குச் சென்றவேளை கைதாகி சிறையில் அடைக்கப்பட்டார். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தற்போதைய மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் முதலமைச்சருமான சி.சந்திரகாந்தன் அக்கட்சியை பதிவுசெய்து அரசியல் நகர்வுகளை நடத்திச் சென்றார். அக்கட்சி கருணா மீண்டும் நாட்டுக்கு வந்தபோது மீள பொறுப்பளிக்கப்படவில்லை என்பது வேறு கதை.

கட்சியாகப் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூராட்சி தேர்தலில் மட்டக்களப்பு மாநகர சபையில் அரசாங்கத்துடனும், ஏனைய 8 பிரதேச சபைகளில் தனித்தும் போட்டியிட்டு வெற்றி பெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி அரசியல் வீழ்ச்சிகளையே சந்தித்து வந்தது.

இதற்கு அதன் செயற்பாடுகளாக இருக்கலாம் என்பது ஒரு சிலரது கருத்தாக இருந்தாலும், இக்கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்த கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான எட்வின் கிருஸ்ணானந்த ராஜா (பிரதீப் மாஸ்ரர்) அண்மையில் தன்னை அக்கட்சி விலக்கியுமை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கட்சித்தலைவரின் ஓரங்கட்டலால் விலக்கும் முன்பே கட்சிச் செயற்பாட்டினை இடைநிறுத்தியிருந்தோம்.

கடந்த 2008ஆம் ஆண்டிற்கு பின்னர் கட்சி சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் தொடர் தோல்வியையே சந்தித்தது. இதற்கான காரணம் தலைவரின் தன்னிச்சையான முடிவுகளேயாகும். இதற்கான முழுப் பொறுப்பையும் கட்சித் தலைவரே ஏற்கவேண்டும் என நான் பல முறை சுட்டிக்காட்டியிருந்தேன். இவ்வாறாக நான் சுட்டிக்காட்டிய விடயங்களே என்னை ஓரங்கட்டுவதற்கு காரணமாய் அமைந்திருந்தது எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடப்பட வேண்டும்.

இதற்கிடையில் இவர்கள் விலக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டவுடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்சபைக் கூட்டமும் புதிய உறுப்பினர்கள் தெரிவும் நடைபெற்று கட்சியின் தலைவர் சி.சந்திரகாந்தனால். தேசிய அமைப்பாளராக பஞ்சலிங்கம் தவேந்திரராஜா. பிரதிச் செயலாளர்- நிர்வாகமாக முன்னாள் மாநகர சபை பிரதி முதல்வராக கடமையாற்றிய ஆ.ஜோர்ச்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அத்துடன், எதிர்வரும் தொகுதி வாரி முறை உள்ளூராட்சி தேர்தலில் அதிகாரங்களை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தமதாக்கிக் கொள்வதற்காக பல புதிய முகங்களை தேர்தலில் களம் இறக்க உள்ளதாகவும் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்திருந்தார்.

இது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மட்டக்களப்பில் கலைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் முயற்சியாக இருக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரே நேரடியாக தனது முயற்சிகளை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்.

கடந்த வார இறுதியில் மட்டக்களப்புக்கு வந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரம சிங்க எல்.ரி.ரி.ஈ அமைப்பினர் 2005ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்களை வாக்களிக்கச் செல்ல விடாதமையினால் தற்போது மக்களுக்கு பாரிய ஒரு சிக்கலை உருவாக்கியிருக்கின்றார் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், இது ஒரு முக்கியமான தருணம். இன்று நாம் மேற்கொள்கின்ற காரியங்கள் எதிர்காலத்தில் ஒரு அரசியல் மாற்றத்தைத் தீர்மானிக்கும். ஏனெனில் இந்த அரசு விருப்பத்தின் பேரில் தனது அதிகாரங்களைக் கைவிடாது. அதனை நாம் ஏற்படுத்தும் சூழ்நிலையில் இருக்கின்றோம். எனவே வன்முறையற்ற ஓர் ஐக்கிய ஒற்றுமையை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் தான் தேர்தலுக்குச் செல்ல வேண்டும்.

அதற்காக தமிழர்களும் முஸ்லிம்களும் அரசாங்கத்திற்கெதிராக செயற்படுவதற்குத் தயாராக வேண்டும். மட்டக்களப்பை பொறுத்த வரையில் எந்த அமைப்புகளும் இல்லை. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெறுகின்றது. எமக்கு தேவை இங்கு ஒரு அமைப்பினை உருவாக்குவது. நாம் உருவாக்கலாம் நாம் தைரியமாகச் சொல்லாம். இரண்டு விடயங்கள் உள்ளன. இதில், எவ்வாறு சிவில் சமூகம் மக்கள் படையணியில் சேர்ந்து கொள்வதென்பது



மற்றையது. யார் இவற்றில் முன்னணி வகிப்பது என்பது தமிழ் பிரதேசங்களில் யார் முன்னிலை வகிப்பது என்பதை த.தே.கூ தீர்மானிக்கும் முஸ்லீம் பிரதேசங்களைப் பிரதேசத்தை பொறுத்தவரையில் வரையில் ஐ.தே.க. தீர்மானிக்கும் என்ற வகையில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

மட்டக்களப்பின் தமிழ், முஸ்லிம் பகுதிகளுக்கும் சென்றிருந்த ரணில் விக்கிரம சிங்க அரசாங்கத்தினை உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் மூலம் விழுத்தப் போவதாகவே கூறியிருக்கிறார்.

கடந்த 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தத் தேர்தலையும் வெல்லாத எதிர்க்கட்சியாக இருந்து வரும் ஐக்கிய தேசியக்கட்சி நடக்கப் போகும் தேர்தலிலாவது தன் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்பது ரணிலின் எதிர்பார்ப்பாக இருப்பது நல்லது தான்.

வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான எந்த ஒரு வேலையையும் செய்யமுடியாத அளவுக்கு மக்கள் மீது, பொருளாதார சுமையை ஏற்றி மக்களை அரசியல் பற்றியோ அரசின் செயற்பாடுகள் பற்றியோ சிந்திக்க விடாது இக்கட்டான சூழலில் வைத்துக் கொண்டிருக்கும் அரசாங்கம் இன்னும் ஒரு சில மாதங்களில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துமா என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கிறது.

மார்ச் 17ல் கலைக்கப்பட்ட மட்டக்களப்பு மாநகரசபை உட்பட ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள், வட்டார முறையின் அடிப்படையிலேயே இடம்பெறவுள்ளன என்று தேர்தல் திணைக்களம் அறிவித்திருக்கிறது. உள்ளூராட்சி சட்ட மூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த புதிய திருத்தத்தின் அடிப்படையில் வட்டார முறையிலேயே ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களும் நடத்தப்படும் என்பதே தேர்தல் திணைக்களத்தின் கருத்தாக இருக்கிறது.

ஆனாலும் தேர்தலை எதிர்கொள்ளவுள்ள மட்டக்களப்பு மாநகர சபை, ஏறாவூர்பற்று பிரதேச சபை, கோரளைப்பற்று பிரதேச சபை, கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை, மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை, மண்முனைப்பற்று பிரதேச சபை, மண்முனை மேற்கு பிரதேச சபை.மண்முனை தென்மேற்கு பிரதேச சபை மற்றும் போரதீவுபற்று பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் எவ்வாறு இருக்கும் என்பதை இப்போது எதிர்வுகூற முடியாது என்பதும் ஒரு தகவல்.

கடந்த முறை தேர்தல் நடைபெற்ற போது மக்களுக்கிருந்த நெருக்குதல்களும், தமிழ் அரசியல் வாதிகளுக்கிருந்த பாதுகாப்பு போன்ற நெருக்கடிகளும் இப்போது இல்லை என்றவகையில், குறிப்பிட்ட முன்னைய வட்டார முறைத் தேர்தலை முன்மாதிரியாக எதிர்கொள்ளவிருக்கும் மட்டக்களப்பின் தமிழ் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் பெரும் போராகவே அமைந்திருக்கும் என்பதே நிச்சயமாக இருக்கும்.

அதற்காகவே காத்திருப்போம். ஆளும் கட்சி தனக்கான அரசியல் பலத்தை ஏற்படுத்துவதற்காக மட்டக்களப்பில் தொகுதி அமைப் பாளர்கள் நியமித்தல், தொகுதிக் கிளைகள் அமைத்தல், கட்சி உறுப்பினர்களை இணைத்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு வருகிறது. இதனை சரியாக நடத்தி முடிக்கும்வரையில் மட்டக்களப்பில் உள்ளூராட்சித் தேர்தல் நடை பெறாது என்ற ஊகத்தில் காத்திருப்போம் என்றே மீண்டும் கூறிக்கொள்ளலாம்.

இந்த இடத்தில், ரத்து செய்யப்பட்ட அரசியல் கட்சிகளை மீண்டும் பதியலாம் என்று வாய்ப்புக்களை தேர்தல் ஆணையாளர் வழங்கியிஇக்கின்றமையானது மறைந்த அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ர 'பினால் உரு வாக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணி (புறா சின்னம்), விடுதலை புலிகள் மக்கள் முன்னணி (புலி சின்னம்) விடுதலை புலிகளினால் பதிவுசெய்யப்பட்ட ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (எருது சின்னம்) மற்றும் ஐக்கிய தேசிய மாற்று முன்னணி (கேற்று சின்னம்) ஆகிய நான்கு கட்சிகளும் ஒரு சந்தர்ப்பமாக இருக்கிறது.

**– பிரகஸ்பதி –**

ஆனாலும் தேர்தலை நடத்துவது பற்றி முடிவினை தேர்தல் ஆணையாளர் எடுக்க முடியாது என்றவகையில் அரசாங்கம் எடுக்கும் முடிவு வடக்கு தேர்தலுக்கு முன்னர் கிழக்கில் விடுபட்ட சபைகளுக்கு தேர்தலை நடத்துமான என்பதும் கேள்வியாகவே இருக்கிறது. இவ்வாறு பல கேள்விகளுடனும் எதிர்பார்ப்புகளுடனும் இக்கட்டுரை நிறைவுக்கு வருகிறது.

# சமூகத்தின் முதுகெலும்புகள்

இளம் தலைமுறையினரே எமது சமுதாயத்தின் வலிமைமிக்க தூண்கள். சமுதாயம் எனும் கட்டமைப்பில் இளம் தலைமுறையினர் மிகமிக முக்கியமானவர்கள். இறுக்கமான, அழகான கலாசார பண்பாடுகளையும், விழுமியங்களையும் கொண்டது எமது யாழ்ப்பாணம். இன்று பல சவால்களையும், பல பிரச்சினைகளையும் எதிர்நோக்கி கலாசார சீரழிவுகளுக்கு முகம் கொடுத்து சோகையிழந்து நடைபிணமாக பயணிப்பதை நாம் அனைவரும் வேனையோடு பார்க்கமுடிகிறது. தமிழர் செறிந்துவாழும் இடம் யாழ்ப்பாணம். இங்கு தமிழ்க் கலாசாரம் தளர்வடைந்து தன்னிலையிழந்து போவது நியாயமானதா? வேற்று நாகரிகம் உள்வாங்கப்படுவது ஏற்புடையதா? யார் சிந்திப்பது?

வன்புணர்வுகளும் பாலியல் பலாத்காரமும் சட்டவிரோத கருவுறுதலும், கருக்கலைப்பும் பெண்மைக்கு சாவுமணி அடிக்கின்றன. விடுதிகளில் இளைஞர், யுவதிகள் சந்திக்கின்றனர். மதுபோதைக்கு அடிமையாதல், மேலைநாட்டு நாகரிக மோகம் போன்ற இன்னோரன்ன அருவருக்கத்தக்க நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தை நோக்கிய காய்நகர்த்தப்படுகின்றன. நாகரிக வளர்ச்சி இளம் பருவத்தினரை கவர்ச்சிகாட்டி ஈர்க்கின்றது. வன்புணர்வுகளும், பாலியல் பலாத்காரங்களும் சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன. நாளாந்தம் ஒரு வன்புணர்வோ, பாலியல் பலாத்காரமோ இடம்பெறாமல் விடுவதில்லை. பால்மணம் மாறாத சிறுமிகளின் குழந்தைப் பருவம் சூறையாடப்பட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்படுவதும், கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டு பாழ்ங்கிணற்றில் வீசப்படுவதும், பற்றைக்குள் எறிவதும், பதின்ம வயதுச் மாணவ சிறுமிகள் வன்புணர்வின்பின் கொலை செய்யப்படுவதும் எமது சமுதாயத்தை வருத்தும் பாரிய நிகழ்வாகும்.

யாழ்.போதனா வைத்தியசாலை பெண்நோயியல் பிரிவில் பதின்ம வயதுச் சிறுமிகள் மரபணுப் பரிசோதனைக்காக நாளாந்தம் அனுமதிக்கப்படுகின்றனர். தப்பு செய்யுமுன் பாதுகாக்காத பெற்றோர் வன்புணர்வின்பின் பிள்ளைகளோடு விடுதிகளில் காத்திருப்பது பெரும் வேதனையே. கூட்டுக்குடும்பம் என்றால் மகிழ்ச்சிகரமானதும், அன்பானதும், உறவுகளைப் பலப்படுத்துவதாயும், ஒருவரை ஒருவர் தாங்குவதாயும் இருந்தது.

இன்று கூட்டுக் குடும்பத்தை விரல்விட்டு எண்ணும்படியாய் உள்ளது. சில கூட்டுக் குடும்ப உறவுகளாலும் பெண் பிள்ளைகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இன்றைய கல்வி கட்டாயம் என்பதைவிட, கல்வியை ஒரு நாகரிகமாக பெற்றோர் பார்க்கும்நிலை உள்ளது. இதனால், பிரத்தியேக வகுப்புக்களுக்கு பிள்ளைகளை துரத்துகின்றனர். செல்போனையும் பரிசளிக்கின்றனர்.ஆனால் பிள்ளை ஒழுங்காக வகுப்புக்குச் செல்கிறதா?, படிக்கிறதா? என்பதை உற்று நோக்கத் தவறுகின்றனர்.

செல்போனால் நட்பு, விசாலமடைகிறது. இன்று நடைமுறையில் உள்ள பல தொலைபேசி நிறுவனங்களால் பலரக சிம் அட்டைகள் நடைமுறையில் உள்ளன. இவை இளம்பருவத்தினரின் பாதையில் பாரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. பிரத்தியேக வகுப்புக்கு எனச் செல்லும் பிள்ளை பெற்றோரின் அன்புப் பரிசான செல்போனின் துணையோடு பல குற்றங்களை செய்வதை காணக்கூடியாக உள்ளது. வீட்டில் ஒரு சிம் அட்டை, வெளியே வேறு சிம் அட்டை என இரட்டை வேடம்கொண்டு பெற்றோரை ஏமாற்றி வாழ தலைப்பட்டுவிட்டனர் இளம்பருவத்தினர். எதிர்பால் நட்புறவுகள் விசாலமடைந்து நாளடைவில் உறவு நிலை மாற்றமடைந்து தம்மை இழக்கும்நிலை உருவாகிறது. இதுவும் வன்புணர்வுக்கு முக்கிய காரணமாக



அமைகின்றது.

மது பாவனை, புகைப் பிடித்தல், என்பவற்றுக்கு எம் இளைஞர்கள் அடிமையாவதும், போதை நிலையில் வீதி முடக்குகளில்நின்று கூச்சல்போடுவதும், அசிங்கமான வார்த்தைகள் பெண்களை நோக்கி பிரயோகிப்பதும், தெருக்களில் வீழ்ந்துகிடப்பதும், பெண்களை சீண்டுவதும்கூட இன்றைய அலங்கோல காட்சிகள். தம் அபிமான நடிகர்களின் திரைப்படங்கள் திரைக்கு வந்தால் கூடுதலான பணம் கொடுத்து நுழைவுச் சீட்டுப் பெற்று முண்டியத்துச்சென்று படம் பார்ப்பதும் கூச்சலிடுவதும், மீண்டும் மதுஅருந்திய நிலையில் அதிவேகத்துடன் மோட்டார் சைக்கிளில் பயணிப்பதும் ஏன்? "கட் அவுட்"டுக்கு பாலாபி சேஷகம் செய்வதும்கூட இன்றைய இளையோர் சமூகக் காட்சிகளே.முடியை நீளமாக வளர்ப்பது, முடியை கையால் நாகரிக பங்கில் தடவுவ்து, முகத்தில் விதவிதமாக தாடி கீறி வளர்ப்பது, ஒற்றைத்தோடு போடுதல், உள்ளாடை தெரிய இடுப்புக்குக் கீழே ஜீன்ஸ் போடுவது, காற்சட்டைகளில் பத்துப் பதினைந்து பைகள் தொங்கும் நீள் பட்டிகளுடன், காற்சட்டை அணிதல் (ஒரு ரூபாய் பையில் இருப்பதில்லை) சிகரெட் புகையை நாகரிகமாக உள்ளிழுத்து வெளியே விடுவது போன்றனவையும், காதுகளில் ஒலிபெருக்கி பொருத்தியபடி செல்போன் பாவனையோடு பயணிப்பது என்பன செல்லரித்துப்போகும் இன்றைய இளைஞர்களால் நாளாந்தம் அரங்கேறும் லீலைகள்.

உடலை ஒட்டினாற் போன்ற ஆடைகள் அணிவதும், தெருக்களில் செல்போன் கதைப்பதும் குறும் செய்தி அனுப்புவதும், முடியை விரித்துவிட்டுச் செல்வதும் இன்று எம் பெண்பிள்ளைகளால் அரங்கேறும் நிகழ்வுகள்.

அடக்கம், பணிவு, கீழ்ப்படிவு என்பன எங்கெல்லாமோ ஓடி ஒழிந்துகொண்டுவிட்டன. பெற்றோரை ஏமாற்றி வாழ்வதும், பெற்றோரை மதியாமல் தம் பாதையில் பயணிக்கும் பிள்ளைகளே இன்று எம் சமுதாயத்தில் உள்ளனர். இதனாலேயே பழிவாங்கும் உணர்வு இவர்களுக்த தலைதூக்குகிறது. இளம் பருவத்தினர் எதிர்பால் உறவுகளுடன் அதிகமாக தனியாக பழகுவது கூடுதலாக தவிர்க்கப்படவேண்டும். இன்றைய நட்பு காதலாகி, கல்யாணமாய் கனிந்து, விரைவில் விவாகரத்தில் போய் நிற்பதை நீதிமன்ற வழக்குகள் சுட்டிக் காட்டுகின்றன.

இவற்றுக்கெல்லாம் பெற்றோரின் அசமந்தப்போக்கே காரணம் என நான் கூறுகிறேன். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே..." என்ற பாடல்வரிகளை இவ்விடத்தில் நினைவுகூர விரும்புகிறேன். ஒரு தனி மனிதனே சமுதாயத்தின் உட்கரு. இது எனது பிள்ளையாக இருக்கவேண்டும் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அன்பான இளம் சமூகத்தினரே, சமூகத்தின் உயிர்நாடிகள் நீங்களே, சமூகத்திற்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமைகள், தியாகங்கள் நிறைய உள்ளன. நாகரிகத்தின் போக்கில் காலத்தின் பேர்வையில் அடித்துச் செல்லப்படுகிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். சமூகத்தில் முன்னுதாரணமாக வாழவேண்டிய நீங்கள் சாக்கடையில் வீழ்ந்து புரள்வது ஏற்புடையதா? என்பதை உங்களை நீங்களே ஒருமுறை கேளுங்கள். பாதாளம் எது? பரலோகம் எது என பாகுபாடின்றி பயணிக்கும் பருவ வயதினரே உங்கள் பாதைக்கு, பயணத்திற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

உங்கள் வாழ்க்கையில் பெரும் திருப்புமுனை ஒன்றினை ஏற்படுத்துங்கள். வேகமாக பரவிவரும் வேற்று நாட்டு நாகரிகத்திற்கு சாவுமணி அடியுங்கள். குடும்பத்துக்காக, கிராமத்துக்காக, சமூகத்திற்காக நாட்டுக்காக சேவை செய்யுங்கள். அழகான உடை உடுத்துங்கள். அன்பாக பழகுங்கள். இனிமையான வார்த்தைகளை வாயிலிருந்து உதிருங்கள் இளைஞர்களே, பெண்மையைப் போற்றுங்கள். உன்மீது பெண்ணின் தொடுகை ஏற்பட்டால் காகிதத்தை – மலரைத் தொட்டதாக உணருங்கள் என்ற அறிஞர் அண்ணாவின் வார்த்தையை நடைமுறைப்படுத்துங்கள்.

சம உரிமை, சம நீதி கேட்டவனுக்கு நன்றி சொல்லும் வாழ்வு வாழ ஏன் எமது பெண்ணினம் மறந்ததுவோ தெரியவில்லை. வேண்டாத எமக்கு ஒத்துவராத சிலவற்றை உள்வாங்கி இதுதான் சம உரிமை என கேட்பது நியாயமானதா, மேலை நாட்டு நாகரிகப் புணர்வுகளோடு இசைந்துபோகும் நிலை எமது பண்பாடு, கலாசார விழுமியங்களை யாழ்ப்பாணத்திலேயே ஆழத்தோண்டி புதைப்பதற்கு ஒப்பானதாகும். இங்கு எமது கலாசாரம் புறந்தள்ளப்படுமாயின், தூக்கி எறியப்படுமாயின், வேறெந்த இடத்தில், வேறொந்த நாட்டில் இது பேணிப்பாதுகாக்கப்படும்? பெண்ணினமே பதில் சொல்லுங்கள். பெண்களின் வளர்ச்சி இன்று அபரிமிதமானது. எத்துறையில் பெண்கள் இல்லை இன்று அடங்கி முடங்கி அடுப்பங்கரையில் வாழ்ந்த பெண்கள் சாதனையின் சிகரத்தை தொட்டுவிட்டார்கள். அந்த முண்டாசுக்காரனுக்கு நன்றிசொல்லும் வேளையில் பெண்களின் பாதையில் பாரிய புதைகுழி தோண்டப்பட்டுவிட்டது. எப்படி நன்றி சொல்வது?

**இரவீந்திரகலா,**
**உடுவில்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!.
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 515

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | |
| 7 | | 9 | | 11 | 12 |
| 13 | 14 | | 16 | 17 | 18 |
| | 20 | 21 | | 23 | |
| 25 | 26 | 27 | 28 | | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 16.04.2013 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 515
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காகக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 513- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 ல் | 3 வி | | 5 பா | 6 சி |
| 7 ற் | | 9 ள | | | 12 ண் |
| 13 ப | 14 க | 15 க் | 16 த | 17 ம் | |
| 19 க | 20 டு | 21 கு | | 23 பை | |
| 25 ம் | 26 நா | | 28 வ | 29 கு | 30 தி |
| | 32 அ | 33 ம் | 34 ப | 35 ர | 36 ம் |

### மேலிருந்து கீழ்

01. தாஜ்மஹால் அமைந்த இடம்.
03. காரியம் அல்லது கூப்பிடு தூரம்.
11. ஆசியாவையும். ஐரோப்பிய நாடுகளையும் பிரிக்கும் மலைத்தொடர். (குழம்பியுள்ளது)
12. அழிவு அல்லது பற்பலர் இறக்கும் நோய்.
14. சீர்பாதம் அல்லது பாதமலர் (குழம்பியுள்ளது)
21. இன்பம் அல்லது கிளி. (குழம்பியுள்ளது)
25. கல்வி அல்லது தோன்று.
30. வந்தால் போகாததொன்று. (குழம்பியுள்ளது)

### இடமிருந்து வலம்

01. ஒரு நாடு. கடை இரண்டெழுத்தும் ஒரு கரடி இனத்தைக் குறிக்கும்.
11. செல்வி அல்லது மலர்த்தட்டு.
13. ஒரு பறவையினம் (திரும்பியுள்ளது)
16. பெண் மயில்
20. மதுசார வகை ஒன்று.
25. இளைய சந்ததியினரைக் காப்பாற்ற உயிர் தியாகம் செய்யும் தன்மை.
31. அதிகம் அல்லது வைராக்கியம். (குழம்பியுள்ளது)
35. தவிர்க்க முடியாத ஒன்று. (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல.513 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

கு.சிவசங்கர், கோவில் வீதி, தெல்லிப்பளை .

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பால்ராஜ், ஹெட்பானா, விசுவமடு.
02. எஸ்.காந்தன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
03. ம.வரதராஜா, ஜின்னாநகர், திருகோணமலை.
04. பி.குந்தவை, உடப்பு, புத்தளம்.
05. எம்.நவாஸ், காரைநகர், மட்டக்களப்பு.
06. கு.சைந்தன், மாசார், பளை.
07. எம்.ஷிபானா, அச்சுவேலி, மேற்கு, அச்சுவேலி.
08. த.சிறிதரன், கச்சாய் றோட், கொடிகாமம்.
09. அ.யதுர்சன், நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
10. சி.ஆனந்தராஜா, தும்பளை, பருத்தித்துறை.



**23**

**இராமசாமி ரமேஷ், அளம்பில்**

**ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.**

# வலிகளின் சன்மானம்

**நட்சத்திரன்** வாழ்க்கைக் காய் உழைப்பதைவிட, வலிகளின் சன்மானத்துக்காய் உத்வேகத்தோடு தொழிலில் முனைப்பானான். இறால் சீசன் ஆரம்பித்து விட்டதால், வெயில் – குளிரைப் பொருட் படுத்தாமல் கொண்ட கொள்கைக்காய் தன்னிலை மறந்துவிட்டவனாய் இவனது போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. இறால் இரவில் பிடிபடுவதில்லை பகலில் தான் அதிகமாய் அகப்படும்.

வட்டுவாகல் தொடக்கம் கொக்கிளாய், முகத்துவாரம் வரையான கடற்பிரதேசங்களில் தான் முல்லைத்தீவில் வசிக்கும் மீனவர்கள் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். பல அத்துமீறல்கள் இவர்களின் இயல்புக்குள் வந்து குழப்பத்தை ஏற்படுத்தினாலும், நட்சத்திரன் தேவையில்லாத விடயங்களில் தன்னை சிக்க வைத்துக் கொள்ள விரும்பவில்லை. பிரதீபன், ருசாந்தன், பிரவீன் இவர்களது அரவணைப்பில் நட்சத்திரனின் தருணங்கள் கரைந்துவிடும். ஓர் தடவை பிரவீன் தந்தையோடு கடலுக்குப் போன நேரம் இந்திய



மீனவர்கள் சிலர் இவர்களோடு வாய்த்தர்க் கத்தில் ஈடுபட்டு, அடித்து காயப்படுத்திவிட் டார்கள். நட்சத்திரனுக்கு ஆத்திரமும் கோபமும் வந்ததுதான்! ஆனால் ஏதுமே செய்யமுடியா கையறுநிலை!

பகல் முழுவதும் கடலில் காய்ந்துவிடும் இவனோடு, கரையில் மகேஷ்வரியும் வெளியில் காய்ந்துவிடுவாள். என்ன செய்வது? சிறுவயதி லிருந்தே வறுமையால் கஷ்டத்தை அனுபவித்தவள்தானே!! மாலை தொழில் முடிந்து நட்சத்திரன் வீடு வருமுன்னமாய் வந்து, சமைத்து முடித்து இரவு உணவை தயாராய் வைத்திருப்பாள். இவன் குளித்து விட்டுவர அன்போடு பரிமாறுவாள். உணவினால் நிறைகிறதோ இல்லையோ, தன் தாயின் பூரணமான பாசத்தினால் நட்சத்திரனின் வயிறு நிறைந்துவிடும்.

ஏழ்மையில்தான் அதிகமாய் அன்பும் நேசமும் அப்பியிருக்கும் என்பார்களே!! இவர்கள் விடயத்தில் உண்மைதான். தொழிலுக்குப் போகும் நேரம் தவிர்ந்த வேளைகளில், வலிகளின் சன்மானத்தை நூலாக்கும்போது இன்னும் எப்படியான புதிய நுணுக்கங்களைக் கையாளலாம் என்பது பற்றி இவன் சிந்தனைகள் விரியும். அத்தகைய தருணமொன்றில்தான் சின்னதாய் ஒரு எண்ணம் துளிர்த்தது.

எழுத்தாளர் முல்லைச்செல்வனிடம் சென்று "வலிகளின் சன்மானம்" நூலாக்குவதற்கு ஆலோசனைகள் கேட்டால் என்ன? சிந்தித்ததை செயலாக்கினான். முல்லைத்தீவு மண்ணில் விரல்விட்டு எண்ணக் கூடிய படைப்பாளிகளே இப்போது இலக்கியத் துறைக்குள் ஈடுகொடுத்து நின்று வருகிறார்கள். முல்லைச்செல்வன் அதனுள் முதன்மையானவர். குமுழமுனைப் பிரதேசத்தில்தான் ஓர் பாடசாலை ஆசிரி யராகவும் கடமையாற்றுகிறார். தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு அவர் இல்லம் தேடி பயணமானான் நட்சத்திரன்.

"ஆ... நட்சத் திரன்.... வாடா தம்பி..." அன்பும் உரிமையும் இரண்டறக் கலந்த தொனியில் உள்ளே அழைத்தார் முல்லை. ஒருவிதமான கூச்சமும் நாணமும் இவனிடம் ஒட்டிக்கொள்ள தயங்கித் தயங்கி வரவேற் பறையின் கதிரை நுனியை நிறைத்துக் கொண்டவன், தான் வந்த விடயத்தை விபரித்தான்.

"சேர்!! வலிகளின் சன்மானம்..... எண்ட சிறுகதைத் தொகுதியொன்றை வெளியீடு செய்யப்போகிறேன். அதை எந்த இடத்தில குடுத்தால் தரமாய்... செய்து எடுக்கலாம்...? நீங்கதான் உதவி செய்து தரவேணும்... எனக்கு வேற ஆட்களும் இல்லை சேர்..." கூறவேண்டி யதை ஒப்புவித்துவிட்ட திருப்தி இவனுக்குள்!!

(வலிகள் தொடரும்...)

---

# மாறாத சுகங்களும் ஆறாத வடுக்களும்

**ஆயிரம்** பொய்யச் சொல்லியாவது ஒரு கலயாணத்தை நடத்தி வைக்கணும் என்ற கூற்று எத்தனையோ திருமணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. உண்மையைச் சொன்னால் எங்கு திருமணம் நடக்காமல் போய்விடுமோ என்ற பயத்தை விட எப்படியாவது ஒரு திருமணத்தை நடத்தி வைத்தால் போதும் என்ற எண்ணத்துடன் தான் பலர் இப்படிச் செய்கின்றனர்.

எது எப்படி இருப்பினும் நிஹாராவின் திருமண விடயத்தில் இது பொய்யாகிப் போன ஒரு கூற்றே. செல்வத்தில் ஏழையாகப் பிறந்தாலும், அழகில் அவள் அரசி. எத்தனையோ பேர் தாமாக முன்வந்து நிஹாராவைத் திருமணம் செய்ய விருப்பம் தெரிவித்தபோதும் அவள் மனநிலை திருமண பந்தத்தை ஏற்கும் நிலையில் இருக்கவில்லை.

வறுமையில் வாடினாலும் அவளைத் தேடிவரும் நல்ல எதிர்காலங்களைத் தொலைக்க விரும்பாத அவளது பெற்றோர், "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவு காத்திருக்கு மாம் கொக்கு" என்பதைப் போல கலந்தாலோ சனை செய்தபின் நிஹாராவுக்கு ஏற்ற துணையாக 'நவாஸ்'ஐ தெரிவு செய்தனர்.

நிஹாராவுக்கும் நவாஸுக்கும் நிச்சயிக் கப்பட்ட தினத்தில் திருமணம் நடந்தேறியது. மாலை மாற்றியபின் மனங் களிரண்டும் சங்கமமாகிக் கொண்டன. புதுஉறவுகள் இருவருக்கும் கிடைத்தது. அன்று நிஹாரா வைச் சுற்றி ஒரே கிழவிகள் பட்டாளம். "பொம்புளக்கி நெறயபொறும வேணும், புரசன அனுசரிச்சி நடந்துக்கம்மா" என்று ஒருவர் கூற, ஒவ்வொருவரும் தத்தமது பங்குக்கு என்று ஒவ்வொரு விடயத்தைக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றனர்.

தம்பதிகளின் வாழ்க்கை இனிதாகவும் சந்தோஷமாகவும் நடைபயின்றது. நாட்கள் நகர்கையில் நிஹாராவிலும் மாற்றம் தெரியத் தொடங் கியது. நவாஸ் சந் தோஷமிகுதியில்



ஹனீபா சஹீலா, கிண்ணியா – 03

எல்லோருக்கும் 'சொக்லேட்' வாங்கிக் கொடுத்தான். காரணம் கேட்போருக்கு "நிஹாரா தாயாகப் போறா" என்று கூறி ஆனந்தக் கூத்தாடினான்.

இருவரும் தமக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்கான காத்திருப்பில் இருந்தனர். நிஹாராவுக்குத் தேவையான அனைத்தை யும் வாங்கிக் கொடுத்தான். தனது கணவனுக் காக தினமும் பிரார்த்த வண்ணமே இருப்பாள். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதோடு அளவுக்கதிகமான பாசத்தையும்காட்டி வந்தனர்.

எத்தனை நாள்தான் கருவறைக்குள் தனியாக இருப்பது? இந்த உலகத்தையும், உறவுகளையும், பெற்றோரையும் பார்க் காமல் இனியும் இருக்க முடியாது" என்ற முடிவுக்கு வந்த குழந்தை பலமாக தனது கால்களால் நிஹாராவின் வயிற்றில் உதைக்கத் தொடங்கவே, அவள் வலிதாங்காமல் துடித்தாள். உடனே வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர். குறித்த நேரம் முடியவே நிஹாராவை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு அனைவரும் வீடு திரும்பினர்.

மறுநாள் காலையில் நிஹாராவைப் பார்க்கச் சென்றோருக்கு "தாயும் மகளும சுகமாக உள்ளனர்" என்ற நல்ல செய்தி எட்டியது. நிஹாராவின் விரலைப் பற்றிப் பிடித்துக்கொண்டு குட்டித்தூக்கம் போட்டது குழந்தை.

நிஸ்பாக்குட்டி' என்று நவாஸ் குழந்தை யைத் தூக்கி முத்தமிட்டான். இருவராக இணைந்த வாழ்வு இன்று மூன்றாவது உறவையும் இணைத்துக்கொண்டது. எது எப்படி இருப்பினும் யாரால்தான் விதியை மாற்றமுடியும்.

நிஸ்பாவுக்கு ஒரு வயதாகியது. அனைத்தையும் நினைக்கும்போது கனவு போல தோன்றியது. கனவிலும் கற்பனை யிலும் வந்துபோகாத அந்த நிகழ்வு நிகழும் என்று யாரும் சிறிதளவு எண்ணியிருக்க வில்லை.

நவாஸ் நிஸ்பாவை அழைத்துக் கொண்டு கடைக்குச் சென்றிருந்தான். வீட்டில் நிஹாரா மட்டுமே தனியாக இருந்தாள். சமைத்துக் கொண்டிருந்தவள், விறகு ஈரமாக இருந்த தால் அடுப்போடு போராடிக் கொண்டிருந்து விட்டு மண்ணெண்ணெய் போத்தலை எடுத்துக் கொஞ்சம் ஊற்றினாள். புகை கக்கிய அடுப்பு சுடர் விட்டெரிந்தது.

அடுப்பிற்கு ஊற்றிய எண்ணெய் தவறி அவளது உடுப்பில்பட்டதால் அவளது உடல் விறகாகி தீக்கிரையானது. முகம் மட்டும் மிஞ்சி இருக்க கழுத்துக்கு கீழே தீப்பற்றி எரிந்தது. நிஹாராவின் அலறல் கேட்டு ஓடிவந்த அவளது தந்தை மனாப் ஈரத்துணியை அவள் மேல் போர்த்தி தீயை அணைத்தார்.

மகளோடு கடைக்குச் சென்ற நவாஸ் வீடு திரும்பிய போது வீட்டு முற்றத்தில் சனக்கூட்டம் நிற்பதைக் கண்டு, "என்னவாக இருக்கும்?" என மனதிற்குள் கேட்ட வண்ணம் வந்தவன் வாசலில் தீக்காயம் பட்டு சதைத் துண்டமாகக் கிடந்த தன் மனைவியைக் கண்டான்.

அந்த வேதனையிலும் கணவனையும் குழந்தையையும் கண்டவள் சிரித்தாள். இருவரையும் அருகில் வருமாறு சைகை காட்டினாள். ஆறுதலுக்காக அவனை அழைக்க அது அதிர்ச்சியில் முடிந்தது.

அருகில் வந்த நவாஸ் கதறி அழுவான் என எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். நிஹாரா விடம் வந்து, " இனி நாம ரெண்டு பேரும் சேர்ந்து வாழமுடியாது. என் மகள நான் வளர்க்கணும். நான் போறேன்" என்றவன் எவருடைய மறு மொழிக்கும் காத்திராமல் பயணத்தைத் தொடர்ந்தான்.

அவனது உருவம் மறையும்வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். விழிகள் கஞ்சத்தனமின்றி கண்ணீரைச் சரமாரியாகப் பொழிந்தன. ஊராரின் நாவுகள் நவாஸ் நடந்து கொண்ட முறையைப் பற்றியே அசைபோட்டன.

"தீக்கிரையாகி செத்து மடிந்திருக்கலாம். சோர்ந்துவாழ்ந்த கணவனே உதறித் தள்ளி விட்டான். பெற்ற குழந்தையை இனிப்பார்க் கவே முடியாதா? என்றெல்லாம் அவள் மனம் எண்ணி அழுதது. அவள் குணமாகி வைத்திய சாலையிலிருந்து வீடு வந்துசேர்ந்தாள்.

நாட்காட்டியில் எத்தனையோ தாள்கள் புரட்டப்பட்டிருந்தபோதிலும் அவன் இறுதியாகப் பேசிச் சென்ற வார்த்தைகள் அவள் செவிகளுக் குள் விடை கொடுக்க மறுத்தன. காலங்கள் கரைந்தபோதும் அவளுக்கு கணவனை-யோ, மகளையோ பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டவில்லை.

கடந்தகால நிகழ்வுகள் நிழலாடின. பாசம் வேஷமாகிப் போனது நிஹாராவுக்கு மர்மமாகவே இருந்தது. நவாஸ் நடந்து கொண்ட முறையை வைத்து மொத்த ஆணினத்தையுமே வஞ்சித்தாள். யாரையுமே நம்ப மறுத்து எல்லோரிடமு மிருந்து ஒதுங்கித் தனியாக வாழ்ந்தாள்.

நிஹாராவின் பெற்றோருக்கு அவளைப் பற்றிய கவலையே இருந்தது. "வாழவேண்டிய வயதில் மகளின் நிலை இப்படி அமைந்துவிட்டது" என்ற ஏக்கமும் அவர்களை வாட்டியது. அன்று மனாப் மகிழ்ச்சி பொங்க வீட்டுக்கு வந்தார்.

மனைவியிடம் நடந்த சம்பவம் பற்றி ஒப்பு விக்க அவளும் சந்தோஷப் பட்டாள். நிஹாரா விடம் போய், "மகள் ஒங்கள இரண்டாந்தாரமாக கல்யாணம் பண்ணிக்க ஒருத்தர் கேட்கிறார். எனக்கும் வாப்பாக்கும் விருப்பம். உங்கட விருப்பம் என்ன? எனக் கேட்க எனக்கு ஒடம்புல பட்ட காயம் ஆறிட்டு. மனசுலபட்ட காயம் ஆறாது. எனக்குக் கல்யாணம் இனி எப்பவுமே தேவல்ல" என்று ஒரே முடிவாகக் கூறினாள்.

"இன்னும் பழச மறக்கல அந்தக் கவலை யில இப்படிப் பேசுறா" என மனாப் மனைவியிடம் கூறிவிட்டுச் சென்றான். தொடர்ச்சியாக இரண்டு, மூன்று பேர் நிஹாராவைத் திருமணம் முடிக்க விருப்பம் தெரிவித்த வண்ணமே இருந்தனர்.

ஒருநாள் ஒருவர் வீட்டுக்க வந்து நிஹாரா விடமே உங்களுக்கு என்னக் கல்யாணம் பண்ணிக்க விருப்பமா? என நிஹாராவிடமே கேட்க, அவள் அவனது முகத்தைப் பார்த்து விட்டு முக்காடிட்டு மறைந்திருந்த அவளது கழுத்துப் பகுதியை முந்தானையை மெல்ல விலக்கி காட்டினாள்.

அவன் சலனமற்றவனாய்க் குனிந்திருந் தான். இந்த இடம் மட்டுமல்ல... என நிஹாரா பேசத்தொடங்க முன்னரே அவளைத் தடுத்து நிறுத்திவிட்டு உங்களுக்கு தீக்காயம் பட்ட அன்று உங்க கணவர் உங்கள விட்டுபோன போது, நானும் இந்த இடத்தில தான் நின்றேன். உடம்புல இருந்த வலியை யும் மறந்து கண வனையும் குழந்தையையும் கண்டவுன் சிரிச் சீங்க... அப்ப உங்க பாசத்தை புரிஞ்சிக்கிட் டேன். அவர் உங்கள விட்டு போனப்போவே நான் முடிவெடுத்தேன், உங்களக் கல்யாணம் பண்ணிக்கணும் என்று என மூச்சுவிடாது கூறினான்.

" நீங்க எல்லா ஆம்புளகளையும் உங்க கணவன் மாதிரியே நெனச்சிட்டீங்க, நீங்க ஆஸ்பத்திரியில இருந்தப்போ ஒவ்வொரு நாளும் உங்கள பார்க்க வந்திருக்கேன், கணவனை பிரிஞ்ச கவலையில இருப்பீங்க என்று தான் இவ்வளவு நாள் ஒதுங்கி இருந்தேன்.நான் உங்க மேல வெச்சிருந்த பாசம் உண்மையானது என்று கூறினான்.

"தம்பி உட்காருங்க" என மனாப் கூற "இல்ல நான் போயிட்டு வர்ரேன்" எனக்கு கூறிவிட்டு விடைபெற்றான். "தப்பா நெனச்சிட்டேனே. மனச கஷ்ரப்படுத்திட்டேனே" என மனசுக்குள் போராடினாள். "ஒருத்தர வெச்சி எல்லா ஆம்புளகளையும் தப்பா நெனச்சிட்டேன். எல்லாரும் அப்பிடியில்ல" எனக் கூறியதோடு ஐந்துவிரல்களும் ஒரே மாதிரியில்லை என்பதைத் அன்றுதான் அவள் மனம் ஏற்றுக்கொண்டது.



ஆறுதல் சொன்னவள்
மெல்ல கேலிக்குத்
தாவினாள்.



# பல்லியின் குறி

"மலரினிலே வந்து
தேன் எடுத்தவன்
மாயமாய் மறைந்தானடி.
கனிகளிலே அமர்ந்து
சுவையறிந்தவன்
காணாமல் போனானடி.
தோழிக்கு சொன்னாள்
நீலவேணி.

"கட்டழகு விருந்தை தொட்டு
அள்ளி சுவைத்த கட்டழகன்
தள்ளிப் போவானா?

ஆறுதல் வார்த்தையால்
வருடினாள் தோழி.

"நெருப்புக்குள் விழுந்த
பஞ்சானேன் தோழி!
நீருக்குள் விழுந்த
உப்பானேன் தோழி"
என்றாள்.

"தீப்பற்றி எரிகிறதோ
தேகம்? பூப்பற்றி ஆடியதோ
அந்த தேனீ?"

ஆறுதல் சொன்னவள்
மெல்ல கேலிக்குத்
தாவினாள்.

கேலியால் நீலவேணிக்கு
உடல் சிலிர்த்தது!

"வலை விரித்தவன்
ஆடிய வேடத்தில்
மான் மயங்கியதோ?
கதை படித்தவன் தேடிய
புதிர்களில் நூல்
மயங்கியதோ? கலை
தெரிந்தவன் மீட்டிய
சுரங்களில் வீணை
மயங்கியதோ?

கேள்விகள் தொடுத்தாள்
தோழி! வெட்கம் தலையில்
கனக்க குனிந்திருந்தாள்
நீலவேணி.

"அச்சத்தில் கால்கள் பின்ன
ஆசையில் தோள்கள் விம்ம
வெட்கத்தில் முகமோ சிவக்க
விரகத்தில் நெஞ்சம் விம்ம
பக்கத்தில் போனாயோ தோழி?"

தோழியின் குறும்புக்
கணைகள் வேணியின்
நெஞ்சை துளைத்தன.

நினைத்துப் பார்த்தாள்
நேருக்கு நேராக அரங்கேறிய
நாடகத்தை நினைத்து
பார்த்தாள்!.

கண்ணுக்குள் கண் ஆட
நெஞ்சுக்குள் நெஞ்சு தாவ
- அவன் கைதாவி கொடி
தழுவி கனிதேடி மலையேறி
குறும்பு செய்து எறும்பான
நினைவு எட்டிப் பார்த்தது.
நெஞ்சு மூச்சுவிட்டது!
"கூந்தல் பாயாய்
விரிந்திருக்க காந்தம் என
கட்டழகு விரிந்திருக்க
கண்கள் விரித்து அவன்
பார்த்திருக்க கள்ளா என
இவள் இழுத்தாளாம்"

நீலவேணியின்
பெருமூச்சுக்கு தோழி
செய்தாள் கேலி.

"கன்னம் என்பது தங்கக்
கிண்ணம் என்பாரோ?
இதழ் ரசம் தா எனக்
கேட்பாரோ? பழரசம் தான்
பருகத் துடிப்பாரோ?

கேலியை மேலும் தாங்க
முடியவில்லை வேணிக்கு!

"நிறுத்தடி நிறுத்து நிறுத்து
நிறுத்து கதை விற்காதே!"

"கதையா. கற்பனையா
பூப்போல உன்னை அள்ளி
பூவிதழ் தேன் கிள்ளி
போனாரே ஒரு கள்வன்
கதையா? கற்பனையா?

தோழி கேள்வியால்
தொடுத்தாள் தாக்குதல்!
"எப் பனையில் ஏறினாலும்
ஏற முடியாத பனை உன்
கற்பனை!"
நீலவேணி தோழியை
இடித்தாள்!

"ஏறாத பனையிலும்
கட்டித்தான் ஏறவேண்டும்
கற்பனை ஆசையிலும்
கட்டித்தான் ஏறவேண்டும்!
கட்டழகு மேனியிலும்
கட்டித்தான் கால்சேர
வேண்டும்!"

எங்கோ படித்த இலக்கிய
கற்பனை! தோழி எடுத்து
விட்டாள். வேணி ஒரு குட்டு
வைத்தாள்! "என்னடி பெண்
நீ?" என்றாள்.
"ஓஹோ சொன்னால் கூசும்!
கண்ணால் கண்டால்
மனதுக்குள் கூவும்! கள்ளியடி
நீ கள்ளெடுக்கும் வண்டை
கண்ணெடுத்துத் தேடும்
கள்ளியடி நீ!"

பொய்சொன்னால் தோழி
நம்பாள் பணிந்து வந்தாள்
நீலவேணி.

"உண்மையைச் சொல்கிறேனடி
உறங்கி ஒரு யுகமாச்சு! கண் மை
கரைவது போல வாய்மை
கரையுதல் முறையோ?
வாய்மை எப்படிக் கரையும்?"

"வருவேன் என்றவர் போனார்
வாரம்பல உதிர்ந்து போச்சு
வருவதை மட்டும் காணோம்
வதைபடும் தினம்
என் மனமே! வாக்குத்
தவறிவிட்டார் உடைபடும்
பாக்காய் ஆனேன் நானே!"

நீலவேணி சோகத்தில்
துவள தோழி குறும்பைத்
தொடுத்தாள் சோகத்தை
உடைக்கும் முயற்சி!"

"வாரம் சிலதான் போச்சு
உனக்கு யுகம்போல் ஆச்சு!
தந்தை நினைத்து உருகி
தந்தனத்தோம் போடுதோ
மனது?"

தோழி சொல்ல நாணம்
அணிந்தாள் வேணி.
அந்த நாணத்திலும்
சோகத்தின் நிழல் தெரிந்தது.

ஆறுதல் சொல்ல தோழி
இதழ் திறந்தாள்.

"நெஞ்சு வருந்தாதே
கொஞ்சும் குமரன்
வருவாரடி மிஞ்சும் வரை
தருவாரடி" தோழி சொல்ல
சுவரில் பல்லியும் ஒலித்தது.
விடுவாளா தோழி கதை
சொன்னாள் வேணிக்கு!

"காட்டு வழிபோன
கள்வன் நாட்டு வழி
திரும்பினாரடி
பசு ஒலிக்கும் மலை
அருகில் காலை
நில பாதையிலே
விரைந்தோடி வந்து
நிற்பாரடி.

குறி கூறும் பல்லி
அதைக் கூறுவதை
கேட்பாயடி! இடை
வழியில் வருதல்
சொல்ல - பல்லி
இடப்புறமாய் நகருவதை
ஏறெடுத்துப் பாரடி கள்ளி"

பல்லி சொற் பலனாக
தோழி சொல்லும் குறி
பதினென் கீழ்க் கணக்கு
நூலில் புல்லாங்கு
காடனாரின் பாட்டில்
வருகிறது பாரீர்.

*"ஆமா சிலைக்கும் மணிவரை*
*-ஆரிடை*
*ஏமாண் சிலையார்க்கு இனமா*
*-இரிந்து ஓடும்*
*தாமாண்பில் வெஞ்சுரம் சென்றார்*
*-வரக் கண்டு*
*வாய்மாண்ட பல்லி படும்"*




**@ சிந்தியா! முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் அரசிலிருந்து வெளியேறுவதால் ஏற்படப்போகும் சாதக பாதகங்கள் அரசுக்கா? முஸ்லிமுக்கா...?**

ஆர்.நவாஸ், கல்முனை.

அரசுக்குப் பாதகங்கள் எதுவும் இல்லை என்பதை சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. வெளியேற விரும்பும் சிறுபான்மை அமைச்சர்களுக்கான கதவு திறந்தே உள்ளது.

ஆனால். உள்ளே இருந்து தந்திரோபாயமாகச் சாதிப்பதற்கான வாய்ப்புக்களை இழப்பதாகவே வெளியேறுதல் என்ற முடிவு அமையும்.

ஆகவே அரசின் குகைக்குள் இருந்து கொண்டே அரசோடு நியாயங்கள் பற்றிப் பேசுவதே பலமாகவே இருக்கும் என்று அரசைவிட்டு வெளியேறுங்கள் என்போர் இன்னொரு அதிகாரக் கதவைத் திறக்க ஒருபோதும் உதவப்போவதில்லை.

**@சிந்தியா! ஜெனீவா தீர்மானம் இலங்கைக்கு எதிரானது அல்ல. மகிந்த ஆட்சிக்கு எதிரானது என மங்கள சமரவீர எம்.பி தெரிவித்துள்ளது பற்றி...?**

எம்.ரவீந்திரன், மட்டக்களப்பு.

நீண்ட நாட்களாக அவரை இலங்கை மக்கள் மறந்திருந்தார்கள். இதே மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியோடு சேர்ந்திருந்தபோது அவர் பலமான அரசியல் தலைவராக இருந்தார். இப்போது எதிர்க் கட்சிப் பக்கம் அவரின் இடம் எது என்று தேடும் அளவில் இருக்கிறார்.

இந்நிலையில் ஜெனீவா தீர்மானம் பற்றி அவரது அரசியல் பக்கம் இருந்து அவர் கூறிய கருத்தாக மட்டும் எடுத்துக்கொள்ளலாம்.

**@சிந்தியா! மேலைத்தேசக் கலாசாரத்தில் திளைக்கின்றார்கள் எம்மவர்கள். ஆனால் அவர்கள் எமது கலாசாரத்தை அரிதாகவே பின்பற்றுக்கின்றனரே..?**

கு.அபி, மாத்தறை.

தன் நிலை அறிந்து ஞானம் பெற்றவர்கள் உதிர்க்கும் வார்த்தைகளுக்கு உயிர்ப்பு உண்டு.

அத்தகைய சித்தர்கள் அருளும் வாக்குகள் பல வேளைகளில் நடந்தேறுகின்றது. இக்காலத்தில் சித்தர்களைக் காண்பதுதான் குதிரைக் கொம்பாகி விட்டது. புத்தகங்களில் மட்டும் சித்தர்களைக் காண்கின்றோம்.

**@ சிந்தியா! சந்தேகத்தை நோய் என்று சொல்லலாமா?**

மு.சொர்ணா, அராலி

ஆம். சந்தேகம் மகிழ்ச்சியை கெடுத்து மனிதனை முடக்கி தனிமைப்படுத்துகின்றது. சந்தேகத்தை விலக்கிக் கொள்ளாதவரை மனநோயாளியாகி விடுகின்ற நிலை ஏற்படுகின்றதென்றால் சந்தேகம் நோய்தானே.

**@ சிந்தியா! மனிதனை மிருகமாக்குபவை எவை?**

எம்.செபஸ்தியன், ஹட்டன்.

கோபம், இயலாமை, அநாதரவான தனிமை, வரம்பு மீறிய காமம்.

**@ சிந்தியா! ஒருவருக்குள் சுடலை ஞானம் பிறக்கிறது என்று சொல்வார்களே. அப்படி என்றால் என்ன?**

கு.சாலினி, காலி.

சுடலை ஞானம் என்பதை. பற்றுக்கள் அற்று வாழ்வதையும். உலக வாழ்வை முடித்துக் கொண்டு மரணத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதையும் கூறுகின்றார்கள். நூறில் ஒருவருக்கு சுடலை ஞானம் பிறக்கின்றது.

**@சிந்தியா! சந்திரிகா, ஷிராணி, அனோமா ஆகியோரின் கூட்டுப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ம.அபிஷன், வவுனியா.

அரசியல்ரீதியாக அவர்களின் கூட்டுப் பற்றி அலசுவதற்கு ஒன்றும் இல்லை. "மருண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய்" என்பது போல இவர்களின் சந்திப்புக்கள் இருக்கக்கூடும்.

**@சிந்தியா! சீதனம் வாங்கும் ஆண்கள் உழைப்பதற்கு லாயக் இல்லாதவர்களா?**

ச.சைந்தவி, கொழும்பு -15.

அதிகம் உழைக்கும் ஆண்களுக்கே அதிக சீதனம் கொடுப்பதை வசதியுள்ள பெண் வீட்டார் அவர்களது கௌரவமாக கருதுகின்ற காலம் இது.

உழைப்பே இல்லாதவருக்கு பெண் கொடுப்பதற்கே பின்நிற்கும் இக்காலத்தில் எப்படி சீதனமும் கொடுத்தார்கள்?

**@சிந்தியா! ரணிலுக்கு இந்திய மத்திய அரசு அவசர அழைப்புவிடுத்துள்ளதன் நோக்கம் என்ன?**

தி.அன்றனி, மன்னார்.

யாரை அழைத்தாலும் இலங்கை உடனான உறவு, அழைக்கப்படுபவருக்கு ஏற்றவாறு மாற்றப்படுவதில்லை. எனவே ரணில் விக்கிரமசிங்க அழைக்கப்பட்டிருப்பது இலங்கை தொடர்பான தற்போதைய சமிக்ஞையின் வெளிப்பாடே அன்றி வேறொன்றாக இருக்காது.

இன்னொரு வகையில் சொன்னால் இலங்கையை நட்பு நாடு அல்ல என்று அறிவிக்கக்கோரும் ஜெயலலிதாவுக்கு இந்திய மத்திய அரசு நடைமுறையில் சொல்லியிருக்கும் பதிலாகும்.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508



ஜோசெப் கிருஷ்ணா

# விளையாட்டு



## புதிய தோற்றம்


**இங்கிலாந்து** வீரர் வெய்ன் ரூணியின் மைதானக் குளறுபடிகள் மிகப் பிரசித்தம், பல தடவைகள் எச்சரிக்கைப்படும் இவர் பதினேழு மாதங்களுக்கு முன் மைதானத்தை விட்டே வெளியேற்றப்பட்டிருந்தார். ஆனால் தற்போது புதிதாகப் பிறந்ததுபோல ரூணி மாறிவிட்டார் என்று இங்கிலாந்து அணியின் தலைவர் ஸ்ரீவன் ஜெராட் புகழ்ந்து தள்ளுகிறார்.

காரணம் விளையாட்டின் மீது மட்டும் கவனம் செலுத்தும் இவர் அணியின் வெற்றிக்கும் காரணமாக அமைந்ததுதான். கடந்த, நடந்துமுடிந்த ஒவ்வொரு உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றுப்போட்டி ஆட்டத்திலும் இவர் தொடர்ச்சியாக கோல் போட்டு அசத்தியுள்ளார். பத்து வருடங்களுக்கு முன் டேவிட் பெக்கம் செய்த சாதனையை ரூணி சமன் செய்துள்ளார். அதோடு மொன்ரி நீக்ரோ நாட்டுக்கு எதிராக போடப்பட்ட ஒரேயொரு கோலைப் போட்ட வரும் இவரே.

இந்த கோலுடன் ரூணி இங்கிலாந்துக்காக முப்பத்தைந்து கோல்கள் போட்டு, இவ்வரிசையில் ஐந்தாவது வீரராகவும் இருக்கிறார்.

இங்கிலாந்து எதிர்கொண்ட தரவரிசை 28 ஐக் கொண்ட மொன்ரி நீக்ரோவுடன் மூன்று முறை மோதியும் இங்கிலாந்து இதுவரை வெற்றியைப் பதிவு செய்யவில்லை. முன்னர் வெம்ப்ளி மைதானத்தில் 0–0 என்று சமநிலை. 2012இல் 2–2 என்று பொட்கோரிகா (மொன்ரி நீக்ரோ) மைதானத்தில் சமநிலை. இந்த ஆட்டத்திலேயே ரூணி மைதானத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார். இன்று 2013 இலும் 1–0 என்று இதே மைதானத்தில் சமநிலை.

## விடாத தூவானம்



**மீண்டும்** விரும்பாத செய்திகள் உருகுவே மற்றும் லிவர்பூர் அணி வீரர் லூயிஸ் சுவாரெஸ் பற்றிக் கிளம்புகின்றன. அநாவசிய நிறவெறிக் கருத்துக்களால் ஐரோப்பிய வட்டகையில் அவப்பெயர் பெற்றவர் சுவாரெஸ். தற்போது இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த வரிசையில் உருகுவே எதிர் சிலி நாடுகளுக்கு இடையிலான போட்டியில் சிலி வீரர் கொண்சாலெஸ் ஜாராவுடன் ஏற்பட்ட மோதல் தொடர்பில் சுவாரெஸ் விசாரிக்கப்படவுள்ளார். முகத்தில் தாக்கப்பட்ட ஜாரா, சுவாரெசுடன் வாக்குவாதப்பட்ட இவரும் பதிலுக்கு வாக்குவாதப் பட்டிருக்கிறார்.

ஆனால் குழப்பத்தை முதலில் ஏற்படுத்தியவர் சுவாரெஸ் என்றவகையில் இவர் தண்டனையில் இருந்து தப்பித்துக்கொள்வது கடினமாகவே இருக்கும். பீபா கருத்துக் கூறும்போது, சகல தரவுகளையும் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். அதன்பின் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார். இதேவேளை இந்த ஆட்டத்தில் சுவாரெசின் உருகுவே அணி சிலியிடம் 2– 0 என்று தோற்றுவிட்டது. அதோடு முதல் நான்கு இடங்களைப் பெறும் தென் அமெரிக்க அணிகளே உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதி பெறும் என்ற நிலையில் உருகுவே ஆறாவது இடத்திலேயே இருக்கிறது. சுவாரெஸின் கோபத்தால் தோல்வியா, அல்லது தோற்றதால் கோபமா என்று தெரியவில்லை.

## கன்னிப் பருவத்திலே...



**பங்களாதேஷ்** – இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடருக்கு முன்னதாகவே, இன்றைய இரண்டு அணிகளின் தலைவர்களும் எதிரெதிர் அணித் தலைவர்களாகச் சந்தித்திருக்கிறார்கள். அது நடைபெற்றது 2005 இல். பங்களா தேஷில் நடைபெற்ற 19 வயதுக் உட்பட்ட முத்தரப்பு சுற்றுப் போட்டியில் இந்த இரண்டு நாடுகளும் மூன்றாவது நாடாக இங்கிலாந்தும் கலந்துகொண்டன. இறுதிப்போட்டியில் ரஹீமின் அணி கின்னம் வெல்ல, ஏஞ்சலோ மத்தியூசின் அணி இரண்டாம் இடம்பெற்றது. இப்பொழுது ஏறத்தாள எட்டு வருடங்களின் பின் இருவரும் தத்தமது நாட்டின் தேசிய அணித்தலைவர்களாகக் களம் கண்டிருக்கிறார்கள். இருவருமே அன்றும் சோடை போகவில்லை. இன்றும் சோடை போகவில்லை. இன்று இலங்கையில், முஷ்பிகுக் ரஹீம் இரட்டைச் சதம் போட்டு அசத்தியிருக்கிறார். மறுபுறம் ஏஞ்சலோ மத்தியூஸ் டெஸ்ட் போட்டியில் முதல் வெற்றிக் கனியைப் பறித்திருக்கிறார். இருவருக்குமே இனிமையான நினைவுகள்.

## இவருக்கில்லை வேலி



**நெதர்லாந்து** தேசிய உதைபந்தாட்ட அணி வீரரும், தற்போது மென்செஸ்ரர் யுனைட்டட் அணிக்காக விளையாடிக் கொண்டிருப்பவருமான றொபின் வன்பேர்ஸி மென்செஸ்ரர் அணியுடன் நீடிக்கவே விரும்புகிறார். அதாவது தனது தொழில்சார் உதைபந்தாட்டக் காலம் முடியும்வரை என்பதையே சொல்லாமல் சொல்கிறார். இந்தப் பருவத்தில் தன் அணிக்காக பத்தொன்பது கோல்கள் போட்டவர் இவர்.

இவரது மென்செஸ்ரர் யுனைட்டட் கழகத்துக்கான ஒப்பந்தம் 2016 இல் முடிவடைகிறது. அந்தவேளையில் இவர் 32 வயதை அடைந்திருப்பார். அந்த வயது, திறமையில் சரிவு ஏற்படும் காலம். ஆனால் எல்லோரும் சரிந்து விடுவதில்லை. இதே நம்பிக்கை வன்பேர்சிக்கும் இருக்கிறது. அதனால்தான் இளமையின் முதிர்ச்சியின் வீச்சு மென்செஸ்ரர் யுனைட்டட் நிர்வாகிக்கு நன்கு விளங்கும் என்று வன் பேர்ஸி ஊகிக்கிறார் போலத் தெரிகின்றது.

ஐரோப்பாவில் வயது கூடியவர்களை அணைத்து வெற்றி வாகை சூடும் அணிகள் சில உள்ளன. மென்செஸ்ரர் யுனைட்டட் போலவே ஏ.சி.மிலான், ஜுவென்ரஸ் போன்றவையும் மூத்தவர்களை அணைத்துக் கொள்பவர்கள்தான். ஆனால் எனது உதைபந்தாட்டக் காலம் முடியும்வரையும் மென்செஸ்ரர் யுனைட்டட் அணியுடனேயே இருப்பேன் என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார் வன்பேர்சி.

## இது கொடுமை



**1988** இல் சச்சினுக்கு வயது 15. வினோத் காம்ப்ளிக்கு வயது 16. இருவரும் சாரதாஷ்ரமம் வித்யா மந்திர் பள்ளி மாணவர்கள். இதே வருடம் பெப்ரவரி 23–25 தினங்களில் செயின்ட் சேவியர் கல்லூரிக்கு எதிரான போட்டி. சச்சின் நான்காவதாக களம் இறங்குகிறார். காம்ப்ளி மைதானத்தில் நிற்கிறார்.

முதல் நாள் இறுதியில் இருவரும் இரட்டைச் சதத்தை நெருங்கி இருந்தார்கள். மறுநாள் காலை டிக்ளேர் செய்யவேண்டும் என்பது பயிற்றுனர் ஆணை. ஆனால் அவரும் இல்லாத நிலையில் இவர்கள் தொடர்ந்து ஆட, விடயம் அறிந்த பார்வையாளர்களும் மைதானத்தில் குவிந்துவிட்டார்கள். இறுதியில் டிக்ளேர் செய்யும்படி வற்புறுத்தப்பட்ட மொத்த ஓட்ட எண்ணிக்கை 748. சச்சின் 326 காம்ப்ளி 349. இது அவ்வேளை கின்னஸ் சாதனை. பின்னர் 2006இல் சாதனை முறியடிக்கப்பட்டது வேறுவிடயம்.

இப்போது புதிய கதை என்னவென்றால், 1988 இல் இவ்விருவரும் அடித்த 664 ரண்கள் உலக சாதனை ஸ்கோர் சீட்டைத் தாருங்கள், 10 இலட்சம் ரூபா தருகிறேன் என்று அவுஸ்திரேலியர் ஒருவர் மும்பை ஸ்கூல் ஸ்போர்ட்ஸ் அஷோஷியேசனிடம் கேட்க, அவர்கள் அதற்குப் ப்திலாக அவை எல்லாம் எலி அரித்துப் பழுதாகிவிட்டன. எல்லாவற்றையும் எரித்துவிட்டோம் என்று பதில் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் இப்படி ஒரு கின்னஸ் சாதனை ஆவணத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணமிருந்தால் என்னிடமோ, சச்சினிடமோ தந்திருந்தால் நாங்கள் பாதுகாத்திருப்போம் என்று வருந்தியிருக்கிறார் காம்ப்ளி . சச்சின் படித்த பாடசாலை, அல்லது பி.சி.சி.ஐ. சிறிது அக்கறையாகக் செயற்பட்டிருந்தால் இதனைக் காப்பாற்றி இருக்கலாம். அல்லது Frame பண்ணி வைத்திருந்தால்கூட பாதுகாக்கப்பட்டிருக்கும். என்று கவலைப்படுகிறார்கள். இந்த விடயங்கள் எல்லாம் தமிழக வாராந்த 'கல்கி' இதழில் வெளியிடப்பட்ட கட்டுரை ஒன்றில் காணப்படுகிறது.

உண்மையிலேயே இந்த விடயத்தில் 1988இல் இந்த ஆட்டத்துடன் தொடர்புபட்ட யாருமே பொறுப்பாக நடக்கவும் இல்லை. அதன் முக்கியத்துவத்தை உணரும் sense கூட இவர்களிடம் இல்லாமற் போனது என்பது தான் உண்மை. ஒரு அற்புதமான வீரனின் உலக சாதனை ஆவணம் சாம்பலாகிப் போனதுதான் கண்ட மிச்சம்.




வணக்கமுங்கோ! ஜெனிவாவுக்குப் போயிட்டு வந்ததில இருந்து சம்மந்தமான வருக்கு ஒரே சளித் தொல்லையுங்கோ. சும்மாவே அவருடைய பழைய இஞ்சின் அடிக்கடி இந்திய ஆசுபத்திரிகளிலை போய் ரிப்பேயர் பார்த்துக் கொண்டு திரியுது. அதுக்கிடையில ஜெனிவாவுக்குப் போயிட்டு வந்ததில இருந்து மனிசன் இருமிக் கொண்டே இருக்குதுங்கோ.

சுமந்திரன் ஒண்டைச் சொல்லுது. சிறிதரன் ஒண்டைச் சொல்லுது. சுரேஷ் ஒண்டைச் சொல்லுது. மாவை ஒண்டைச் சொல்லுது எதுவுமே சனத்துக்கு புரிய மாட்டேன் எண்டுதுங்கோ.

பொய்யைச் சொன்னாலும் எங்கட சம்மந்தம் சொல்லிறதில ஒரு தாள லயம் இருக்குமெண்டிட்டு அவரிட்டையே போய் கேட்டனுங்கோ. தன்னைத் தேடி வந்ததில அவருக்கு சந்தோசம் தானுங்கோ.

முதலில பத்திரிகைக்காரர் எண்டதும் கோட் சூட்டோடைதானுங்கோ வந்தவர். ஏன் எண்டு கேட்டதுக்கு உங்க ஜெனிவாவில அடிக்கடி பிரஸ்காரரை சந்திக்கிற பழக்கதோஷத்தில வந்திட்டன் எண்டு சம்மந்தம் கோட்டை கழற்றி போட்டிட்டு சொல்லுங்கோ எண்டாருங்கோ.

சுத்தி வளைக்காமல் கேக்கிறன். ஜெனிவாவுக்கு போனியலே. போன நோக்கம் ஷக்ஸஸ்தானே?

ஷக்ஸஸ் எண்டு ஒரே எடுப்பில சொல்ல முடியாது. எண்டாலும் ஷக்ஸஸ்தான். அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேறி யிருக்காவிட்டால் நாங்கள் நாடு திரும்பியிருக்கமாட்டோம்.

நாடு திரும்பியிருக்காவிட்டால் உங்களுடைய பாராளுமன்ற பதவிகள் என்ன ஆகியிருக்கும்?

பதவிக்கு பாதகம் ஏற்படும் காலம்வரை நாங்கள் வெளிநாடுகளில் தங்கியிருந்திருக்க மாட்டோம். மெடிக்கல் கொடுத்து கொஞ்சம் கால அவகாசம் எடுத்திருப்போம்.

வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப் பட வேணும் என்று நீங்கள் சொல்லுறியள். அவர் சிறிதரன் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலால் தமிழ் மக்களுக்கு நன்மை ஏதும் ஏற்பட்டு விடாது எண்டு சொல்லுறார். என்ன விளக்கம். கூட்டமைப்பு ஒரு கட்டுக்கோப்பு இல்லாமல் இருக்குது எண்டு பலரும் சொல்லுறதை நீங்களும் அறிஞ்சிருப்பியள்.

அதற்கு மூலகாரணமான பேர்வழிகளில் முக்கியமானவராக இருப்பவர் வாத்தி சிறிதரன். அவர் யதார்த்தத்தை புரிஞ்சு கொள்ளுறாரில்லை. அவரின்ர சி.டி.க் கடை வியாபாரம் பாதிக்கப்பட்டதில கொஞ்சம் அப்செட் ஆகிட்டார். அதுகளை கூட்டமைப்பினர் கருத்துக்களாக தயவுசெய்து எடுத்துக் கொள்ளாதிங்கோ. ஏனெண்டால் அவர் வெளிநாடுகளிலை இருந்து உதவிப்பணமாக பெருந்தொகையை வேண்டியிருப்பது இப்போது தெரியவந்திருக்கிறது. அது கூட்டமைப்பின் பேரில பெறப்பட்டிருந்தாலும் அதற்கான கணக்கு வழக்குகளை அவர் காட்டவில்லை. அவர் மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்போது இதற்கும் சேர்த்து எடுப்பேன்.

அதென்ன ஹக்கீம் தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நேரமிது எண்டு சொல்லி இருக்கீங்களே ஏன்?

அப்படிச் சொன்னாலாவது அவர் அரசாங்கத்தை விட்டு விலத்துவார் எண்டுதான் சொன்னேன். ஆள் அசையமாட்டார் போல இருக்குது. அவர் திரும்பி கூட்டமைப்புக்கு இலங்கை அரசியலமைப்புக்கு கட்டுப்பட்ட பதவிகளை வைத்துக்கொண்டு தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை எண்ட கொள்கை முடிவை மீள்பரிசீலனை செய்யப்போறியளோ. இல்லாட்டில் பாராளுமன்றம் உட்பட. பிரதேச சபைகள் வரை முடக்கி வைத்திருக்கும் அரச பதவிகளை தூக்கி எறியிறியளோ எண்டு ஹக்கீம்பாய கேட்டுப்போடுவாரோ எண்ட பயமும் இருக்கத்தானுங்கோ செய்யுது. நீர் அவருக்கு போட்டுக் கொடுத்துப் போடாதேயும் புரியுதோ.

சரி தமிழக போராட்டங்களைப் பற்றி வாய் திறக்காமல் இருக்கிறியளே என்ன விசயம்?

உண்மையைச் சொல்லவேனுமெண்டால் அந்த போராட்டங்களுக்கும் எங்களுக்கு எந்தச் சம்மந்தமும் இல்லை. அது என்னைப் போல் அனுபவமானவர்களின் வழிகாட்டலோடு முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதில் நாங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பது வேதனை அளிக்கின்றது. ஆகையால் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருக்கின்றோம். அதனுடைய வளர்ச்சிப் போக்கைப் பார்த்து எந்த இடத்தில் எம்மைப் பொருத்திக் கொண்டு உரிமை கொண்டாட முடியுமோ அந்த இடத்தில் அதை நாம் செய்வோம்.

அப்படி ஒரு எழுச்சியை ஏன் உங்களால் இலங்கையில் முன்னெடுக்க முடியவில்லை. தூக்கினால் ஆயுதம். இல்லாவிட்டால் ஒன்றுமில்லை என்பது சரிதானா?

தம்பி ஜெனிவாவில இருந்து வந்ததில இருந்து கொஞ்சம் உடம்புக்குச் சரியில்லை. நீர் இத்தோடு முடிச்சுக் கொள்ளுமன். நாங்கள் இன்னொரு நாளைக்குப் பேசுவம். எண்டு நைசா எஸ்கேப் ஆகிட்டாருங்கோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**




**முசோலியின்** இளமைப் பருவம் ஏழ்மை. வெறுப்பு. புரட்சி இவற்றின் சூழ்நிலையிலேயே கழிந்தது. "நான் திருடனாகத்தான் இருந்தேன். யாருடனும் எதற்காகவும் சண்டையிடத் தயாராக இருந்தேன். தலையில் கல்லடிக் காயத்துடன் அடிக்கடி வீட்டுக்கு வருவேன். ஆனால் இக்காயங்களுக்கு எப்படிப் பழி வாங்கவேண்டும் என்பதை நான் அறிந்திருந்தேன்" என்று முசோலினி பின் நாளில் கூறி இருக்கிறார்.

ஹிட்லரைப் போலவே. தனது கசப்பான இளமைப் பருவத்துக்கு ஈடுசெய்ய பதவியைக் கைப்பற்றவும். புகழுக்காகவும் பாடுபட்டார் முசோலினி.

சிறு பையனாக இருக்கும்போது. பாராட்டையும் வெற்றியையும் பெற. மற்ற பையன்களோடு சண்டையிட்டார்.

இச்செயலில் மிகவும் கவனமாக. தன்னைவிட வயதில் சிறிய பையன்கள் மீதே தன்னால் வெற்றி கொள்ளமுடியும் என்று கருதும். பலமற்ற நோஞ்சான் பையன்கள் மீதே தன் ஆற்றலைக் காட்டுவார். இதே முறையைத்தான் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும் கையாண்டார். இத்தாலியோடு மோதுவதற்கு விரும்பாத பலமற்ற சிறு நாடுகளின் மீது எதியோப்பியா. அல்போனியா. கிரீஸ் போன்றவை - போர்தொடுத்து. வெற்றி பெற்றுப் பெருமையடித்துக் கொண்டார்.

முசோலினி எப்போதுமே ஒழிந்திருந்து தாக்குவதில் விருப்பமுடையவர். சிறு வயதில் ஏற்பட்ட பழக்கம் இது. பலசாலியான ஒரு பையன் இவரை அடித்துவிட்டானால் முசோலி 'கூரான தோல் கல்லுடன். புதரின் பின்னால் மறைந்து அந்தப் பையனின் வருகைக்காகக் காத்திருப்பார். அவன். இவர் ஒழிந்துள்ள புதரைத் தாண்டிச் செல்லும்போது. திடீரென்று வெளிப்பட்டு. அவன் சற்றும் எதிர்பாராத நிலையில் கூரான கல்லினால் தாக்கி அவன் முகத்தில் காயமுண்டாக்கிவிட்டு ஓடிப்போவார். பழி தீர்த்துக் கொண்ட திருப்தியோடு. இத்தாலியின் சர்வாதிகாரியாக ஆனபிறகும் முசோலினி இதுபோன்று முறை கேடான முறையில் போரிட்டு. வெற்றி பெற்று. தற்பெருமை அடித்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

(முற்றும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(04.04.2013 தொடக்கம் 10.04.2013 வரை)

## மேடம்

உணவு உண்ணுதல் மற்றும் நித்திரை போன்றவற்றில் கால தாமதம் ஏற்படலாம். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் உண்டாகும். தாய்வழிச் சொந்தபந்தங்களால் ஆதரவுகள் வந்துசேரும். புதியதாகக் கடன் வாங்க செய்த முயற்சிகளில் வெற்றிபெறச் சற்றுக் கால தாமதம் ஆகலாம். காணாமற்போன பொருட்கள் காவல்துறையினர்களால் திரும்பக் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர்கள் வரக் கூடும் என்பதால் கவனம் தேவை. உடம்பில் சளி. ஒவ்வாமை மற்றும் சீதளம் ஆகிய தொல்லைகள் வந்துபோகும். நீண்ட காலமாக இருந்துவந்த பிணிகளுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்கும்.

## இடபம்

குழந்தைகளால் பெயர். புகழ் ஏற்படலாம். உற்றார் உறவினர்களால் மனநிம்மதி இன்மையும் காரணமற்ற பொருட் செலவுகளும் உண்டாகும். அரசியல்வாதிகளால் சில எதிர்பார்க்காத ஆதாயங்கள் அடைவீர்கள். தாயின் உடல்நிலையில் ஏற்படும் பாதிப்புகளால் மருத்துவச் செலவுகள் வந்துசேரும். வடக்குத் திசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். நீண்டதூரப் பயணங்களின் மூலம் சந்திக்க வேண்டிய நபர்களை சந்திப்பதில் காலதாமதம் ஏற்படலாம். அரசியல்வாதிகள் மிகவும் எச்சரிக்கையுடன் பணி ஆற்றுதல் சிறந்ததாகும். தீராத பழைய வழக்குகளில் நல்ல முடிவுகளை எதிர்பார்க்கலாம். வராத கடன் கொடுத்து இருந்த பணம் திரும்பக் கை வந்துசேரும்.

## மிதுனம்

சொத்து விசயமான நாட்பட்ட வழக்குகளுக்குச் சாதகமான தீர்ப்புகள் கிடைக்கும். இதுநாள் வரையில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குடும்ப நன்மைகளுக்காகச் சகோதரர்களால் அனுகூலம் ஏற்படும். உடம்பில் வயிறு மூலம் சம்பந்தமான உபாதைகள் வந்துநீங்கும். வங்கிகளின் மூலமாக எதிர்பார்த்திருந்த கடன் உதவித் தொகைகள் கிடைத்து வீட்டைத் திருத்திக் கட்டுவதற்கு முயற்சிசெய்வீர்கள். நீண்ட காலக் கடன்களை அடைப்பீர்கள். மாணவர்கள் பாராட்டுக்களைப் பெறுவார்கள். பெண்களிடம் இரகசியமான விடயங்களைச் சொல்லாதீர்கள்.

## கடகம்

வெளிநாடு சென்றுவருதல் சம்பந்தமான முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்துசேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்ய எண்ணுவீர்கள். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகள் இடமாற்றம் ஏற்படலாம். செய்தொழிலில் புதிய கூட்டுமுயற்சிகளைத் தவிர்க்கவும். தேவையில்லாமல் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்க வாய்ப்பு உள்ளது. அடிமை ஆட்களால் பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். உறவினர்களின் வருகையால் பொருள்வரவு உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் கிடைக்கும்.

## சிங்கம்

காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். மிகுந்த பிரயாசையின் மேல் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளித்துக் கொள்வீர்கள். பிள்ளைகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். பிள்ளைகளால் தனவரவும், மனநிம்மதியும் உண்டாகும். ரேஸ், லாட்டரி போன்ற விசயத்தில் பணம், பொருள்களை ஏமாறாமல் இருக்கவும். பெண்கள் விஷயத்தில் கவனமாக இருக்கவும். கண்களில் கவனம் தேவை. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

நாட்பட்ட வழக்கு விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. தாய் தந்தையர்கள் உறவுகளில் வந்துள்ள பிரச்சினைகள் தீரும். வெளிநாடு செல்லுவதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்து சேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்ய முயற்சிகள் செய்வீர்கள். உத்தியோகத் துறையினர்களுக்கு பதவி உயர்வுகளுடன் கூடிய பணி இட மாற்றம் ஏற்படக் கூடும் எதிர்பாராத விருந்தினர்கள் வரவால் சில ஆதாயங்களை அடைய தென்திசையில் இருந்து பெண்களால் ஆதாயம் உண்டாகும்.

## துலாம்

விபரீதமான எண்ணங்களை விட்டுச் செயற்பாட்டில் கவனம் செலுத்துங்கள். விவசாயத்தில் புதிய முறைத் திட்டங்களின் மூலம் மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். வராத பணம் மற்றும் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும். பொதுப்பணிகளில் ஈடுபடுவோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். நண்பர்களின் உதவியால் புதிய தொழில் துவங்க போட்ட திட்டங்கள் தடையின்றி நிறைவேறும். குடும்பத்தில் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். குழந்தைகளுக்காக திடீர் மருத்துவ செலவுகள் ஏற்படும். வங்கிகளின் உதவியால் எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் தாமதமின்றி உடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## விருச்சிகம்

உடம்பில் மேகம், உஷ்ணம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். கணவன் - மனைவி உறவுகளில் கவனமுடன் இருத்தலோடு. முன்கோபம் தவிர்த்தல் நல்லது. வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்து சேரும். பிள்ளைகளால் பொருள் வரவு உண்டாகுவதுடன் அவர்களாலேயே காரணமற்ற பொருட்செலவுகளும் வந்துசேரும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமுடன் பேசிப் பழகவும். காதலர்களுக்கு திருமணம் நடைபெறும். விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் காலமாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

புதிய நண்பர்கள் சேர்கையால் எதிர்பாராத தனலாபம் அடைய வாய்ப்பு உள்ளது. செய்தொழிலில் பங்காளிகளால் எதிர்பார்த்த பணம் கைக்கு வந்துசேரும் காலமாகும். வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படலாம். இரும்பு இயந்திரம், பலசரக்கு, எண்ணெய் வகைகள், பழைய இரும்பு பொருட்கள் ஆகிய வியா-பாரம் செய்வோர்கள் நற்பலன் அடைவார்கள். தந்தை. மகன் உறவுகள் நன்றாக இருக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கையை தவிர்தல் நல்லது. திருமணம் போன்ற சுபகாரியங்கள் சம்பந்தமாக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

## மகரம்

இதுவரை இருந்து வந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி மனச் சந்தோசம் அடையலாம். பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன் வாங்குவீர்கள். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தங்களது தயாய் நாடு சென்று திரும்ப வாய்ப்பு உள்ள காலமாகும். உடம்பில் சுரம் உஷ்ணம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். காதல் விசயங்களில் மிகுந்த மனச் சந்தோசம் ஏற்படும். தீர்த்த யாத்திரைகள் சென்றுவர எண்ணுவீர்கள். நீண்டதூரப் பயணங்களின் போது பெரிய மனிதர்கள் சந்திப்பு ஏற்பட்டு அவர்களால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்

விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாக வாய்ப்பு உள்ளது. செல்வ செல்வாக்கு. புகழ் கூடும். புதிய வீடு. நிலம் வாகனங்களை வாங்கக் கூடிய காலமாகும். இது நாள் வரையில் இருந்து வந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி தேவையான பொருள் வரவு உண்டாகும். குலதெய்வ ஆலய வழி-பாடுகளைச் செய்து வருவதற்கான வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். பெரிய மனிதர்கள் சந்திப்பால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனமகிழ்ச்சி அடைய வாய்ப்பு உள்ளது.

## மீனம்

நண்பர்களால் புதிய தொழில் முயற்சிகள் மற்றும் புதிய கடன் வாங்குவது போன்ற முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் சம்பந்தமாக பிரயாணங்களை மேற்கொள்ளுவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும், பொருட் செலவுகளும் உண்டாலாம். வேண்டாத விசயங்களில் தலையிட்டுச் சிக்கலில் மாட்டிக் கொள்ளாது இருக்கவும்.


புதுவருடத்திற்கு மக்கள் வங்கியிடமிருந்து பெறுமதிமிக்க பரிசுகள்
புதுவருட சம்பிரதாயத்தின்படி நட்புணர்வோடு மக்கள் வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய,
ரூ.50,000/- சேமிப்புச் சான்றிதழுக்கு பெறுமதிமிக்க கேஸ் குக்கர் ஒன்று
ரூ.25,000/- சேமிப்புச் சான்றிதழுக்கு பெறுமதிமிக்க பிளெண்டர் ஒன்று
புதுவருட ஒற்றுமை
ரூ.10,000/- சேமிப்புச் சான்றிதழுக்கு பெறுமதிமிக்க சுவர்க்கடிகாரம் ஒன்று
ரூ.5,000/- சேமிப்புச் சான்றிதழுக்கு பெறுமதிமிக்க குடை ஒன்று
சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஒரு பரிசு
சுபவேளையில் புதுவருட கொடுக்கல் வாங்கல் பரிசுகளைப் பெற எம்மிடம் வாருங்கள்
திருக்கணித பஞ்சாங்கப்படி 13.04.2013 சனிக்கிழமை பின்னிரவு மணி 1.29இற்கும், வாக்கிய பஞ்சாங்கப்படி 13.04.2013 சனிக்கிழமை முன்னிரவு 11.58 மணிக்கு "விஜய" என்னும் புதுவருடம் பிறக்கிறது.
13.04.2013 இரவு 07.28 மணி தொடக்கம் பின்னிரவு 03.28 மணி வரையிலும்.
நீலநிறப் பட்டாடை அல்லது நீலக்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரம் அணிதல் நலம் தரும்.
15.04.2013 திங்கட்கிழமை மு.ப. 09.30 நிமிடத்தின் மேல் அல்லது 17.04.2013 புதன்கிழமை மு.ப. 10.30 நிமிடத்தின் மேல்.
14.04.2013 ஞாயிற்றுக்கிழமை இரவு 10.26 தொடக்கம் 11.50 வரையுள்ள சுபநேரம் அல்லது 15.04.2013 திங்கட்கிழமை 07.12 நிமிடம் வரையுள்ள சுபநேரத்தில்.
15.04.2013 திங்கட்கிழமை காலை 9.18 மணி தொடக்கம் 10.00 மணி வரை சுபநேரத்தில் பெரியோர்களைச் சந்திப்பது மேன்மை தரும். அல்லது 17.04.2013 காலை 6.07 மணி தொடக்கம் 7.16 மணி நேரமும் சிறப்பானது.
புதிய பூமிகளில் "விஜய" வருடத்தில் காலடி எடுத்து வைப்பவர்கள் 15.04.2013 திங்கட்கிழமை காலை 06.05 நிமிடம் தொடங்கி 07.01 நிமிடத்திற்குள் அல்லது 17.04.2013 காலை 11.08 நிமிடம் வரையுள்ள காலங்களில் பூமிதரிசனம் செய்வது மிகவும் நன்மையைக் கொடுப்பதாகும்.
AA- Brand Finance Rating, AA+ Fitch Rating
*நிபந்தனைகளுக்குட்பட்டது
இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனமாகும்.
www.peoplesbank.lk
மக்கள் வங்கி


பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில்
கித்துளக வருண 2013
கித்துளக வருண கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் - 2013
2013 ஏப்ரல் மாதம்
5ஆம் திகதி தொடக்கம் 07 ஆம் திகதி வரை
கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள சிங்கள கலாச்சார (சுஹசி) கட்டிடத் தொகுதியில் ( BMICH ற்கு முன்பாக)
தினமும் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை
சிங்கள தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு கித்துள் உற்பத்தியாளர்களிடமிருந்து உயர்ந்த தரத்திலும் சலுகை விலையிலும் கித்துள் உற்பத்திகளை பெற்றுக் கொள்வதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.
அனுமதி இலவசம்
ஊடக அனுசரணை
Industrial Development Board and
Ministry of Traditional Industries and Small Enterprise Development